Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஆடி 15 திங்கட்கிழமை (30.07.2012) | பக்கங்கள் 20 | ஓசை – 303

கபிஸ்னா கூல் பார் & உணவகம்




(C/1626)
யாழ்–கொழும்பு
A/C வான்சேவை
சந்நிதி வீதி,
பஸ் நிலையம் அருகாமை, அச்சுவேலி.
0773618014
0779361339
0213213021
















## வடக்கில் மீள்குடியேற்றம் இரு வாரங்களில் நிறைவடையும்

### கோத்தாபய நம்பிக்கை



(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் வடக்கில் இடம்பெயர்ந்த நிலையிலுள்ள மக்கள் அனைவரையும் மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் நிறைவடையும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மூன்று இலட்சம் மக்களில் 95 வீதமான மக்கள் இது வரையில் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இடம்பெயர்ந்த 50 சிறுவர்களை தாண்டிக்குளம் மற்றும் மன னார்

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாணத் தேர்தல் அடுத்த வருட ஆரம்பத்தில்

(கொழும்பு)

வட மாகாணசபைக்கான தேர்தலை 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, பெப்ரவரி மாத இறுதியில் அதாவது 26 ஆம் திகதியளவில் தேர்தலை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்தத் தேர்தலை அடுத்த வருடம் செப்ரெம்பரில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்த போதிலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமர்வுகள் அடுத்த வருடப் பிற்பாதியில் நடைபெறவுள்ளதன் காரணமாக முந்திக் கொண்டு தேர்தலை

(19) ஆம் பக்கம் பார்க்க

## பணிப்பாளருக்கு உடனடி இடமாற்றம்

### பகிஷ்கரிப்பு போராட்டம் இரத்து



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளருக்கு உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று ஆரம்பிக்கவிருந்த பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டுள்ளனர்.

வடமாகாண அரச வைத்தியர்களினால் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருடனான பிரச்சினையின் காரணமாக இன்று முதல் பகிஷ்கரிப்பினை மேற்கொள்வதற்கு அரச வைத்தியர்கள் திட்டமிட்டிருந்ததாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் நவீன் த சொய்சா தெரிவித்தார்.

எனினும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தென்பகுதிக்கு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

## அரியாலையில் காந்தி சிலை உடைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலைப் பகுதியில் உள்ள மகாத்மா காந்தி சிலை நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

அரியாலையிலுள்ள காந்தி சனசமூக நிலையத்திற்கு முன்பாக இருந்த மகாத்மா காந்தியின் சிலையே இவ்வாறு சேதப்படுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் யாழ். பொலிஸார் ஈடுபட்டு

(19) ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் – முஸ்லிம் மக்களுக்கு சம உரிமை வேண்டும்

### இல்லையேல் அரசுக்கு ஆதரவு இல்லை முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு வழங்க இருக்கும் உரிமைகள் அனைத்தும் முஸ்லிம் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் எனவும் அவ்வாறு வழங்கப்படாது போனால், அரசாங்கத்தில் இருந்து விலகி, தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக போராட நேரிடும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர், முதலமைச்சர் பதவியை முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்தால், அதனை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்காது என தெரிவித்துள்ள

(19) ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைத்தால்

### அரவணைத்துக் கொள்ள கூட்டமைப்பு தயார்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின் அங்கு ஆட்சி அமைக்கும் நிலை முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏற்பட்டு ஒரு முஸ்லிம் முதலமைச்சர் பதவியேற்றால் அவர்களுடன் தாராளமாக அரவணைத்து மாகாண ஆட்சியில் நல்ல பங்காளியாக செயற்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயார்ராக இருப்பதாக அதன் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைப்பதற்காக திருகோணமலை சிவன் கோவில் வீதியில் கடந்த சனிக்கிழமை மாலை மாகாண சபைத் தேர்தல் பிரசார கூட்டம் நடைபெற்றது.

இதன்போது சிறப்பு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், அரசாங்கம் எல்லா விடயங்களிலும் திட்டம் ஒன்றை வைத்தே செயற்பட்டு வருகின்றது.

மாகாண சபைகளுக்கு அதிகார பகிர்வு அவசியம் தேவை தானா என்பது பற்றி முழுமையாக மீள்பரிசீலனை செய்யப்படும் என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்திருக்கின்றது.

பெரும்பான்மையின சக்திகள் மாகாண சபை முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்றும் காணி

(19) ஆம் பக்கம் பார்க்க

## சூடு பிடிக்கிறது கிழக்கு தேர்தல் களம்

### முறைப்பாடுகளும் அதிகம்

(கொழும்பு)

கிழக்கில் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ள நிலையில் தேர்தல் சட்டத்தை மீறிய 25 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது. தேர்தல்கள் செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேர்தல் முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளும் பிரிவிற்கு இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவிக்கின்றார்.

011 2 877 620 மற்றும் 011 2 877 622 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாகவும் 011 2 877 620 மற்றும் 011 2 877 623 என்ற தொலைநகல் இலக்கங்களூடாகவும் தொடர்பினை ஏற்படுத்தி முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர பொலிஸ் அத்தியட்சகரின் கண்காணிப்பின் கீழ் விசேட பொலிஸ் பிரிவொன்று தேர்தல்கள் செயலகத்தில் இயங்கி

(19) ஆம் பக்கம் பார்க்க

## திருப்பி அனுப்புகிறது சுவிஸ்

(கொழும்பு)

சுவிற்சர்லாந்தில் அரசியற் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட மூன்று தமிழர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பொய்யான வாக்குமூலங்களை வழங்கி புகலிடம் கோருவோரை மீண்டும் அவர்களின் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்ப சுவிஸ் அரசாங்கம் தீர்மானித்த நிலையிலேயே, இந்த மூன்று தமிழர்களும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

சுவிற்சர்லாந்தின் பல்வேறு பகுதிகளிலும் தங்கியிருந்த 2000

(19) ஆம் பக்கம் பார்க்க

## விவசாயிகளை ஏமாற்றும் சந்தைத் தராசு

### கண்காணிப்பு அதிகாரிகள் உறக்கம்

(நெல்லியடி)

நெல்லியடி சந்தையில் விவசாயிகளிடம் பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது அங்கு எடை பார்க்க உபயோகிக்கும் தராசு விவசாயிகளால் சந்தைக்கு எடுத்துச் செல்லப்படும் அளவை விடக் குறைத்துக் காட்டுவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே விவசாயப் பொருட்களுக்கு பொருத்தமான விலை கிடைக்காத நிலையில் எடையைக் குறைக்கும் செயற்பாடுகளாலும் தாம் பாதிக்கப்படுவதாகவும் இதற்கு சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கேட்டுக்கொள்கின்றனர்.

· குறித்த சந்தை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (18)

# நீண்ட காலத்திற்கு பின்னர் மக்கள் வழிபாட்டுக்கு ஆலயம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு புராதன பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்கிய மண்டலாய்ப் பிள்ளையார் ஆலயம் மக்களின் வழிபாட்டுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆழியவளை மக்களின் கோரிக்கையாலும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக் கிணங்கவும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் துரித நடவடிக்கையினாலும் இராணுவத்தினரால் பக்தர்கள் வழிபடத் திறந்து விடப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக மக்களின் பாவனையில் இல்லாத ஆழியவளை இயக்கச்சி வீதியும் திறந்து விடப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திலிருந்து 512ஆவது இராணுவ முகாமும் முற்றாக அகற்றப்பட்டுள்ளது. இவ்வாலயம் சுனாமியாலும், யுத்தத்தினாலும் சேதமுற்று இருந்தாலும் விக்கிரகங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

அப்பகுதி மக்கள் தற்போது அங்கு சென்று வழிபாட்டில் ஈடுப்பட்டு வருகின்றனர். விரைவில் குருக்களையும் அமர்த்திப் பூசை செய்யவுள்ளதாகவும், இவ்வாலயத்தினைப் புனருத்தாரனம் செய்வதற்கு நிதியினை சம்பந்தப்பட்டவர்களுடன் கோரி நிற்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (116)

# கலந்துரையாடல்

வட மாகாண பாடசாலைகளில் உளசமூக இடையீடு மற்றும் ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் உளவளத் துணையாளர்களுக்கான செயற்றிட்ட மீளாய்வுச் செயலமர்வு இன்று காலை 8.30 மணியில் இருந்து மாலை 4 மணி வரை மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட மாகாணக் கல்வித் திணைக்களக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

உள மருத்துவப் பேராசிரியர் தயா சோமசுந்தரம் செயலமர்வில் கருத்துரைகளை வழங்கவுள்ளமையினால் சகல உளவளத் துணையாளர்களையும் இச் செயலமர்வில் கலந்து கொள்ள வேண்டுமென வட மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் மு. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (160)

# பெருங்குளம் அம்மனுக்கு நாளை தேர்த்திருவிழா

வேலணை பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் வருடாந்தத் தேர்த்திருவிழா நாளை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் தேர்த்திருவிழாவில் கலந்துகொள்ளவிருக்கின்ற அடியார்களினது போக்குவரத்து வசதிகளைக் கருத்தில் கொண்டு வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினர், தனியார் சிற்றூர்திச் சங்கத்தினரும் தங்களினது போக்குவரத்துச் சேவைகளை ஆலயம் வரை சென்று திரும்பி வருவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டிருக்கின்றனர்.

ஆலயத்திற்கு வருகின்ற அடியார்களது சுகாதாரம், பாதுகாப்பு, குடிதண்ணீர் போன்ற அன்றாட அவசியத் தேவைகள் என்பவற்றுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் அடியார்களுக்கு அன்னதான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக ஆலயப் பரிபாலனசபை அறங்காவலர் அறிவித்துள்ளார். (05)

# கும்பாபிஷேக மலர் வெளியீடு

(மண்டைதீவு)

மண்டைதீவு வேப்பந்திடல் வெளியீட்டுக் குழுவினரால் அந்த ஊர் மஹா முத்துமாரி அம்பாளின் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு கும்பாபிஷேக சிறப்பு மலர் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வைபவரீதியாக வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் கை.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைப் பீடாதிபதி திருநாவுக்கரசு வேல்நம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளும் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் தி. செல்வமனோகரன் ஆய்வுரையினையும் நிகழ்த்தவுள்ளார். (23)

# பாடசாலையில் கண்காட்சி

(வவுனியா)

வவுனியா காத்தார் சின்னக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கற்றல், கற்பித்தல் உபகரண கண்காட்சி நாளை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் திருமதி தஸ்நேவிஸ் திலகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. செ.அன்ரன் சோமராஜாவும் கௌரவ விருந்தினர்களாக சேவாலங்கா நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் க. இந்திரராஜூம், சிறப்பு விருந்தினர்களாக கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் செல்வி க.கந்தையா, கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ந.மாணிக்கவாசகம், வவுனியா நகர கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (160)

# உதைபந்தாட்டத்தின் இறுதி ஆட்டம் இன்று

யாழ்.உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தி வந்த ஜி.கே.குமரையா ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 4.00 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

11 பேர் கொண்ட விலகல் முறையிலான போட்டியில் இறுதியாக யாழ்.மாவட்டத்தின் முன்னணிக் கழகங்களான ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் என்பன மோதுகின்றன.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகஜி.ஆர்.ராஜசிங்கம், சிறப்பு விருந்தினராக சுங்க இலாகா உத்தியோகத்தர் கே. இரவீந்திரகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# வீட்டுக்கு யார் வந்தாலும் எச்சரிக்கை அவசியம்

(அச்சுவேலி)

அச்சுவேலியில் உள்ள வங்கி ஒன்றில் கடனைப் பெற்றவரின் கடனை அறவிட வந்த வங்கி ஊழியர் ஒருவர் வீட்டில் பயன்பாட்டிலிருந்த மேசைத் தொலைபேசியை வங்கிக்கு எடுத்துச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், குறித்த நபர் ஒருவர் வங்கியில் கடன் பெற்றிருந்தாகவும் அக்கடனுக்குரிய பெருமளவு தொகையை மீளச் செலுத்தியிருந்தாகவும், எஞ்சிய தொகை செலுத்தப்பட வேண்டி இருப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்தக் கடனை அறவிடுவதற்கு குறிப்பிட்ட நபரின் வீட்டுக்கு வந்த வங்கி ஊழியர் வீட்டில் கடன் பெற்றவர் இல்லாத வேளை வீட்டில் இருந்த அவரது தங்கையிடம் வீட்டு மேசைத் தொலை பேசியைக் கேட்டுப் பெற்றுள்ளார்.

அவரிடம் மேசைத் தொலைபேசியைக் கையளித்த போது அதனை அவர் வங்கிக்கு கொண்டு சென்றுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அவர் தொலைபேசியை எடுத்துச் சென்றதைத் தொடர்ந்து தொலைபேசி துண்டிக்கப்பட்டிருந்தது.

பின்னர் சுமார் 2.30 மணியளவில் குறித்த வங்கி முகாமையாளர் வீட்டாருடன் தொடர்பு கொண்டு இச்செயலுக்கு வருத்தம் தெரிவித்ததுடன், தொலைபேசியை மீள உடனடியாக ஒப்படைப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஆயினும், நேற்றுப் பகல் வேளை வரை அந்தத் தொலைபேசி உயரியவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. வங்கியின் இச்செயற்பாட்டினால் வங்கி வாடிக்கையாளர்கள் பலர் அதிருப்தி அடைந்திருப்பதுடன், ஒரு சிலரின் இவ்வாறான செயற்பாட்டினால் வங்கி மீது வாடிக்கையாளருக்கு இருக்கும் நன்மதிப்பு மழுங்கடிக்கப்படுவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

# கலாசாரப் பேரவை நிர்வாகக்குழு தெரிவு

(வடமராட்சி)

வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றத்.

இதன்போது, பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைவராகவும், இ.த.குலசிங்கம் உபதலைவராகவும், பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செ.செல்வசுகுணா செயலாளராகவும், மூத்த கலைஞர் யோ. இருதயராசா உப செயலாளராகவும், ஓய்வுநிலை வங்கி முகாமையாளர் க.சின்னராசா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், நிர்வாகசபை உறுப்பினர்களாக, இ.ஆழ்வாப்பிள்ளை, ந.அனந்தராஜ், பி.கிருஷ்ணானந்தன், ச.சந்திரதாஸ், சி.கிருஷ்ணமூர்த்தி, இ.ரகுவரன், ச.சசிக்குமார், சு.திருச்செல்வம், கோகுலவரதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (116)


# பண்ணிசையாளருக்கு பட்டமளிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பண்ணிசையினைக் கற்றுத் தேர்ந்த மாணவர்களுக்குப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் முதலாம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் அரசடி வீதி, கந்தர்மடம் பகுதியில் அமைந்துள்ளள ஸ்ரீ செல்வநாகபூசணி அம்பாள் ஆலயத்தில் காலை 8.00 மணிக்கு ஆலயப் பூசையும், அதனைத் தொடர்ந்து அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திருமறைப் பராயணமும், சோடசோபசார பூசையும் இடம்பெறவுள்ளது.

பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், அகில இலங்கை திருமறை மன்றம் நடத்தும் தேவாரப் பண்ணிசை வகுப்பில் கற்றுத் தேறிய மாணவர்களுக்கு திருநெறி தமிழிசை மாமணிப் பட்டமும், பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளன.

இந் நிகழ்வில் பங்குபற்றி நிகழ்வினைச் சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர்.






பண்ணிசை பாடும் சிறுவர்களின் தகுதிகாண் பரீட்சை நேற்றுக் காலை முதல் மதியம் வரை யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் சிவதொண்டன் நிலையம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் தாவடியூர் திருஞானசம்பந்தரிடம் பண்ணிசை பயின்ற 13 மாணவர்கள் பங்கு கொண்டனர். பண்ணிசைப் பரீட்சையின் போது பரீட்சகரையும், பங்குபற்றிய மாணவர்களையும் காணலாம்.

# வளமான கல்வியின் மூலமே சமுதாயத்தை கட்டியெழுப்பமுடியும்



(யாழ்ப்பாணம்)

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தினை கருத்தில் கொண்டு அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவசக் கல்வியை ஒவ்வொரு பிள்ளைகளும் பெறுவதை உறுதிசெய்து கொள்ள வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி.கமலேந்திரன் (கமல்) தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஏழாலை தெற்கு மயிலங்காடு ஞானகலா சனசமூகநிலையத்தின் 25 ஆண்டு நிறைவு விழாவும் ஞானகலா முன்பள்ளி விளையாட்டு விழா நிகழ்வும் நடைபெற்றது இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,


பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தினை கருத்தில் கொண்டு அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவசக் கல்வியை தமது ஒவ்வொரு பிள்ளைகளும் பெறுவதை உறுதிசெய்து கொள்வதுடன் கல்வியின்மூலமே வளமான ஒரு சமுதாயத்தினை கட்டியெழுப்பமுடியும் அத்துடன் ஈ.பி.டி.பி கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் 2012ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப் பட்ட நிதியில் இருந்து மயிலங்காடு ஸ்ரீமுருகன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஞானகலா சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கான நிதி ஒதிக்கீடு கூடிய விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், எமது தலைவரின் நடைமுறைக்குச் சாத்தியமான ஜனநாயகரீதியான இணக்க அரசியல் வழிமுறையினால் கடந்த 30 வருடமாக நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தினால் பாதிப்படைந்த தமிழ் மக்களுக்கான பல்வேறு வாழ்வாதார உதவித்திட்டங்கள் வேலைவாய்ப்புக்கள் துரித மீள்குடியேற்றங்களை முன்னெடுத்து மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பி வருவதுடன் தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பாக அரசுடன் கலந்தாலோசித்து வருகிறோம். தமிழ் தலைமைகள் கடந்தகாலத்தில் தமது சுயலாப அரசியல் நலனிற்காக அப்பாவி தமிழ் இளைஞர் யுவதிகளை யுத்தத்தை நோக்கி தவறான வழிமுறையில் நடத்திச்சென்று ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளின் அழிவிற்கு காரணமானவர்கள் இன்று நாட்டில் இடம்பெற்று வந்த கொடிய யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு தமிழ் மக்கள் இயல்பு வாழ்க்கைகு திரும்பிவரும் நிலையில் தமிழ் மக்களுக்கு நிலையான அரசியல் தீர்வுகிடைக்கும் பட்சத்தில் தமது சுயலாப அரசியல் நலனிற்கு பங்கமேற்படும் என கருதியவர்கள் தவறான பரப்புரைகளை வழங்கி தமிழ் மக்களை மீண்டும் கொடிய யுத்தத்தின் பால் வழிநடத்திச் செல்ல முனைவதாகவும் தமிழ்மக்கள் இது போன்ற அரசியல் அடிவருடிகளின் சுயலாப அரசியல் நலனிற்கு துணைபோகாது தமிழ் மக்களின் நலனை முன்நிறுத்தியதாக அரசியல் பணியினை முன்னெடுத்துவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிமுறையினை பின்பற்ற வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வலிதெற்கு பிரதேசசபை உறுப்பினர் சு.அரிகரன் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 1998ஆம் ஆண்டில் இருந்து யாழ்.குடா நாட்டில் தனது அரசியல் பணிகளை சிறந்த முறையில் முன்னெடுத்து வருவதோடு மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு யாழ்.குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அபிவிருத்திப் பணிகளை திறம்பட முன்னெடுத்து வருவதோடு நீண்டகாலமாக சொற்ப வேதனத்துடன் பணியாற்றி வந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பினை மேற்கொண்டுள்ளதுடன் மக்கள் எமது ஜனநாயக ரீதியான அரசியற் பணிகளுக்கு பூரண ஒத்துளைப்பு நல்கும்பட்சத்தில் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தொண்டராசிரியர்களின் நியமனம் சம்பளம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு எட்டப்படுமென தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வலிதெற்கு பிரதேசசபை உறுப்பினர் அரிகரன் வலிகிழக்கு பிரதேசசபை உறுப்பினர் ஜெயபாலன் (அன்பு) வலிதெற்கு பிரதேசசபை உறுப்பினர் ராஜசேகரன் ஸ்ரீமுருகன் பாடசாலை அதிபர் ஸ்ரீவரதன் சுன்னாகம் பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத் தலைவர் மெய்யழகன் மயிலங்காடு பிரதேச மக்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## நல்லூர் முருகனுக்கு இன்று 7ஆம் திருவிழா



### குமரன் வருகிறான் கூவுகுயிலே கூவு!

நல்லை வீதியில் வேலன் வருகிறான் கூவுகுயிலே கூவு
நாடும் அன்பர் துயரம் தீர்க்கவருகிறான் கூவுகுயிலே கூவு
வள்ளலான தெய்வம் வருகிறான் கூவுகுயிலே கூவு
வள்ளி தெய்வயானை சகிதம் வருகிறான் கூவுகுயிலே கூவு
தில்லைக் கூத்தன் சேயோன் வருகிறான் கூவுகுயிலே கூவு
தேசம் வாழும் நீதி சொல்லவருகிறான் கூவுகுயிலே கூவு
அல்லல் அறுத்து ஆள வருகிறான் கூவுகுயிலே கூவு
அஞ்சேலென அபயம் செய்யவருகிறான் கூவுகுயிலே கூவு

-காரை.எம்.பி.அருளானந்தன்-

### அற்புதம் வரமாகக் கிடைக்கிறது!

ஏழையின் மனம்போல் எளிமையாய் முருகன்
எழில் நல்லையில் எழுந்தருளும் அற்புதம்,
வாழையடி வாழையாக, வரமாகக் கிடைக்கிறது,
வரதட்சணைக் கொடுமைக்கு விடையோ இல்லையே?

ஒருரூபா எப்படி உன்னை உயரவைத்துள்ளது,
ஒருவருக்கும் இத்தாற்பரியம் புரியவில்லையே
பெருவாரி பணம், சொத்துக்களுக்கு அதிபதியாகி,
பேண முடியாது வாழ்வை பூச்சியமாக்குகின்றார்கள்.

-கே.எஸ்.சிவஞானராஜா-

### முத்தி நலம் பெறலாம்!

நல்லைக் குமரனை சித்தத்தில் வைத்திட
முத்தி நலம் பெறலாம்.
நால் வேதமும் போற்றும் நற்குருநாதனைத் தொழ
சாந்தி நிலை பெறலாம்.
வள்ளிக் குறமாதின் வள்ளலை உள்ளத்தில் வைத்திட
சித்தி நிலை பெறலாம்.
வேலொடு வந்திடும் பால முருகனை வேண்டிட
தீராத வினையகலும்.

-தொல்புரத்தூர்.க.லோகேஸ்வரன்-


கபிஸ்னா கூல் பார் & உணவகம்

திருமண சொகுசு கார்
ஹயேஸ் வான்
ஆட்டோ







சிற்றுண்டி வகை
குளிர்பான வகை
ஐஸ்கிறீம் வகை
அனைத்தையும் சுவையாக
உண்டு மகிழ

யாழ் – கொழும்பு
வான்சேவை செய்து தரப்படும்

0773618014
0779361339
0213213021

சந்நிதி வீதி,
பஸ் நிலையம் அருகாமை, அச்சுவேலி. (C/1626)


## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனையும், சமயச் சொற்பொழிவும், கலைநிகழ்ச்சிகளிலும் இன்று திருமுறை காட்டும் வாழ்வியல் என்னும் விடயம் பற்றி இந்து தர்ம ஆசிரியர் த.மனோஜ்குமார் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

கலைநிகழ்வுகளில் ஏழாலை ஆத்மஜோதி அறநெறிப் பாடசாலை, சுன்னாகம் சொர்ணவரதகாளி அம்பாள், நாரந்தனை தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.45 மணிக்கு திருமதி.குமுதா உமாகாந்தனின் பாட்டு இடம்பெறவுள்ளது.

இதில் அணிசேர் கலைஞர்களாக வயலின் கே.பத்மநாதன், மிருதங்கம் எஸ்.துரைராசா, கடம் ஏ.செல்வரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (60)

## நூலகக்கண்காட்சி

(தும்பளை)

பருத்தித்துறை நகராட்சி மன்ற நூலகத்தில் உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நூலகக்கண்காட்சியொன்று விரைவில் நடைபெறவுள்ளது.

கண்காட்சியில் நூல்களை காட்சிப்படுத்த விரும்பும் எழுத்தாளர்கள் தமது நூலின் இரண்டு பிரதிகளை வழங்கியுதவுமாறு கேட்கப்பட்டுள்ளார். (62)



பாசிக் நிறுவனத்தினால் ஜே/89,ஜே90 கிராம அலுவலர் பிரிவில் உள்ள கடற்றொழிலாளர்களின் தொழில் முன்னேற்றம் தொடர்பான கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை அரியாலை நாவலடி உதய முன்பள்ளியில் நடைபெற்றபோது நல்லூர் பிரதேச எதிர்க்கட்சி தலைவரும் நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி.அமைப்பாளருமான அ.இரவீந்திரதாஸன் மற்றும் பாசிக் நிறுவன உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துரையாடுவதைக் காணலாம்.

## வரலட்சுமி பூசைக்கு சென்ற பெண் எக்ஸிமா நோயைத் திருடினார்

(வேலணை)

யாழ்.கண்ணாதிட்டியில் உள்ள பெருமாள் ஆலயத்தில் நடைபெற்ற வரலட்சுமி விரத பூசை நிகழ்விற்கு சென்றிருந்த இளம் பெண் ஒருவரின் கால் செருப்பினை இன்னுமொரு பெண் திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கால் செருப்பினை களவு கொடுத்த இந்த இளம் பெண் தனது புதிய கால்ச் செருப்பினை கடலை விற்கும் பெண்ணிடம் பாதுகாப்பிற்காக கொடுத்திருந்தார். அவ்வாறு ஏனைய பல பெண்களும் தங்களினது கால் செருப்புகளை அந்தக் கடலை விற்பனை செய்யும் பெண்ணிடம் பாதுகாப்பிற்காக கொடுத்து விட்டு சென்றிருந்தனராம்.

மேற்கூறப்பட்ட இளம் பெண் சுவாமி தரிசனம் செய்து முடித்த பின்னர் வந்து செருப்பினை தேடியபோதுகால் செருப்பினை வேறோரு பெண் எடுத்துச் சென்றுவிட்டதாக கூறிய கடலை விற்ற பெண் கால் செருப்பினை எடுத்த பெண்ணைப் பற்றி கூடாத வார்த்தைகளால் ஏசியதை அவதானிக்க முடிந்தது. செருப்பினை களவு கொடுத்த இளம் பெண்னின் காலில் பலவிதமான நோய்த்தாக்கமுள்ள எக்ஸிமா நோய் இருப்பதாகத் தெரிவிக்கப்படுவதால் காற் செருப்பினை திருடிச் சென்ற பெண் செருப்பினை திருடியதுடன் எக்சிமா நோய் காவியையும் திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (05)

கண் பார்வையற்றவன் குருடன் அல்ல. தன் குற்றம் குறையை உணராமல் எவன் இருக்கிறானோ அவனே சரியான குருடன். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## அவரவர் இன மேன்மைக்கு ஆராய்ச்சி!

உங்களுக்கு அறிவியலில் ஆர்வமிருந்தால் ஸ்டீபன் ஜே கௌல்ட் அறிமுகமான ஒருவராக இருப்பார். மனிதனின் பிறப்பே அவனது இயல்பையும் அவனது சமூகத்தின் இருப்பையும் தீர்மானிக்கிறது என்ற கோட்பாட்டுக்கு எதிராகக் கொடி பிடித்தவர் அவர். சமுதாயத்தில் உள்ள வெவ்வேறு சமூக குழுக்களுக்கு இடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை இந்தக் கோட்பாடு நியாயப்படுத்துகிறது என்று அவர் நம்பினார். இதைப் பற்றி ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார் கௌல்ட்.

சாமுவேல் ஜோர்ஜ் மோர்டன் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மருத்துவர். அவர் உலகெங்கிலும் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மண்டையோடுகளை வரவழைத்து அவற்றின் கனபரிமாணங்களை மதிப்பிட்டார். தன் ஆய்வுகளின் முடிவுகள் வெள்ளைக்காரர்களின் மண்டையோடுகள் மற்ற மண்டையோடுகளை விடப் பெரியதாகவும் கொள்ளளவு கூடுதலாகவும் உள்ளதால் வெள்ளையர்களுக்கே மூளை அதிகம் என்று நிரூபிப்பதாக அவர் சொன்னார். அமெரிக்காவில் அடிமை முறையை ஆதரித்தவர்களுக்கு இந்த ஆய்வு வரப்பிரசாதமாக இருந்தது. கறுப்பர்களை எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்பதை ஆதாரபூர்வமாக அறிவியலின் அடிப்படையில் வரையறை செய்ததாக அவர்கள் மோர்டனைப் பாராட்டினர்.

கௌல்ட் இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இப்படிப்பட்ட நிற, இன, பெருமை பேசும் கோட்பாடுகள் எப்படிப்பட்ட அழிவுகளுக்குக் காரணமாகி இருக்கின்றன என்பதை உணர்ந்தவர். மற்ற இனத்தவரை விடத் தாங்கள் மேம்பட்டவர்கள் என்ற எண்ணமே சண்டைகளையும் சர்ச்சைகளையும் தீரவிடாமல் பகையைப் பொங்கவைத்து வரும் நிலையில், இந்த மண்டையோட்டு ஆராய்ச்சி மனிதனிடம் மேலும் கொலைக் கருவிகளை வழங்குவதை அறிந்தார். தானும் இதுகுறித்த ஆராய்ச்சியில் இறங்கினார்.

ஜோர்ஜ் மோர்டனின் மண்டையோடுகளை எடுத்து தானும் அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தி, மோர்டன் அவை அனைத்தையும் அளந்து பார்க்கவில்லை, வயது, பாலினம், உயரம் போன்ற எதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் தனக்குத் தேவைப்பட்ட வகையில் மண்டையோடுகளைத் தேர்ந்தெடுத்து தவறான முறையில் ஆய்வு செய்து அதன் அடிப்படையில்தான் இந்த முடிவுக்கு வந்தார், எனவே அறிவியலில் மனச்சாய்வு ஆபத்தானது என்பதற்கு ஆதாரமாக இந்த முடிவையும் இதுபோன்ற பிற பிழைப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளையும் சுட்டிக்காட்டினார் கௌல்ட்.

தன் புத்தகத்தை விரிவாக எழுதினார். அதில் அவர் பதினெட்டாம் மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தங்கள் பண்பாடுகளே உயர்ந்தது என்ற மனச்சாய்வின் காரணமாக ஆய்வுகளில் எப்படிப்பட்ட தவறுகளைச் செய்தார்கள், அதனால் எத்தகைய பிழை முடிவுகள் ஏற்பட்டன, அவற்றைக் கொண்டு தங்கள் நம்பிக்கைகளையும் தங்கள் பண்பாட்டில் நிலவும் நம்பிக்கைகளையும் எப்படி நியாயப்படுத்தி வலுவாக்கிக் கொண்டார்கள் என்று எழுதியிருக்கிறார். அறிவியலிலும் அவரவர் இனம், நிறம், மொழி, கலாசாரங்களுக்கேற்ப மனச்சாய்வுகள் இருக்கும். அவை அந்த முடிவுகளிலும் பிரதிபலிக்கும் என்று எடுத்துக்காட்டியதே கௌல்டின் முன்னோடித்தன்மை. பின்னர் அவரே பண்பாட்டு மனச்சாய்வுகளுக்கு அப்பாற்பட்டவரா என்ற கேள்வியை பின்வந்தோர் எழுப்பியது வேறுகதை.

இனப் பெருமையையும் மேன்மையையும் தங்கள் கொடியாகத் தூக்கிப் பிடித்தபடி மக்களைப் பகையாளிகளாய் எதிரெதிரே நிறுத்தி, அந்த அழிவுப்பாதையில் அரசியல் செய்து குளிர் காய்பவர்கள் எப்போதும் இருந்துகொண்டு தானிருக்கிறார்கள்!

- ஆசிரியர்

# நயினாதீவு மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்

(கொழும்பு)

நயினாதீவில் பல மாதங்களாக குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. கிணறுகளில் தண்ணீர் வறண்டுவிட்டது. இதனால் இக்கிராமத்து மக்கள் குடிதண்ணீருக்கு பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

இதனை தெரிந்துகொண்ட நயினாதீவு புலம்பெயர்வாழ் சுவிஸ் மக்கள் 3 இலட்சம் ரூபாவை நயினாதீவு உப தபாலகத்துக்கு (வேலணை பிரதேச சபை) நன்கொடைகளாக வழங்கி நயினாதீவு மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க முன்வந்துள்ளனர்.

வேலணை பிரதேச சபை நயினாதீவு சபை அலுவலக ஊழியர்களினால் பவுசர் மூலம் சாட்டியிலிருந்து கொண்டுவரப்பட்ட குடிநீரைப் படகுகளில் தண்ணீர்த் தாங்கி வைத்து நிரப்பி நயினாதீவுக்கு எடுத்து வந்து பின் சுத்திகரித்து இங்குள்ள குடிதண்ணீர் தாங்கியில் நிரப்பி மக்களுக்கு பரவலாக விநியோகித்து வருவதை அவதானிக்க முடிந்தது. இந்தப் பணியை சிரமங்களுக்கு மத்தியில் இவர்கள் செய்வதை மக்கள் மனமாரப் பாராட்டியதையும் காணக்கூடியதாகவிருந்தது.

மேலும் நயினாதீவு மக்களுக்கு ஒவ்வொரு வருடமும் குடிதண்ணீருக்கு என ஒரு தொகை நிதி ஒதுக்கீடு செய்வது வழமை. 2011 ஆம் ஆண்டு வேலணை பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி இதுவரை கிடைக்கவில்லை.

ஆனால் நயினாதீவு உப அலுவலகம் இந்த நிதிக்குரிய குடிதண்ணீரை மக்களுக்கு வழங்கியுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(175)

## வீதிப்புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

(நயினாதீவு)

தீவகம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட 50 கிலோமீற்றர் நீளமான வீதி தார் வீதியாக புனரமைப்பதற்கு இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவனத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் சி.ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார்.

மண்டைதீவு, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, போன்ற இடங்களில் உள்ள வீதிகள் இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளதாகவும், முன்னதாக இவ்வீதி புனரமைக்கப்படாது இருந்த நிலையில் இவ்வீதியை புனரமைக்குமாறு பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் தாம் வலியுறுத்தியதாகவும் இதனை அடுத்தே இவ்வீதிகள் புனரமைககப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (175)

## தேர்தல் முறைகேடு இடம்பெறுவதாக கூட்டமைப்பினர் முறைப்பாடு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த சிலரால் தேர்தல் சட்ட விதிகள் மீறப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராஜா குற்றம் சாட்டுகின்றார்.

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தான் கலந்துகொள்ளும் அரசாங்க பொது வைபவங்களில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஆளும் கட்சியைச் சேர்ந்த இரண்டு வேட்பாளர்களுடன் கலந்து கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராஜா கூறுகின்றார்.

தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, திகதி அறிவிக்கப்பட்டு ஒரு வார காலத்திற்குள் ப்பிடிருப்பு தொகுதியிலுள்ள இரண்டு பாடசாலைகளில் புதிய கட்டட வேலைகளை ஆரம்பிக்கும் வைபவங்களில் கலந்துகொண்ட பிரதி அமைச்சருடன் குறித்த இரண்டு வேட்பாளர்களும் கலந்து கொண்டதாகவும் கூறும் அவர், இந் நிகழ்வுகளில் அவர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் கூறுகின்றார்.

இது தேர்தல் விதிமுறைகளுக்கு முரணானது என்று கூறிய அவர், தமது கட்சியின் தலைமைப்பீடம் இதனை தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டுவர விருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படல் மற்றும் அச்சுறுத்தல்கள் உட்பட இதுவரை 8 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கபே என்னும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம்.ஏ.மனாஸ் கூறுகின்றார்.

ஏறாவு,ர் தபால் நிலைய கட்டடத்தின் மேற்பகுதியை தொடர்ந்தும் பாவித்து வரும் முன்னாள் மாகாண அமைச்சரொருவர் அதனை தேர்தல் பிரசார அலுவலகமாக பாவிப்பது பற்றி தமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்றும்,

சுயேட்சைக் குழுவொன்றிற்கு தலைமை வேட்பாளராகப் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி கதிர்காமருக்கு எச்சரிக்கைக் கடிதமொன்று கிடைத்தமை பற்றியும் தமது கவனத்திற்கு வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## குப்பைகள் தேக்கம் நோய் பரவும் அபாயம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் தற்காலிகமாக இயங்கும் பொதுச்சந்தையின் உட்புறங்களில் குப்பைகள் தேங்கிக் கிடப்பதால் நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக சந்தைக்கு வரும் பொதுமக்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக சில மரக்கறி வணிக நிலையங்களுக்கருகில் உள்ள மூலைகளுக்குள் குப்பைகள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதோடு அவை அவ்விடத்திலிருந்து அகற்றப்படாமல் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (138)

## சட்டவிரோத ஆயுதம் செட்டிகுளத்தில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா செட்டிகுளப்பகுதியில் உள்ள காட்டுப்பிரதேசத்தில் இரண்டு இடியன் துவக்குகள் வவுனியா பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவத்தின் போது இரண்டு சந்தேக நபர்களும் வவுனியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. நேற்று யாழ். விசேட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (பா)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கற்பித்தல் தேசிய டிப்ளோமா சர்ன்றிதழ் வழங்கும் வைபவம் ஆக்ஸ்ட் மாதம் 15 ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை இரு அமர்வுகளாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது அமர்வில் 2005/2007, 2006/2008 ஆம் கல்வி ஆண்டுகளில் கற்பித்தல் தேசிய டிப்ளோமா பாடங்களை பயின்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும், மாலை 2.00 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது அமர்வில் 2007/2009, 2008/2010 ஆம் கல்வி ஆண்டுகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடங்களை பயின்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளதாக யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

(160)

# தமிழ் கூட்டமைப்பும் நெல்லியடிப் போரட்டமும்

**செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்து பல்வேறு தில்லு முல்லுகளை செய்த சிறீதரன் பின்னர் புலிகள் இயக்கத்தின் முக்கிய ஆலோசகர் போன்று தன்னைக் காட்டிக்கொள்ள முற்பட்ட போதிலும் புலிகள் இவரைக் கணக்கில் எடுக்கவே இல்லை. வன்னியில் கடுமையாக யுத்தம் நடந்துகெண்டிருந்த பொழுது விசுவமடுவிற்குள் படையினர் வருவதற்கு முன்னரே அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சிறீதரன் தப்பி ஓடி வந்து விட்டார். தற்போது முள்ளிவாய்க்காலின் இறுதி யுத்தத்தை நேரில் கண்டவர் போன்றும் அதில் தானும் அகப்பட்டு பல்வேறு இன்னல்களை சந்தித்தவர் போன்றும் கதைகள் சொல்லி வருகின்றார். யுத்தப்பிடிக்குள் அகப்படாமல் தந்திரமாக தப்பி வந்த சிறீதரன் பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் கிளிநொச்சியில் இருந்து வருகின்றோம் என்று கூறிக்கொண்டு பசில் ராஜபக்ஷவை சந்தித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஊடாக பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு தனக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என கோரினார். அதற்கு பசில் ராஜபக்ஷ மறுப்புத் தெரிவித்ததை அடுத்தே, சுரேஸ் உட்பட பலரின் காலில் விழுந்து பாராளுமன்ற உறுப்பினராகியது இவரின் தனிவரலாறு.**

- த.கடலவன்

வவுனியா சிறைச்சாலையில் வைத்து தாக்கப்பட்டு பின்னர் இறந்த நிமலரூபனின் கொலையைக் கண்டித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் நடத்தப்பட்ட அரச எதிர்ப்பு போராட்டம் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரிடையே குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

இப்போராட்டத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளக் கூடாதென கூட்டமைப்பின் தலைவர் இ.ரா.சம்பந்தனும் சுமந்திரனும் அறிவித்திருந்த போதும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், தலைமையை மதிக்காமல் இதில் கலந்து கொண்டிருந்தார். இதனால் கடுமையாக சினம் அடைந்துள்ள அரசாங்கத்தின் செல்லப் பிள்ளையான சுமந்திரன் சிறீதரனைக் கட்சியில் இருந்து நீக்குமாறு சம்பந்தனிடம் கூறியுள்ளதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலைமை இந்தளவு தூரத்துக்கு செல்லும் என்பதை உணர்ந்திராத சிறீதரன் தற்போது மாவை. சேனாதிராசாவிடம் மண்டியிட்டு தன்னை தலைமையின் கெடுபிடிப் போக்கில் இருந்து காப்பாற்றுமாறு மன்றாடியுள்ளாராம். இதற்கு மாவை. சேனாதிராஜா இயன்றவரை தான் தலைமையுடன் கதைத்து இந்த நெருக்கடியில் இருந்து பாதுகாப்பதாக உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு கூட்டமைப்புக்குள் குழப்பங்கள் அதிகரித்துக் கொண்டு இருக்க, கூட்டமைப்பில் முன்பு இருந்தவர்களான தமிழ் தேசிய மக்கள் முன்னணியோ இவ்வாறான போராட்ட நடவடிக்கைகள் மூலம் கூட்டமைப்பினரின் செல்வாக்கை உடைத்து வருகிறார்கள். தேர்தல் ஒன்றைத் தவிர வேறெந்த மக்கள் பிரச்சினைக்குமென கூட்டமைப்பினர் மக்களிடம் வருவதில்லை என்பதை உணர்த்தி வருகிறார்கள். மறுபுறம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் தங்களை புலிகளின் குறியீடுகள் போன்று காட்டிக் கொள்ள முற்பட்டாலும் தமிழ் மக்கள் இவர்களின் உண்மையான முகங்களை நன்கு அறிந்தே இருக்கிறார்கள்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினால் நெல்லியடியில் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது புலிக்கொடியுடன் மோட்டார் சைக்கிளில் வட்டமிட்டவர்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் எந்தவித முறைப்பாடும் செய்யப்படவில்லை. அவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டு மோட்டார் சைக்கிள் இலக்கம் கொடுக்கப்படுமிடத்து சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படுவார்கள் என யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது ஊடகவியலாளர்களினால் புலிக்கொடி விவகாரம் தொடர்பாக சரமாரியாக கேள்விகள் எழுப்பப்பட்டது. ஆரம்பத்தில் மழுப்பலாக பதிலளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ.குகநேசன் ஆகியோர் பின்னர் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை கொடுத்தால் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்யமுடியும் என்றனர். இருப்பினும் புலிக்கொடியுடன் நான்கு மோட்டார் சைக்கிளில் கறுப்புநிற தலைக்கவசம் அணிந்தபடி ஆர்ப்பாட்டத்தை குழப்பும் வகையில் பயணித்தவர்களை பொலிஸார் ஏன் கைது செய்யவில்லை என ஊடகவியலாளர்கள் தொடர்ந்து கேள்வியெழுப்பினர். இதற்கு பொலிஸார் சிறிது நேரம் மௌனமாக இருந்தனர். பின்னர் முறைப்பாடு செய்யாமல் நடவடிக்கை எடுக்க முடியாது என மழுப்பலாக பதிலளித்தார் பிரதிப் பொலிஸ்மா அதிபர். இந்நிலையில் கடந்தகாலத்தில் புலிக்கொடி வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரிலும் கைத்தொலைபேசியில் புலிகள் இயக்கப் பாடல்கள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரிலும் கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்ட பின்னரா கைதுசெய்யப்பட்டனர் எனவும் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இவ்வாறு சந்திப்பின்போது கடந்த 18ஆம் திகதி நெல்லியடி பஸ்நிலையம் முன்பாக நடத்தப்பட்ட இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின்போது புலிக்கொடியுடன் மோட்டார் சைக்கிளில் நடமாடிய மர்ம நபர்கள் தொடர்பான விவகாரம் தொடர்பாக சரமாரியாக கேள்வி



தொடரப்பட்டது.இதே வேளை புலிக்கொடி விவகாரம் தொடர்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் கஜேந்திரன் புலிக்கொடியை தனது உயிரிலும் மேலாக கருதுவதாக முன்னர் அடிக்கடி புலிகள் இயக்கம் இருந்தபோது கூறிவந்தார். ஆனால் தற்போது அதே புலிக்கொடி - அவர் நேசித்ததாக கூறும் புலிக்கொடி - பறக்கவிடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொலிஸ் நிலையத்தில் வழக்குப் பதிந்துள்ளமை வேடிக்கையாக உள்ளதாக சிலர் கூறுகின்றனர்.

இதேவேளை கஜேந்திரன் அணியினரால் நெல்லியடியில் நடத்தப்பட்ட போராட்டம் காரணமாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் பெரும் குழப்பத்திற்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பாக இப்போராட்டத்தின் மூலம் தமது பலம் குறைந்து கஜேந்தினர் அணியினரின் பலம் மேலோங்கிவிடுமோ என்ற அச்சம் கூட்டமைப்பினர் இடையே ஏற்பட்டுள்ளது. தேர்தலுக்காக வசனங்கள் பேசிக்கொண்டிருப்பதைத் தவிர, வேறு எந்த ஜனநாயகப்போராட்டங்களையும் அவர்கள் நம்பிக்கையோடு முன்னெடுக்காதிருப்பது குறித்த கேள்விகளையும் மக்கள் மத்தியில் எழுப்பிவிட்டுள்ளது.

கஜேந்திரனை கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றியது போன்று சிறீதரனையும் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற விவாதம் கூட்டமைப்பில் தற்போது ஏற்பட்டுள்ளது. கூட்டமைப்பிற்கு வருவதற்குரிய தகுதி சிறீதரனிற்கு இருக்கவில்லை என்றும் புலிகள் இயக்கத்தின் தளபதியாக இருந்த தீபனின் மைத்துனர் என்ற ஒரே காரணத்தைவைத்து சுரேஸ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பிற்குள் தனது கட்சி சார்பாக ஆரம்பத்தில் சிறீதரனைக் கொண்டு வந்ததாகவும் பின்னர் சுரேசின் காலையே சிறீதரன் வாரிவிட்டு மாவை [illegible] மண்டியிட்டு தன்னை தமிழ [illegible] யின் மூத்த உறுப்பினர் பே[illegible]

தற்போது கூறிவருவது வேடிக்கையாக இருப்பதாக, சுவிஸ் நாட்டில் இருந்துவிட்டு தற்போது கிளிநொச்சியிலுள்ள தனது வீட்டைப் பார்வையிடுவதற்காக வந்துள்ள கிளிநொச்சியைச் சேர்ந்த தம்பிராசா மாஸ்ரர் குறிப்பிட்டார்.

இவர் மேலும் தெரிவிக்கையில் சிறீதரனை ஆரம்பத்திலிருந்து தனக்குத் தெரியும் என்றும் செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்து பல்வேறு தில்லு முல்லுகளை செய்த சிறீதரன் பின்னர் புலிகள் இயக்கத்தின் முக்கிய ஆலோசகர் போன்று தன்னைக் காட்டிக்கொள்ள முற்பட்ட போதிலும் புலிகள் இவரைக் கணக்கில் எடுக்கவே இல்லை. தீபனின் மைத்துனர் என்பதைவிட இவரிடம் மேலதிக தகுதிகள் எவையும் இருப்பதாக தான் கருதவில்லை என தம்பிராசா மாஸ்ரர் தெரிவித்தார். சிறீதரன் வன்னியில் கடுமையாக யுத்தம் நடந்துகெண்டிருந்த பொழுது விசுவமடு விற்குள் படையினர் வருவதற்கு முன்னரே அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தப்பி ஓடி வந்து விட்டார். தற்போது முள்ளிவாய்க்காலின் இறுதி யுத்தத்தை நேரில் கண்டவர் போன்றும் இவ் இறுதி யுத்தத்தில் தானும் அகப்பட்டு பல்வேறு இன்னல்களை சந்தித்தவர் போன்றும் கதைகள் சொல்லி வருகின்றார்.

ஆனால் யுத்தப்பிடிக்குள் அகப்படாமல் தந்திரமாக தப்பி வந்த சிறீதரன் பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் கிளிநொச்சியில் இருந்து வருகின்றோம் என்று கூறிக்கொன்டு பசில் ராஜபக்ஷவை சந்தித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஊடாக பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு தனக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என கோரிய பொழுது பசில் ராஜபக்ஷ மறுப்புத் தெரிவித்ததை அடுத்து சுரேஸ் உட்பட பலரின் காலில் விழுந்து பாராளுமன்ற உறுப்பினராகியது இவரின் தனிவரலாறு.

இவ்வாறு கஜேந்திரனும் புலிகள் கடுமையான ஆட்சேர்ப்பில் வன்னியில் ஈடுபட்ட பொழுது, "அனைத்து இளைஞர்களும் ஆயுதம் ஏந்த வேண்டும். 30ஆயிரம் சவப்பெட்டிகளை படையினரின் உறவுகளிற்கு அனுப்ப வேண்டும்" என்று கூறிக்கொண்டு தனது சகோதரனாகிய ரவி என்பவரை சர்வதேச தொண்டுநிறுவனம் ஒன்றின் வாகனத்தில் ஏற்றி பக்குவமாக படைக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அனுப்பிவைத்த வரலாற்றை வன்னி மக்கள் என்றைக்குமே மறக்க மாட்டார்கள்.

தமிழ் மக்களிற்காக போராடுகின்றோம் என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களின் துன்பங்கள், துயரங்கள் எதிலுமே பங்கெடுக்காமல் தங்களது சுய அரசியலிற்காக நடத்தப்பட்ட போராட்டமே நெல்லியடிப் போராட்டம் ஆகும். நிமலரூபனிற்காக தற்போது கண்ணீர்விடும் கூட்டமைப்பினரும் கஜேந்திரன் மற்றும் கஜேந்திரகுமார் போன்றவர்களும் நிமலரூபனின் தாயாரைச் சந்தித்து ஏதாவது உதவி செய்தார்களா? கொழும்பில் இருந்து நிமலரூபனின் தாயார் வவுனியா வருவதற்கு பணம் இல்லாமல் நின்ற பொழுது மனோகணேசன் மட்டுமே சிறியளவிலான பணஉதவியைச் செய்திருந்தார். ஆனால் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்லது கஜேந்திரன் அணியினரோ எச்சில் கையால் கூட காகம் துரத்த மறுப்பவர்கள் போன்று நடந்து கொண்டதாக நிமலரூபனின் தாயார் கவலையுடன் தெரிவித்திருந்தார்.

தங்களது சுய அரசியலிற்காக கஜேந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோர் நெல்லியடியில் போராட்டத்தில் ஈடுபட்ட போது வம்பில் மாட்டியது போன்று இப்போராட்டத்தில் கலந்து கொண்டதால் கட்சியின் நெருக்கடி காரணமாக சிக்கித் திணறுகின்றார் சிறீதரன்.

## கட்சி ஆதரவாளரிடையே இரத்தினபுரியில் மோதல்

(கொழும்பு)

இரத்தினபுரி பிரதேசத்தில் ஒரே கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்களின் இரு குழுக்களுக்கிடையில் மோதல் மூண்டுள்ளது. நேற்று இரவு இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன் போது காயமடைந்த ஒருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் தொடர்பில் ஒரே கட்சிக்கிடையில் எழுந்த பிரச்சினையைத் தொடர்ந்து மோதல் மூண்டுள்ளது. இதுவரையில் மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் 22 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

## இலங்கை ஊழியர்களை ஏமாற்றுவதால் ஓமானில் 14 நிறுவனங்கள் கறுப்புப் பட்டியலில்

(கொழும்பு)

ஓமானிலுள்ள 9 நிறுவனங்கள் இலங்கையர்களை ஊழியர்களாக சேர்த்துக்கொள்வதற்கு ஓமானிலுள்ள இலங்கைத் தூதரகம் தடைவிதித்துள்ளது.

இலங்கை ஊழியர்களை ஏமாற்றிய குற்றச்சாட்டின் காரணமாக இந்நிறுவனங்கள் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 14 நிறுவனங்களு டனான செயற்பாடுகளை இலங்கைத் தூதரகம் நிறுத்திக்கொண்டுள்ளது.

கறுப்புப் பட்டியலில் உள்ளக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் 7 ஆடைத் தயாரிப்பு மற்றும் ஏற்று மதி நிறுவனங்களும் அடங்கும். அத்துடன் 3 ஆடைத் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி நிறுவனங்கள், 4 ஆட்சேர்ப்பு நிறுவனங்கள், 3 சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் மேலும் 4 நிறுவனங்களுடனான தனது செயற்பாடுகளை, ஓமான் தொழிலாளர் சட் டங்களை மீறிய குற்றச் சாட்டின் காரணமாக இலங்கைத் தூதரகம் நிறுத்தியுள்ளது.

ஊழியர்களுக்கு சம்பளம் வழங்காமை, ஊழியர்களை ஒழுங்கீனமாக நடத்துதல், சம்பளம் குறைக்கப்பட்டமை போன்ற பல முறைப்பாடுகள் இந்நிறுவனங்களுக்கு எதிராக தெரி விக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தூது வர் அசோக கிரிஹகம கூறினார்.

இந்நிறுவனங்கள் கறுப்புப் பட்டியலில் இருக்கும் காலத்தில் இலங்கை ஊழியர்களை சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அந் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இலங்கைக்கு பயணம் செய்ய விஸா வழங்கப்படமாட்டாது எனவும் அவர் கூறினார். தற்போது சுமார் 25,000 இலங்கையர்கள் ஓமானில் பணியாற்றுகின்றனர்.

## இராஜினாமா

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உப செயலாளரும் கலைக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் மக்கள் தொடர்பு அதிகாரியுமான எஸ்.செல்வேந்திரன் தனது பதவியினை இராஜினாமா செய்துள்ளதாக தெரிவித்தார்.

கட்சி அங்கத்துவத்திலிருந்தும் தான் விலகியுள்ளதாகத் தெரிவித்த அவர், தனது இராஜினாமா கடிதத்தை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் கையளித்துள்ளதாக மேலும் தெரி வித்தார்.

## ஆட்கடத்தல் படகு பொலிஸ் வலையில்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியா நோக்கி பயணிக்கத் தயாரான 47 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று இரவுவேளையில் இவர்கள் கைது செய்யப்பட் டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுல சூரிய தெரிவித்தார்.

மோதறை கடற்பிரதேசத்தில் வைத்து 28 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை நீர்கொழும்பு பிரதேசத்தில் வைத்து 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பணிப்புறக்கணிப்பை கைவிட மாட்டோம்

### விரிவுரையாளர்கள் விடாப்பிடி

(கொழும்பு)

தமது கோரிக்கைகள் நிறைவேறும்வரை பகிஷ்கரிப்பை கைவிடப் போவதில்லை என கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க விடுத்துள்ள கோரிக்கையை ஏற்க தயாராக இல்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளன தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

அனைத்து விரிவுரையாளர்களும் எதிர்வரும் 30 ஆம் திகதியிலிருந்து பணிக்கு திரும்புமாறு உயர் கல்வியமைச்சர் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் இவ்விடயம் தொடர்பில் விரிவுரையாளர்கள் ஒரே நிலையில் இருப்பதாகவும் அவர்கள் தமது பகிஷ்கரிப்பை கைவிடமாட்டார்கள் எனவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளன தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

## போருக்கும் தடை அபிவிருத்திக்கும் தடை

(கொழும்பு)

போருக்கு தடை ஏற்படுத் தியதனைப் போன்றே சிலர் அபிவிருத்தி பணிகளுக்கும் தடை ஏற்படுததி வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி உள்ளிட்ட படை வீரர்கள் எந்த வொரு சக்திக்கும் அடிபணியாது போரை வென்றெடுத்ததைப் போன்றே, எந்தவொரு சக்திக்கும் அடி பணியாது அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும். அரசாங்கம் மக்களின் தேவைகளை அறிந்து கொண்டு அதற்கான தீர்வுகளை வழங்கி வருகின்றது. உட்கட்டமைப்பு வசதிகள், நீர்விநியோகம், வடிகாலமைப்பு, அதிவேக நெடுஞ்சாலைகள், மின விநியோகத் திட்டஙகள என பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வெலிவேரிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய போதைப்பொருட்கள் இலங்கைக்குக் கடத்தல்

(கொழும்பு)

போதைப்பொருட்களை கடத்தி வந்த இந்திய படகொன்று மன்னார் கடற் பகுதியில் வைத்து கடற்படையினரிடம் சிக்கியுள்ளது. இதில் இருந்து 29 கிலோ 675 கிராம் கஞ்சாவும் (கேரளத்து கஞ்சா) 399 கிலோ புகையிலைத் தூள் என்பன மீட்கப்பட்டதோடு இரு இந்தியர்களும் 4 இலங்கையர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி பத்தலம் குண்டுவிலிலிருந்து 20 கடல் மைல் தூரத்தில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். சுங்க சட்டத்திற்கு முரணாக மேற்படி சந்தேக நபர்கள் மன்னார் கடற்பகுதியினூடாக போதைப் பொருட்களை கடத்திச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## உயர்தரப் பரீட்சைகள் தேர்தல்களின் ஒருபகுதி

(கொழும்பு)

உயர்தரப்பரீட்சைகள் தேர்தல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக அமைந் துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அநுராதபுர மாவட்டம் உள்ளிட்ட சில பகுதிகளில் உயர்தரப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் அரசியல் நோக்கில் இடம் பெறுவதாக அந்த சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, உயர் தரப்பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எதிர்காலத்தில் பரீட்சைகளில் தோற்றவுள்ள மாணவர்களுக்கும் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஆணைக்குழு பரிந்துரைகளை இணைந்தே முன்னெடுக்க முடியும்

## ஜனாதிபதியின் செயலாளர்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள சிபாரிசுகள் அனைத்தும் சுமார் மூன்றரை வருட கால பகுதிக்குள் அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 285 முன்மொழிவுகளும் இந்த காலப்பகுதிக்குள் அமுல்படுத்தப்படும்.

இந்த முன்மொழிவுகள் 235 தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக தேசிய வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதிலுள்ள முன்மொழிவுகள் 3 மாதங்கள், 6 மாதங்கள் 12 மாதங்கள் மற்றும் 24 மாதங்கள் ஆகிய காலப் பகுதிக்குள் அமுல்படுத்தப்படும்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை தனியொரு அமைச்சினால் மாத்திரம் முன்னெடுக்க முடியாது. பல அமைச்சுக்கள் இணைந்தே முன்னெடுக்க முடியும். இதனாலேயே வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் முன்மொழிவிற்கமைய ஜனாதிபதி விசேட செயலணி அமைக்கப்பட்டது.

ஆணைக்குழுவின் முன்மொழிவுகளை அமுல்படுத்தும் செயற்பாட்டில் பாதுகாப்பு அமைச்சு, நீதி அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, பத்திரிகை ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், காணி அமைச்சு, சுகாதார அமைச்சு, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் உட்பட அனைத்து அரச நிறுவனங்களும் இணைந்து செயற்படவுள்ளன.

இதன் மூலம் அனைத்து அரச நிறுவனங்களும் இந்த செயலணியுடன் இணைந்து செயற்படும். இந்த முன்மொழிவுகளை முன்னெடுப்பதற்கு தேவையான நிதி 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில ஒதுக்கப்படவுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த செப்டம்பர் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதால் முன்மொழிவுகளை அமுல்படுத்துவதற்காக நிதி ஒதுக்க முடியாமல் போனது. எனினும் 2013 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதியின் ஊடாக ஆணைக்குழுவின் முன்மொழிவுகளை முன்னெடுப்பதற்காக நிதி ஒதுக்கப்படுவதன் மூலம் நாட்டில் பாரிய மாற்றம் ஏற்படும்.

இந்த அனைத்து முன்மொழிவுகளும் தேசிய கொள்கை, இறுதிக் கட்ட யுத்தம், மனித உரிமையும் தேசிய பாதுகாப்பும் மற்றும் மீள்குடியேற்றமும் தேசிய அபிவிருத்தியும் என நான்கு பாரிய பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக யுத்தத்தின் போது படையினர் ஏதாவது பிழை செய்திருந்தால் தண்டிக்க வேண்டும் என ஆணைக்குழு அறிக்கை முன்மொழிவின் 9.9ஆவது சரத்தில் குறிப்படப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, குறித்த குற்றத்தில் ஈடுபட்டவர்கள் பாதுகாப்பு சட்டத்திற்கிணங்க விசாரிக்கப்படுவர். இதற்காக சுமார் 12 மாதங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பின்னர், இதன் தொடர்ச்சியாக சட்ட நடவடிககை எடுக்கப்படும். இதற்காக 24 மாதங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனை தொடர்ந்து குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டனை வழங்கப்படும். இதற்கு 24 மாதங்கள் தேவைப்படும்.

இந்த செயற்பாட்டில் பாதுகாப்பு அமைச்சு, நீதி அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைகளம் ஆகியன இணைந்து செயற்படவுள்ளன. இந்த செயற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட கால பகுதிக்கு முன்னர் இது நிறைவடைய முடியும். அதேபோன்று, காணி செயற்பாட்டினை மேற்கொள்வதற்காக நான்காவது காணி ஆணைக்குழு நியமிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே 1927, 1936 மற்றும் 1985 ஆகிய ஆண்டுகளில் காணி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. தற்போது நடைமுறையிலுள்ள காணி சட்டத திற்கிணங்க, ஒருவர் காணியினை உரிமையாக்குவதற்கு சுமார் 40 செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். எனினும் புதிதாக அமைக்கப்படவுள்ள காணி ஆணைக்குழுவின் மூலம் மிக விரைவில் காணியின் உரிமையை பெற்றுக்கொள்ள முடியும்.

நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள சிபாரிசுகளை அரச நிறுவனங்கள் அமுல்படுத்துவது தொடர்பில் இந்த செயலணி கண்காணிப்பினையும் இணைப்பினையும் மேற்கொள்ளும்.

ஜனாதிபதி செயலணியினால் மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளும் மக்கள் மயப்படுத்தப்படும். அத்துடன் ஆணைக்குழுவின் முன்மொழிவுகளை அமுல்படுத்துவது தொடர்பில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங் களினால் ஜனாதிபதி செயலணிக்கு கருத்துகளை தெரிவிக்க முடியும் என்றார்.

# நவீன விஞ்ஞான சிந்தனையில் முக்கியம் பெறும் முன்பள்ளிக் கல்வி

## - உதவிக் கல்விப் பணிப்பாளர் தில்லைநாதன்

(வடமராட்சி)

நவீன விஞ்ஞான உலகின் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக முன்பள்ளி சிறார்கள் வளர்ந்து வருகின்றனர். என முன்பள்ளிகளின் உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா கடந்த திங்கட்கிழமை பாடசாலை மைதானத்தில் வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் க.தருமகுலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இவ் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து பரிசில்களையும் வழங்கி கௌரவித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நவீன கல்விச் சிந்தனையில் இன்று முன்பள்ளி கல்வி முக்கியத்துவம் பெற்றுவருகின்றது அதிலும் நவீன விஞ்ஞான உலகின் சவால்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாக முன்பள்ளிச்சிறார்கள் வ்ளர்ந்து வருகின்றனர். அவர்களுக்கான அத்திபாரமாக முன்பள்ளிச் செயற்பாடுகளும் கல்வியும் இடப்பட்டிருக்கின்றது. இன்று பெற்றோர்களும் தமது பிள்ளைகளில் ஆக்கமும் ஊக்கமும் எடுத்து செயறபடுகின்ற நிலையில் ஆசிரியர்கள் தங்களின் வாண்மையை அதிக அக்கறை காட்டி நவீன கற்றல் கற்பித்தல் முறைமைகளைப் பின்பற்ற முன்வரவேண்டும்.

முன்பள்ளி டிப்ளோமா பயிறசியை அவர்கள் பெற்று நல்ல ஆக்கபூர்வமான சிந்தனையுடனும் செய்முறைச் செயற்பாடுகளுடனும் கற்பித்தல் இடம் பெறவேண்டும்.

அப்போது தான் முன்பள்ளிச் சிறார்களை நவீனயுகத்தின் கல்வியின் சவாலகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாக வளர்த்துக் கொள்ளமுடியும்.

முன்பள்ளிச் சிறார்களின் உடல் ஆரோக்கியத்தை பேண பெற்றோர்கள் போசாக்குள்ள நல்ல உணவுகளை வழங்குவதோடு கலை கலாசார விழுமியங்களையும் மற்றும் பாரம்பரிய பண்பாடுகளையும் அவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

ஆன்மிக ஈடுபாடு உள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் நற்பண்பு உள்ளவர்களாக வளர்வதையும் அவதானிக்க முடிகின்றது. அவர்கள் போல ஏனைய சமூகத்தில் உள்ளவர்களும் இறை, பக்தி, தன்நம்பிக்கை, கலை கலாசாரப் பூண்பாட்டு விழுமியங்கள் ஆகியவற்றில் அதிக அக்கறை செலுத்தி வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

இவ்விளையாட்டு விழாவில் வல்வெட்டி சனசமூக நிலையத் தலைவர் ஆ.ஞானேந்திரன், வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தலைவர் சி. மனோகரதாஸ், முன்பள்ளிகளின் வலய இணைப்பாளர் திருமதி.எஸ்.சுதர்ஜினிதேவி மற்றும் முன்பள்ளி கரவெட்டி பிரதேச இணைப்பாளர் திருமதி. பி.கலைவாணி ஆகியோர் உட்பட பெற்றோர்கள், சமூகப் பெரியார்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (116)

# மண்ணெண்ணெய் முத்திரை நிதி வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி பயனாளிகளுக்கு மண்ணெண்ணெய் மானிய முத்திரைக்கான மண்ணெண்ணெய் விநியோகத்திற்குரிய நிதி ஒதிக்கீடு அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட சமுர்த்தி அலுவலகம் தெரிவித்துள்ளது

தைமாதம் முதல் ஆடி மாதம் வரையான ஏழு மாதங்களுக்கான இந்த நிதி ஒதுக்கீடு அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

இருகட்டங்களாகவே இந்த நிதி ஒதுக்கீடு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

கடந்த தை முதல் முதற்கட்டமாக மூன்று மாதங்களுக்கு மண்ணெண்ணெய் மானிய முத்திரைகளுக்கு விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் மிகுதி நான்கு மாதங்களுக்குமான நிதி ஒதுக்கீட்டினைப் பெற்று மானிய மண்ணெண்ணெய் விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

# முரசின் இன்றைய பலன்

(30.07.2012 – திங்கட்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 15 ஆம் திகதி. துவாதசி பிற்பகல் 2.47 வரை.
நட்சத்திரம் மூலம். பின்னிரவு 1.11 வரை.சித்தயோகம்.
இராகுகாலம் 7.33 - 9.03 வரை. சுபநேரம் 12.03 - 1.33 வரை.
எமகண்டம் 10.33 - 12.03 வரை. குளிகன் காலம் 1.33 - 3.03 வரை.
பிரதோஷ விரதம்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வெற்றி கிட்டும், சகோதரர் எதிர்ப்பு, பொருள் தட்டுப்பாடு, மனக்கிலேசம் நீங்கும். |
| ரிஷபம் | சந்திராட்டமம் கவனம், குடும்பத்தில் பிரச்சினை, பயண அலைச்சல், உறவினர் ஒற்றுமை. |
| மிதுனம் | சந்திராட்டமம் புதுமுயற்சி கூடாது, வீண்பழி கேட்டல், கேளிக்கை, கடன் தவிர்க்கவும். |
| கடகம் | உடல் அசதி, குடும்ப அன்னியோன்யம், தொழிலாளர் அனுசரணை, வேலைப்பளு. |
| சிம்மம் | ஆதரவு, எதிர்பாராத இலாபம், மறைமுக எதிர்ப்பு மறையும், பயண அனுகூலம். |
| கன்னி | மனக்கவலை, தொழிலில் இலாபம், விட்டுக்கொடுப்பு நன்று, உணவில் கவனம். |
| துலாம் | காலதாமதம், பணியில் நிம்மதி, தடைக்குப் பின் சுபகாரியம், உழைப்புகேற்ற ஊதியம். |
| விருச்சிகம் | தொழில் வளம், குடும்பத்தில் குழப்பம், வியாபாரத்தில் எதிர் நீச்சல், கௌரவப் பதவிகள். |
| தனுசு | ஓய்வு, கல்வியில் சிறப்பு, பணவரவுக்கு குறைவில்லை, நினைத்தது நிறைவேறும். |
| மகரம் | நல்ல வாய்ப்பு, பொன்பொருள் சேரும், தலையீடுகளைத் தவிர்க்கவும், சிக்கனம் நன்று. |
| கும்பம் | வீண் அலைச்சல், எதிர்பாராத பயணம், பேச்சில் நிதானம் நன்று, செலவுகள் அதிகரிப்பு. |
| மீனம் | செலவு அதிகரிப்பு, குடும்ப அன்னியோன்யம், தடைப்பட்டவை கைகூடும், அலைச்சல். |

# போட்டியில் வெற்றி


(யாழ்ப்பாணம்)

விசேட கல்வி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விசேட தேவையுடைய மாணவர்களுக்கும், சாதாரண மாணவர்களுக்கும் கட்டுரைப் போட்டிகள் வலய, மாகாண, தேசிய மட்டத்தில் நடத்தப்பட்டன. தேசிய மட்டத்தில் வடமாகணத்திற்குக் கிடைத்த பெறுபேறுகள்.

கட்டுரைப்போட்டியில் ஆரம்பப்பிரிவில் கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த வை.பவானிகா முதலாமிடத்தையும், கனிஷ்ட பிரிவில் யாழ்.இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வை.எமரென்ஷியா முதலாம் இடத்தையும், சிரேஷ்ட பிரிவில் யாழ்.கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.கஜலக்ஷி முதலாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை கொழும்பு 05, லும்பினி விதூகலவில் நடைபெறவுள்ள விஷேட கல்வி நூற்றாண்டு விழாவில் இம் மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

# ரமழான் சிந்தனை



ரமழான் மாதத்தின் இறுதி பத்தில் இஃதிகாப் இருப்பது விசேட அமலாகும். இஃதிகாப் இருப்பவருடைய விஷயத்தில் அவர் பாவங்களை விட்டும் பாதுகாக்கப்படுகின்றார். நற்செயல்கள் அனைத்தையும் செய்தவரைப் போன்ற நன்மைகள் அவருக்கு எழுதப் படுகின்றன. என ரஸீல்(ஸல்) கூறியுள்ளார்கள்.

நூல்: மிஷ்காத்

(105)

# பரமர் சங்கமம்



“அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு” என்று பழங்காலத்திலே நமது முன்னோர் அளவிட்ட கருத்துக்களைச் சொல்லிவைத்தார்கள்.

அமுதம் என்று குறிப்பிட்டது அமுது என்னும் சோத்தைதான். பசிக்கு வேளாவேளைக்கு உணவாகும் அன்னத்தை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டாலும் அது நஞ்சாகிவிடும் என எச்சரித்து இருந் தனர்.

இக்காலத்தில் வெப்பம் அதிகரித்துள்ளதால் அதனாலும் மனிதர்கள் பாதிக்கப்படுவதையும் சொல்லவேண்டியதில்லை. சிறு குழந்தைகளிலிருந்து முதியவர் வரை பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெப்ப அதிகரிப்பால் சொல்லெண்ணா தாக்கங்கள் புவியில் ஏற்பட்டு வருகின்றன. குடிநீர் தட்டுப்பாடு என்றில்லாமல் விளைபொருட்கள் அருகுகின்றன. நிலமட்டத்தில் மட்டுமல்ல கடல் மற்றும் நீர்நிலைகளால் கிடைக்கக்கூடிய உணவுப் பொருட்களும் அருகி வருகின்றன.

யாழ்ப்பாணக் குடாவைப் பொறுத்தமட்டில் ஆனி, ஆடி மாதங்களில் பழவகைகளுக்கு விளைச்சல் கூடக் கிடைக்கும். இதனால் இவ்விரு மாதங்களிலும் கோவில்களில் திருநாட்களின்போது பழவகைகள் விற்பனைக்கு வந்து விடும்.

அதனை வைத்தே திருநாட்களுக்கு குறியீட்டுப் பெயர்கள் வைத்து அழைக்கப்படுவதையும் அறிந்துள்ளோம். மாம்பழம், பிலாப்பழம், வாழைப்பழம் ஆகிய முக்கனிகளுடன் வன்னியால் கொண்டு வரப்படுகின்ற பாலைப்பழமும் இம்மாதங்களில் வந்து குவிந்துவிடும்.


ஆனி, ஆடி மாதங்களில் பாலைப்பழத்தைத் தின்று கொழுத்த பன்றி இறைச்சி கூட விற்பனைக்கு வரும். பாலைப்பழத்திற்கு மடு மாதா திருநாள் பெயர் போனது போல, யாழ்ப்பாணத்திலும் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலய திருநாட்களும் மாம்பழம், பிலாப்பழம் சாப்பிடுவதற்குப் பெயர் பெற்றது.

இதே ஆனி, ஆடி மாதங்களில் தென்பகுதியால் கொண்டுவரப்படுகின்ற றம்புட்டான்பழம், மங்குஸ்தான் பழம், வர்த்தகப்பழம் என்பன நல்லூர், செவ்வச்சந்நிதி ஆலய இரத, தீர்த்தோற்சவ நாட்களில் பெருமளவில் விற்பனை செய்யப்படும். இவ் வருடம் றம்புட்டான் பழம், மங்குஸ்தான் பழம் ஆகியன மிகவும் பெருவாரியாக எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

இக்காலங்களில் ஐம்பது சதம் ஒரு ரூபாய் விற்பனையான றம்புட்டான் பழங்கள் இரண்டாயிரமாம் ஆண்டுக்குப் பிற்பாடு ஐந்து ரூபா வரை விலை போனது. இம்முறை இரண்டு ரூபாவுக்கு விற்பனையானதும் புதுமைதான்.

இதே வேளை றம்புட்டான் பழத்திற்கு கொழும்பு பகுதிகளில் விற்பனை செய்யத்தடைவிதிக்கப்பட்டதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. இதன் காரணமாகவே வடபகுதிக்கு இம்முறை றம்புட்டான் பழங்கள் பெருமளவில் எடுத்துவரப்பட்டதால் இவ்விதம் மலிய நேர்ந்ததாகவும் தெரிகிறது.

டெங்கு போன்ற நோய்கள் பரவக்காரணமானதாலே கொழும்பில் தடைசெய்யப்பட்ட றம்புட்டான் பழத்தை நாங்களும் அளவுக்கு மிஞ்சினால்...! என்ற எச்சரிக்கையோடு பாவிக்க வேண்டும் இல்லையே பின்ன...




# ஒலிம்பிக் திருவிழா

## குதித்தது இராணியில்லை



(லண்டன்)

ஒலிம்பிக் தொடக்க விழா நிகழ்ச்சியின் போது பரசூட்டிலிருந்து குதித்தது பிரிட்டன் இராணி எலிசபெத் இல்லையென்றும் அவர் பிரபல கொமெடி நடிகர் எனவும் புதிய தகவல் வெளியாகியுள்ளது.

2012 ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டிகள் பிரிட்டன் தலைநகர் லண்டனில் நடைபெறுறு வருகிறது. இதன் தொடக்க விழா மிகப்பிரம் மாண்டமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சுட்டிக்காட்டும் படியாக அமைந்தது இராணி எலிசபெத் ஹெலிகாப்டரிலிருந்து பரசூட் மூலம் குதித்தது தான்.

இந்த ஒலிம்பிக் தொடக்க விழா நிகழ்ச்சிகளுக்கான வீடியோ சமீபத்தில் வெளியானது. அதில் இராணி எலிசபெத்தை ஜேம்ஸ் பாண்ட் நாயகன் டேனியல் கிரேக் அழைத்து செல் கிறார். இருவரும் ஒலிம்பிக் தொடக்க விழா நிகழ்ச்சியைக் காண ஹெலிகொப்டரில் பறக்கிறார்கள்.

விழா மைதானம் வருகையில் டேனியல் கிரேக்கும் இராணி எலிசபெத்தும் ஹெலிகொப்டரிலிருந்து பரசூட் மூலமாக குதிப்பார்கள். பின், இராணி மைதானத்திற்கு வந்து உரையாற்றுவதுபோல காட்சிகள் அமைக்கப்பட்டி ருக்கும்.

இதில் இராணி எலிசபெத்தும், டேனியல் கிரேககும் பரசூட்டிலிருந்து குதிப்பது போன்ற காட்சிகள் உண்மை இல்லை. இவர்களுக்கு பதிலாக கேரி கேனரி (இராணி எலிசபெத்) என்பவரும் மார்க் சூட்டன் (டேனியல் கிரேக்) என்பவரும் குதித்துள்ளனர். இந்த தகவலை பிரிட்டனின் பிரபல இணைய ஊடகம் வெளியிட்டுள்ளது.

## துப்பாக்கி சுடுதலில் தென்கொரியா தங்கம்

(கொழும்பு)

லண்டன் ஒலிம்பிக் போட்டியில தென் கொரிய வீர்ர ஜோங்கோ ஜின் தங்கப் பதக்கத்தை வென்றார்

லண்டன் ஒலிம்பிக்கின் 2 ஆவது நாளன்று ஆண்களுக்கான 10 மீற்றர் ஏர் பிஸ்டல் பிரிவு போட்டி நடைபெற்றது.

இப்போட்டியின் இறுதி சுற்றுக்கு தென் கொரியா, இத்தாலி, செர்பியா, சீனா, உக்ரைன், ஸ்பெயின், போர்ச்சுக்கல், பின்லாந்து ஆகிய நாட்டைச் சேர்ந்த 8 வீரர்கள் தகுதி பெற்றனர்.

இறுதிச் சுற்றில் தென் கொரிய வீரர் ஜோங்கோ ஜின் 688.2 புள்ளிகள் பெற்று தங்க பதக்கத்தை வென்றார். இத்தாலி வீரர் லுசா டெஸ்கோனி 685.8 புள்ளிகள் பெற்று வெள்ளி பதக்கத்தையும், செர்பியா வீரர் அண்ட்ரிஜா 685.2 புள்ளிகள் பெற்று வெண்கல பதக்கத்தையும் பெற்றனர்.

நீண்ட தூரம் சைக்கிள் பந்தயத்தில் கஜகஸ்தான் வீரர் வினோகுரோவ் தங்கத்தை வென்றார், கொலம்பியா வீரர் உரன் உரன் வெள்ளியும், நார்வே வீரர் கிறிஸ்டாவ் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

ஜூடோ ஆண்கள் 60 கிலோ பிரிவில் பிரேசில் வீரர் கிடாடே வெண்கலம் பதக்கம் பெற்றார்.

ஒலிம்பிக் 2012

### பதக்க பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 4 | 0 | 2 | 6 |
| இத்தாலி | 2 | 2 | 1 | 5 |
| அமெரிக்கா | 1 | 2 | 2 | 5 |
| கொரியா | 1 | 1 | 1 | 3 |
| பிரேசில் | 1 | 1 | 1 | 3 |
| அவுஸ்ரேலியா | 1 | 0 | 0 | 1 |
| கஜகஸ்தான் | 1 | 0 | 0 | 1 |
| ரஷியா | 1 | 0 | 0 | 1 |
| ஜப்பான் | 0 | 2 | 1 | 3 |
| கொலம்பியா | 0 | 1 | 0 | 1 |
| நெதர்லாந்து | 0 | 1 | 0 | 1 |
| போலந்து | 0 | 1 | 0 | 1 |
| ருமேனியா | 0 | 1 | 0 | 1 |
| உஸ்பெகிஸ்தான் | 0 | 0 | 1 | 1 |
| சேர்பியா | 0 | 0 | 1 | 1 |
| நோர்வே | 0 | 0 | 1 | 1 |
| பெல்ஜியம் | 0 | 0 | 1 | 1 |
| ஹங்கேரி | 0 | 0 | 1 | 1 |

## ஊக்கமருந்தால் வெளியேற்றம்

(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கான ஊக்க மருந்து சோதனையில் சிக்கிய அல்பேனியன் பளுதூக்குதல் வீரர் ஹைசென் வெளியேற்றப்பட்டார்.

லண்டன் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கிய நிலையில், வழக்கம் போல் பளுதூக்குதல் போட்டிக்கு முன்பு வீரர்களுக்கு ஊக்க மருந்து சோதனை செய்யப்பட்டது.

இச்சோதனையில் 77 கி.கி., பிரிவில் பங்கேற்க இருந்த அல்பேனியன் வீரர் ஹைசென்(வயது 19) தடைசெய்யப்பட்ட "ஸ்டெராய்டு" எனப்படும் ஊக்க மருந்தை பயன்படுத்தியது தெரியவந்தது. இதனால் இவர் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இதேபோல் துருக்கி பளுதூக்குதல் வீரர்களான பெய்த் மற்றும் இப்ராஹிம் ஆகியோரும் ஊக்கமருந்து பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டதால் வெளியேற்றப்பட்டனர்.

## நீச்சலில் பெல்ப்ஸ் தோல்வி ரியோன் லோசெட் தங்கம்



லண்டன் ஒலிம்பிக் போட்டியில் எல்லா வகையான நீச்சல் போட்டியிலும் சகலகலா வல்லவரான அமெரிக்காவின் மைக்கேல் பெல்ப்ஸ் 400 மீற்றர் பிரிவில் தோல்வியடைந்தார்.

லண்டனில் நடக்கும் 30 ஆவது ஒலிம்பிக் போட்டியில் 400 மீற்றர் தனிநபர் நீச்சல் பிரிவு போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் அமெரிக்க வீரரான ரியோன் லோசெட் 4:05.18 நிமிடத்தில் இலக்கை அடைந்து தங்கம் வென்றார். பிரேசில் வீரரான பெரிரா இரண்டாவதாக வந்து வெள்ளிபதக்கத்தையும், ஜப்பான் வீரர் ஹகினோ வெண்கல பதக்கத்தையும் வென்றனர்.

ஆனால், 14 முறை ஒலிம்பிக்ஸ் சாம்பியன் வென்ற மைக்கேல் பெல்ப்ஸ் நான்காவதாக வந்து பதக்க வாய்ப்பை இழந்தார்.

எனினும் பெல்ப்ஸ் இன்னும் சில பிரிவுகளில் பங்கேற்க உள்ளதால் அவர் நிச்சயம் பதக்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## சுஷில் குமார் அருகில் மர்மப்பெண்

(லண்டன்)

ஒலிம்பிக் தொடக்க விழா வில் இந்திய அணியினருடன், அடையாளம் தெரியாத மர்ம பெண் ஒருவர் வந்தது பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டன் தலைநகர் லண்டனில், 30 ஆவது ஒலிம்பிக் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் இந்தியா சார்பில் 81 பேர் பங்கேற்கின்றனர். தொடக்க விழாவில் இந்தியா சார்பில் மொத்தம் 40 வீரர், வீராங்கனைகள், 11 நிர்வாகிகள் மட்டுமே கலந்து கொண்டனர்.

மல்யுத்த வீரர் சுஷில் குமார் மூவர்ண கொடியை கையில் ஏந்தியபடி இந்திய அணிக்கு தலைமை தாங்கி முன்னால் வர, சானியா மிர்சா உள்ளிட்டவர்கள், பின் தொடர்ந்து வந்தனர்.

அதேநேரம், இந்திய அணிக்கு சற்றும் சம்பந்தம் இல்லாத, சிவப்பு சேட், நீல நிறத்தினால் ஆன பேண்ட் அணிந்த பெண் ஒருவர், எவ்வித அடையாள அட்டையுமின்றி, சுஷில் குமார் அருகில் நடந்து வந்தார். இவர் யாரென்று இந்திய வீரர்,



வீராங்கனைகள் உட்பட யாருக்கும் தெரியவில்லை.

இதுகுறித்து இந்திய அணித்தலைவர் முரளிதரன் ராஜா கூறுகையில், அணிவகுப்பின் போது அந்த பெண், இந்திய அணியினரை மைதானம் வரை அழைத்து வருபவர் என எதிர்பார்த்தோம்.

ஆனால், கடைசி வரை கூடவே வந்தார். அந்தப் பெண் அப்படி வர வேண்டிய அவசியமே இல்லை. இவரை எப்படி உள்ளே அனுமதித்தனர் என்று தெரியவில்லை என்றார்.

## ரிக்ஷாவிலேயே சென்ற சீனர்



ஒலிம்பிக் போட்டியைக் காண உலகெங்கும் உள்ள மக்கள் விமானம், கப்பல் என்று பல வழிகளிலும் சுலபமாக லண்டன் வந்து சேர்ந்துள்ளனர். ஆனால், சீன விவசாயி செங் குவாங்மிங், 2 ஆண்டுகால ரிக்ஷா பயணத்தின் மூலம், லண்டனை வந்தடைந்துள்ளார்.



வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்டக் கால்பந்துப் போட்டித் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொண்ட கிளிநொச்சி மாவட்ட அணியைக் காணலாம். மாகாணமட்ட கால்பந்துப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு கிளிநொச்சி மாவட்டம் முதல் முறையாகத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த கால போர் நெருக்கடிகளால் பல இடர்களை எதிர்கொண்டபோதும் தன்னம்பிக்கையுடன் போராடி மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொண்ட கிளிநொச்சிமாவட்ட கால்பந்தாட்ட அணிக்கு விளையாட்டு ஆர்வலர்கள் பலர் பாராட்டுத்தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (93, எஸ்பி.)

## சச்சினின் ஓய்வு இப்போதைக்கு இல்லை

(மும்பை)

இப்போது என் முழுக் கவனமும் கிரிக்கெட்டில்தான் உள்ளது. 5 அல்லது 6 ஆண்டுகளுக்குப்பின்னரே எனது ஓய்வு முடிவு குறித்து முடிவு செய்வேன் என சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

நான் என்ன செய்வேன் என்பதை இப்போதே சொல்வது கடினம். அது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்றார்.

டெண்டுல்கருக்கு சிறுவயதில் இருந்தே கார் என்றால் மிகவும் பிடிக்கும். கிரிக்கெட் மூலம் பணம் சம்பாதிக்க தொடங்கியதும் முதலில் மாருதி 800 கார் வாங்கினார். இன்று அவரிடம் உலகின் முக்கிய நிறுவனங்களின் சொகுசு கார்கள் இருக்கின்றன. எனவே டெண்டுல்கர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றபிறகு கார் தொடர்பான தொழிலில் ஈடுபடுவார் என்று கூறப்படுகிறது. இதன்மூலம் 45 வயது வரை கிரிக்கெட் விளையாடுவேன் என்பதை டெண்டுல்கர் சூசகமாக உணர்த்தியுள்ளார். எனவே டெண்டுல்கர் இப்போதைக்கு சர்வதேசப்போட்டிகளில் இருந்து ஓய்வு பெற மாட்டார் என்பது உறுதியாகியுள்ளது எனக் கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவித்தனர்.

# 44 ஓட்டங்களினால் மத்திய கல்லூரி அபார வெற்றி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் 44 ஓட்டங்களால் யாழ். மத்தியகல்லூரி அணி வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான 'லீக் ஆட்டமொன்று அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 47.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சௌமிதரன் 47, கனிஷ்டன், ஒனசியன் தலா 28, டிலோஜன் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பவிதரன் மூன்று, பார்த்தீபன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 185 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 33 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் தனலக்ஷன் 35, சத்தியன் 33, செந்தூரன் 22, லிங்கநாதன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரூபன் 22 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களையும், நிரோஜன் 14 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தி அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்தனர். இதேவேளை, இப்போட்டித்தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டத்திற்கு யாழ். மத்திய கல்லூரி அணி தகுதி பெற்றுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

(எஸ்பி.)




# விசேட தேவையுடையோருக்கான மாவட்ட மட்ட விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடமாகாணப் பிரதிச் செயலாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இப்போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினராக மேல் மாகாண சபையின் விசேட கல்விப் பணிப்பாளர் திசநாயக்கா பிலியந்தலை விசேட மாணவர் நிலைய பிரதி கல்விப் பணிப்பாளர் மாலினி குணசிங்க, வட மாகாண மாணவர் அபிவிருத்தி பிரதிப் பணப்பாளர் கே.சத்தியபாலன் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர். யாழ். கல்வி வலய விசேட தேவையுடைய மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்பு இடம்பெற்றது. இதில் விசேட தேவையுடையோரின் பல போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சாதனை வீரருக்கு கௌரவம்



(நெடுந்தீவு)

மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டியில் சாதனை படைத்த வீரர் எஸ்.ஞானேஸ்வரனுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த 25ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் நெடுந்தீவு உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுக்கழகத் தலைவர் ஆர்.அலன்டின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வில் நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, நெடுந்தீவு பிரதேச சபைத்தவிசாளரும் நெடுந்தீவு ஈழமக்கள் ஜனநாயக்கட்சி அமைப்பாளருமாகிய தானியேல் றெக்சியன், கௌரவ விருந்தினர்களாக எஸ்.பி.அருளப்பு ஓய்வுபெற்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், நெடுந்தீவு மத்தி கிராம அலுவலர் திருமதி ஜெயறோஸ் மேரிரவீந்திரன், நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அ.த.க பாடசாலை அதிபர் திருமதி செ.பாக்கியநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விரல் நகங்களில் தேசப்பற்று

(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் பல வீரர்கள், வீராங்கனைகள் தங்களது தேசப்பற்றை விரல் நகங்களில் வெளிப்படுத்திக் கலக்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு வீரர்களும், வீராங்கனைகளும் தங்களது தேசப் பற்றை பறை சாற்றும் வகையில், விதம் விதமான முறையில் கலக்கி வருகின்றனர். அதில் ஒன்றாக, விரல் நகங்களில் தங்களது நாட்டின் தேசி யக் கொடியை நெயில் பாலிஷ் மூலம் வரைந்து அசத்திக் கொண்டிருக்கின்றனர். பிரபல அமெரிக்க டென்னிஸ் வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ், தனது விரல் நகங்களில் அமெரிக்க தேசியக் கொடியின் நிறத்தை இடம் பெற வைத்துள்ளார்.

இதேபோல ஹங்கி நீச்சல் வீராங்கனை சுஸானா ஜேக்கபஸ் தனது நாட்டுத் தேசியக் கொடியை விரல் நகங்களில் விளையாட வைத்துள்ளார். இங்கிலாந்து வீரர் ஆலிசன் வில்லியம்சன் தனது விரல் நகங்களில் தேசியக் கொடியான யூனியன் ஜாக்கை வரைந்துள்ளார். இப்படிப் பலரும் விதம் விதமான முறையில் தங்களது நகங்கள் மூலம், உடைகள் மூலம், முடியலங்காரம் மூலமும் தேசப் பற்றை வெளிப்படுத்தி வருகின்றனர்.



# சென். ஜோன்ஸ் கல்லூரியை வீழ்த்தியது மானிப்பாய் இந்து

(யாழ்ப்பாணம்)

சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கைப்பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டமொன்று கடந்த 19ஆம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி 36 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிரிஸ்யன் 25, ஜோசப் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விக்னேஸ்வரன் நான்கு, டிலுஷன், நிரோஜ்குமார் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 140 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 43.5 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சஜீவன் 43, நிரோஜ்குமார், சஜீத் தலா 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சோமஸ்கரன், புகலனிஜன் தலா மூன்று மதிவதனன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எஸ்.பி.)

இலட்சக்கணக்கான தமிழ் பேசும் இனத்தவர்களின் மொழி உரிமையை நிலைநிறுத்தும் நடைமுறை முயற்சிகளை மேம்படுத்துவதன் மூலம், உணர்வதற்கான பிரதான காரணம் மொழியே மற்றும் 1958இல் நூற்றுக் கணக்கானவர்களை பலிகொண்ட இனக்கல வரம் மூளுவதற்கு தீப்பொறியாக இருந்ததும் இந்த மொழிக் கொள்கைதான்.

ஆனால் சிங்களவர்கள் இதற்காக சொல்லும் காரணம் தேசிய பாஷையாக இருந்த ஆங்கிலத்தை அகற்றுவதற்காக மேற்கொண்ட முயற்சியே இந்த சிங்களம் மட்டும் சட்டமே சொந்த மொழிகளில் பேசிக் கொள்ள முடியாமலிருப்பது மிகவும் வினோதமானது" என யாழ்ப்பாணவாசி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையின் கல்விமுறை கள் அதன் மொழி வேறுபாடு களை தழுவியுள்ளதால் அதுவும் பிரச்சினைக்குரியதா கவே உள்ளது. அரசியலமைப்பு வாக்கியத்தின்படி" தேசிய மொழிகளில் எந்தவொரு மொழிமூலமும் கல்வி கற்பதற்கு ஒரு நபருக்கு மனித உரிமைகள் நிறுவனத் தின் தலைவருமான தாகிரா கரட்டுலயான். தமிழ் பாடசா லைகளில் கற்பிக்கப்பட்டு வந்தாலும் அது ஒரு முக்கிய மான இருமொழித் தேசத்தை உருவாக்கும் முயற்சியில் தோல்வி கண்டுள்ளது.

இலங்கை வடக்கில் நிலை யான தன்மையை நிலைநாட்டி அதைக் கட்டியெழுப்புவதற்கு கடுமையாக பாடுபடுகிறது. அங்கு நூறாயிரக் கணக்கான இடம் பெயர்ந்தவர்கள் தங்கள் கொண்டியங்கும் மாற்றுக் கொள்கைக்கான மையத்தின் (சி.பி.ஏ) சமீபத்தைய அறிக் கையில் குறிப்பிடப்பட்டிருப் பது, இலங்கையின் யுத்தத்துக்கு பிந்திய ஐக்கியப்பாட்டுக்கு சிறந்த ஒரு கருவியாக இருப் பது மொழிதான் என்று. "மொழி உரிமைகள் அடைய எத்தை ஒருங்கிணைப்பதன் ஒரு பகுதியாகும். இந்த உரிமைக்கான சட்டப் பாதுகாப்பு போதுமானதாக இல்லை. அதை நடைமுறைப்படுத்த

ஐஹலு மொழி

# மொழிகளின் சமத்துவத்தின் மூலமே நல்லிணக்கத்தை மேம்படுத்த முடியும்

– ஐ.ஆர்.ஐ.என். அறிக்கையிலிருந்து.

நாட்டின் நீண்டகால சமாதானம் மற்றும் நல்லிணக்க முயற்சிக ளுக்கு இலங்கையர்கள் முக்கிய பங்களிப்பினை வழங்கமுடியும் என்று ஆர்வலர்களும், ஆய் வாளர்களும் தெரிவிக்கின்றனர்.


"இலங்கையின் சமாதான மற்றும் நல்லிணக்க முயற்சிக ளுக்கும், உண்மையில் சொல்லப்போனால். அதன் எதிர்காலத்துக்கும், மொழிகளின் சமத்துவம் ஒரு பெரிய சவாலாகவே உள்ளது. அது இல்லாமல் எங்களால் முன்னோக்கிச் செல்ல இயலுமா என்பதில் எனக்கு சந்தேகமே உள்ளது" என்று மனித உரிமை கள் வழக்கறிஞர் விஜேதாஸ ராஜபக்ஷ, ஐ.ஆர்.ஐ.என். இடம் தெரிவித்தார்.

சிங்களம் மட்டும் என்கிற ஒரு மொழிச் சட்டம் 1956இல் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அது ஒருபோதும் முற்றாக அமுல்படுத்தப்படவில்லை, தமிழர்கள் அந்த நகர்வை பாரபட்சமான ஒன்றாகப் பார்த்தபடியால், இரண்டு சமூகங்களிடையேயும் நீண்ட காலமாக இனமுறுகலுக்கு அது எண்ணெய் வார்த்தது. அநேகமான தமிழர்களுக்கு தாங்கள் அடிமைகளைப் போல தவிர தமிழர்களை தனிமைப் படுத்துவதற்காக அல்ல என்று.

1978ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் நான்காவது அத்தியாயம் தெரிவிப்பது, சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டும் தேசிய அரச கரும மொழிகளாக அங்கீகரிக்கப் பட்டிருக்கும் அதேவேளை ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக் கும் என்று. இப்படியான அங்கீகாரம் இருந்தபோதிலும் பலர் அரசியலமைப்பிலுள்ள வார்த்தைகள் தவறானவை என்று, சிங்களத்தை உயர்த்தி வடக்கு கிழக்கு பிரதேசங்களை தவிர்த்து ஏனைய இடங்களில் அதனை உத்தியோகபூர்வ மொழியாகவும் மற்றும் தமிழை ஒரு இரண்டாம் நிலைக்கு தள்ளிவிட்டிருப்பதாகவும் நம்புகிறார்கள்.

1987இல் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தப்படி அரசியலைமைப்பின் பிரிவு 18 தெரிவிப்பது, இலங்கையின் அரச கரும மொழி சிங்களம் (பிரிவு 18.1) அதேவேளை தமி ழும் ஒரு அரச கரும மொழி யாகும் (பிரிவு 18.2) என்று.

"நாங்கள் அனைவரும் இலங்கையர்கள்தான் ஆனால் ஒருவருக்கொருவர் தங்கள்



உரிமை உள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் பாடசாலை மட்டத்தில் தமிழ் மொழி மூலமான கல்வியை . மேம்படுத்த இன்னும் அதிக ஒருங்கிணைப்பு தேவைப்படு கிறது என ஆர்வலர்கள் தெரிவிக்கிறார்கள்.

"குழந்தைகளுக்கு உண்மை யில் தேசியவாதத்தை (தமிழ் மற்றும் சிங்களம்) புகட்டுவதற்கும் தடையாகவும் மற்றும் அவர்களை பிளவு படுத்துவதற்கும் பயன்படும் ஒரு கருவியாக உள்ளது" எனத் தெரிவித்தார் இலங்கை

கொழும்பை தளமாக வீடுகளுக்கு திரும்பியுள்ள போதிலும், இந்தப் பிரச்சினை யை நிவர்த்தி செய்வதற்கான வாய்ப்பு அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளதாக அநேகர் நம்புகிறார்கள். மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வுக்கு உள்ள அதே முக்கியத்துவம் மொழியின் சமத்துவத்தை உறுதிப்படுத்து வதிலும் உள்ளது" எனத் தெரிவித்தார் விஜேதாஸ ராஜபக்ஷ, அதே நிலைப்பாட் டை மற்றவர்களும் எதிரொலித் தார்கள்.

வேண்டியது மிகவும் முக்கியம்", என்று தெரிவித்தார் சி.பி.ஏ.யின் நிறைவேற்று இயக்குனரான பாக்கியசோதி சரவணமுத்து.

பெரும்பாலான தமிழ் பேசும் இலங்கையர்கள் உணர்வது, தங்கள் கலாசார அடையாளத் தை அடக்குவதற்கான முயற்சி யாக தங்கள் மொழி குறைவாக மதிக்கப்படுவதாக.

இதற்கான புதிய ஆரம்ப முயற்சியாக இருக்கக்கூடியது 2011இல் இனப் பூசலுக்கான மூல வேர் எது என்பதை கண்டறிவதற்காக அரசாங்கம் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (எல்எல்ஆர்சி) பரிந்துரைகளை நடைமுறைப்ப டுத்துவதே என விஜேதாஸ ராஜபக்ஷ சொன்னார்.

வெவ்வேறு சமூகங்களிடையே மொழியியல் மற்றும் கலாசார ஈடுபாடுகளுக்கான பாரிய விழிப்புணர்வை உருவாக் குவதே சிறந்ததோர் நல்லிணக் கத்தை மேம்படுத்துவதற்கான திறமையான ஒரு கருவியாகும். என்று தெரிவித்திருக்கும் எல். எல்.ஆர்.சி அறிக்கை இதற்கு அதிஉயர் முன்னுரிமை வழங்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

(நன்றி: ஐ.ஆர்.ஐ.என். நியூஸ்)


# பிளாஸ்டிக் இல்லாமல் வாழலாம்!

பிளாஸ்டிக், நம் கண் முன்னே வாழும் எமன். சுற்றுச் சூழலுக்கு பாதிப் பை ஏற்படுத்தி, மனித உயிர்களுக்கும், கடல் வாழ் உயிரினங்களுக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத் துள்ள, பேரழிவு சக்தி. உலகம் முழுவதும், சராசரியாக ஒரு ஆண்டுக்கு, 105 மில்லியன் தொன் பிளாஸ்டிக்குகள் தயாரிக்கப்படுகின்றன. உலகில் உள்ள ஒவ்வொரு நபரும், சராசரியாக ஒரு ஆண்டுக்கு, 70 கிலோ அளவுள்ள பிளாஸ்டிக்குளை பயன்படுத்துகின்றார்.

பிளாஸ்டிக்கை தயாரிப்பதற்கான செலவு குறைவு. மேலும், நாம் விரும்பும் எந்த ஒரு வடிவத்திலும், இதை எளிதாக உருமாற்றி விடலாம். ஆனால், இதை அழிப்பது அத்தனை எளிதான காரியம் அல்ல. இன்று, கடைகளில் வாங்கும் அனைத்துப் பொருட்களும், பிளாஸ்டிக் பைகளில் தான் கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு பயன்படுத்தப்படும் பிளாஸ் டிக்குகள், பொதுமக்களால் வீதிகளில் தூக்கி எறியப்படுவதன் விளைவாக, பூமிக்குள் ஆங்காங்கே புதைந்து, நிலத்தில் பெய்யும் மழை நீர், பூமிக்குள் ஊடுருவாத வகையில், மிகப் பெரிய பிளாஸ்டிக் கேடயமாக மாறி விடுகிறது. இதனால், நிலத்தடி நீர் குறைந்து, பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

கடற்கரைகளில் தூக்கி வீசப்படும் பிளாஸ்டிக்குகள், கடலுக்குள் செல்வ தால், கடலின் சுற்றுச் சூழலும் கடுமை யாக பாதிக்கப்பட்டு, கடல் வாழ் உயிரினங்களின் உயிர்களுக்கு உலை வைக்கின்றன. இதனால் தான், "அணுகுண்டால் ஏற்படும் பாதிப்பை விட, பிளாஸ்டிக்கால் ஏற்படும் பாதிப்பு, மிகவும் பயங்கரமானது" என, இந்திய உச்ச நீதிமன்றம், கடுமையான வார்த்தைகளால் எச்சரித்தது.

ஆனால், பிளாஸ்டிக் இல்லாத வாழ்க்கையை, உங்களால் ஒரு நாளா வது வாழ்ந்து காட்ட முடியுமா? ஒஸ்ட்ரி யாவை சேர்ந்த ஒரு குடும்பத்தினர், இரண்டு ஆண்டுகள் பிளாஸ்டிக் இல்லாத வாழ்க்கை வாழ்ந்து காட்டியுள்ளனர்.



ஒஸ்ட்ரியாவைச் சேர்ந்த, சாண்ட்ரா கிராவுட்வாச்சி என்ற பெண், சில ஆண்டுகளுக்கு முன், பிளாஸ்டிக்கால் ஏற்படும் பாதிப்பை விளக்கும் ஆவணப் படத்தை பார்த்தார். அப்போதிருந்து, இதுகுறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம், இவருக்குள் வேரூன்றியது.

இதையடுத்து, இவரும், இவரது மூன்று குழந்தைகளும் சேர்ந்து, பிளாஸ் டிக் இல்லாமல் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற முடிவை எடுத்தனர். தங்கள் வீட்டில் இருந்த, அத்தனை பிளாஸ்டிக் பொருட்களையும் எடுத்தெறிந் தனர். பல் துலக்குவதற்காக, மரக் குச்சியால் தயாரிக்கப்பட்ட, "பிரஷ்" ஐ பயன்படுத்தினர். சமையலுக்கும், மற்ற பொருட்களை வைத்துக் கொள்வதற்கும் தகர டின் மற்றும் அலுமினியப் பாத்திரங்களைப் பயன்படுத்தினர்.

ஒரு சில நாட்களிலேயே, பிளாஸ்டிக் இல்லாமல் வாழ்வது, எவ்வளவு சிரமம் என்பது, இவர்களுக்குத் தெரிந்து விட்டது. ஆனாலும், தளராத மனதுடன், தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் பிளாஸ்டிக்கையே பயன்படுத்தாமல், வாழ்ந்து காட்டினர்.

சாண்ட்ரா கூறுகையில், "பிளாஸ்டிக் காலான கழிப்பறை பேப்பருக்குப் பதிலாக, வேறு எதைப் பயன்படுத்துவது என்பதில், பெரிய பிரச்சினையாகி விட்டது. சில நாட்கள் செய்தித் தாள்களைப் பயன்படுத்தினோம். சரி வரவில்லை. பின்னர், இலைகளைப் பயன்படுத்தினோம். அதுவும் வேலைக்கு ஆகவில்லை. கடைசியாக, மறு சுழற்சி செய்யப்பட்ட பேப்பர் டவல்களை பயன்படுத்தினோம். எங்களைப் பார்த்து, மற்றவர்களுக்கும் விழிப்புணர்வு வர வேண்டும் என்பதற்காகவே, இவ்வாறு செய்தோம்...' என்றார்.

ஏதோ... பூமியில் பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றில்லாமல், சக மனிதர்களுக்கும், உயிரினங்களுக்கும், எதிர்கால தலைமுறைக்கும், நம்மால் முடிந்த நல்ல காரியத்தை செய்ய வேண்டும் என்ற, மிகப் பரந்த மனதுடன் வாழ்ந்து காட்டிய சாண்ட்ரா குடும்பத்தினர், பாராட்டுக்குரியவர்கள்.

புலி வாலைப் பிடிப்பது என்ற பழமொழி
ஆனால், புலியின் வாயில் கயிறை வைத்து,
பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அமெரிக்கா
மாகாணத்தில், புஜ் கார்டன் என்ற மிருகக் க
இந்த வித்தியாசமான நிகழ்வு அரங்கேறுகிறது
மேற்பட்ட மிருகங்கள், வளர்க்கப்பட்டு வருகி
காட்சிச்சாலையில், பார்வையாளர்களை கவர்
வித்தியாசமான போட்டிகள் நடத்தப்படுவது
நடத்தப்பட்டு வரும் போட்டிதான், புலியுடனா
போட்டி.

200 கிலோ எடையுள்ள புலியை, கம்பி வே
வைத்துள்ளனர். கம்பி வேலியின் நடுவில், சி
அதில், தடித்த, உறுதியான கயிறு ஒன்று
கயிறின் ஒரு முனை, கம்பி வேலிக்குள் இரு
கொடுக்கப்படும். மற்றொரு முனை, வேலிக்கு
போட்டியாளர்களின் கைகளில் கொடுக்கப்படு
ஒரு பக்கம் புலியும், மற்றொரு பக்கம் போட்
கொண்ட மட்டும் இழுப்பர். போட்டியில் பங்
வெற்றி பெற்றால், அவருக்கு பரிசு அளிக்க
புலி வெற்றி பெற்றால், அதற்கு ஐந்து கிலே
வழங்கப்படும்.

# புலியுடன் கயிறு





# சந்தோஷம் பலவிதம்!

- குமார் கணேசன் -

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலை. ஒருவருக்குப் பத்து ரூபா கஷ்டம் என்றால் இன்னொருவருக்குப் பத்து கோடி கஷ்டம். அவரவர் கஷ்டம் அவரவருக்குப் பெரிதாய்த் தெரியும்.

அந்தக் கிராமத்தில் அவன் தன் மனைவி, நான்கு குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தான். வாழ்வின் தொல்லை அவனை வாட்டியதால் துறவுதான் தீர்வு என எண்ணி இரவோடு இரவாக வீட்டை விட்டு தொலைதூரம் சென்றான்.

அங்கே இன்னொரு கிராமத்தின் எல்லையில் ஒரு கோவில் மரத்தடியில் அமர்ந்து கொண்டான்.

புதிதாக சாமியார் ஒருவர் வந்திருக்கிறார் என எண்ணி அவருக்கு அன்னமிட்டு வணங்கினர் அந்த ஊர் மக்கள். வெயில், மழையால் பாதிக்காமலிருக்க ஒரு குடில் ஒன்று அமைத்துத் தந்தனர்.

குடிலில் எலித்தொல்லை இருப்பதை அறிந்த மக்கள் பூனை ஒன்றைக் கொடுத்தனர். பூனைக்குப் பால் வேண்டி இன்னொரு பசுவும் தந்தனர்.

பசுவை யார் பராமரிப்பது என யோசித்து விட்டு, சாமியாருக்கு உணவு சமைக்கவும், பாத்திரங்களை சுத்தம் செய்யவும், பசுவைப் பராமரிக்கவும் வேலைக்கு ஒரு பெண்ணை வைத்தனர்.

சில மாதங்கள் கழித்து அந்த வேலைக்காரியையே திருமணமும் செய்து கொண்டான் அவன். வாழ்க்கையும் சந்தோஷமாகப் போனது. இருவரும் சில குழந்தைகளையும் பெற்றுக் கொண்டார்கள்.

மீண்டும் குடும்பத் தொந்தரவு. துறவு பற்றிய அதே பழைய சிந்தனை.

கஷ்டங்களை விட்டு நாம் ஓடி விடமுடியாது. அதை எதிர் கொள்ள வேண்டும். பிரச்சினையில் இருந்து விலகிச் செல்கிறோம் என்றால் அதன் தீர்வில் இருந்தும் தூரம் செல்கிறோம் என்றுதான் பொருள். எங்கு போனாலும் அது நம்மைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

மகிழ்ச்சி என்பது எதையும் எதிர்பார்த்து அது கிடைத்தால் வருவது இல்லை. ஏற்கனவே இருப்பதில் கிடைப்பது அது. ஆனால் பலர் தமக்கு இது கிடைத்தால் மகிழ்வேன் அது நடந்தால் சந்தோஷப்படுவேன் என்று நிபந்தனை போடுவதைக் காணலாம்.

இன்று நம்மிடம் இருப்பது கூட ஒரு நாள் கனவாக இருந்ததுதான். அது நடந்தவுடன் இன்னொரு கனவை மனதில் கொண்டு அது நடக்கும் வரை சந்தோஷமாக இருக்கமாட்டேன் என்று பிடிவாதமாக இருப்பது நல்லதல்ல.

மகிழ்ச்சியும் ஓர் இலக்கு அல்ல, மாறாக வாழ்க்கைப் பயணமாகும். ஒவ்வொரு பொழுதையும் மகிழ்ச்சியாய் கழிக்க வேண்டும்.

# ஒலிம்பிக்கில் நாடற்றவன்

ஜூலை 27ஆம் திகதி ஒலிம்பிக் விளையாட்டுகள் ஆரம்பமான போது, வீரர்கள் அணிவகுப்பில் 204 நாடுகள். கலந்துகொண்டவர்கள் பெருமையுடன் அந்தந்த நாட்டுக் கொடிகளை தாங்கிச் சென்றார்கள். அந்த அணிவகுப்பில் நாடற்ற ஒருவனும் இருந்தான். அவனுக்கு நாடில்லாத படியால் அவன் கையில் ஒலிம்பிக் கொடி. அவனுக்குப் பின்னால் அணிவகுத்துச் செல்ல வேறு வீரர்கள் இல்லை. 9 ஜூலை 2011இல் தனி நாடாக சுதந்திரம் அடைந்த தெற்கு சூடானைச் சேர்ந்தவன் அவன். அவன் பெயர் குவோர் மாரியல்.

குவோர் மாரியலுக்கு 28 வயது. தெற்கு சூடானிலிருந்து அமெரிக்காவுக்கு அகதியாக 12 வருடங்களுக்கு முன்னர் குடிபெயர்ந்தான். அவனுக்கு வசிப்பிட உரிமை கிடைத்தது. ஆனால் குடியுரிமை கிடைக்கவில்லை. அவன் தீவிரமான மரதன் ஓட்டக்காரன். ஆனாலும் 2012 லண்டன் ஒலிம்பிக்கில் அவன் ஓடமுடியாது என்று கூறிவிட்டார்கள். அப்படி ஓடுவதென்றால் அவனுக்கு ஒரு நாடு வேண்டும். சூடான் ஜனாதிபதி அவன் சூடான் நாட்டுக் கொடியின் கீழ் ஓடலாம் என அழைப்பு விடுத்தார். அவர்களின் அட்டூழியம் தாங்கமுடியாமல்தான் அவன் 12 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவில் அகதியானான். சூடான் நாட்டு கொடியின் கீழ் ஓட அவன் சம்மதிக்கவில்லை. தெற்கு சூடான் சுதந்திரம் அடைந்திருந்தாலும் அதனிடம் ஒலிம்பிக் குழு இல்லை. அதனால்தான் இப்பொழுது இந்த நாடற்ற மனிதனுக்கு ஒலிம்பிக் கொடியின் கீழ் ஓட அனுமதி கிடைத்திருக்கிறது.


குவோர் மாரியலுக்கு ஓட்டம் இயற்கையாக வந்தது. சமீபத்தில் மரதன் ஓட்டத்தை 2 மணி 14 நிமிடம் 32 செக்கண்டில் ஓடி முடித்து ஒலிம்பிக் மரதனுக்கு தகுதி பெற்றிருந்தான். ஆனால் நாடில்லாத அவனை அமெரிக்கா கவனித்ததாக தெரியவில்லை. எனவே 3500 கையெழுத்தாளர்கள் குவோல் மாரியலுக்கு ஒலிம்பிக் போட்டியில் பங்குபெற அனுமதி கொடுக்கவேண்டும் என ஒலிம்பிக் குழுவுக்கு மனு அனுப்பினார்கள். ஒலிம்பிக் போட்டிகளுக்கு ஒரு வாரம் இருந்தபோது அனுமதி கிடைத்திருக்கிறது. இதைப் பெரிய வெற்றியாக பத்திரிகைகள் கொண்டாடின. ஒரு பத்திரிகை "தெற்கு சூடானின் குரல் ஒலிம்பிக்வரை கேட்டது" என்று எழுதியது. இன்னொரு பத்திரிகை "இந்த தனிமனிதனின் வெற்றியை பூமி மகனின் வெற்றி என கருதலாம்" என எழுதியது.

நான் சூடான் நாட்டில் சில வருடங்கள் வேலை பார்த்திருக்கிறேன். என்னுடைய அலுவலகத்தில் வேலை செய்த அத்தனை பேருமே அரபு மொழி பேசுபவர்கள், வடக்கு சூடானை சேர்ந்தவர்கள். ஆனால் தெற்கு சூடானில் இருந்து வந்த ஒருத்தனும் அங்கே வேலை பார்த்தான். அவன் பெயர் மாலோங். அவனுக்கு அரபு தெரியாது. கறுப்பாக உயர்ந்துபோய், கரண்டியின் பின்பக்கத்தில் தெரியும் உருவம்போல வளைந்துபோய் இருப்பான். வேலையில் கெட்டிக்காரனான இவனிடம் நான் மிகுந்த அன்பு பாராட்டினேன். ஆனால் இவனுக்கு இரண்டு பிரச்சினைகள் இருந்தன. ஒன்று, இவனுக்கு அரபு மொழி தெரியாது. இரண்டு, இவனும் இவனுடைய குடும்பத்தவரும் அடிமை வாழ்க்கை வாழ்ந்தவர்கள். இவனுக்கு குரலை உயர்த்தவோ எதிர்த்துப் பேசவோ தெரியாது. உத்தரவுகளுக்கு அடிபணிந்து மட்டுமே பழகியவன்.

இவனை, தெற்கிலிருந்து வந்த ஒரே காரணத்துக்காக அலுவலகத்திலிருந்த அத்தனை பேரும் வெறுத்தார்கள், ஒதுக்கினார்கள். சூடானுக்கும், விடுதலை கோரும் தெற்கு சூடானுக்கும் இடையில் உள்நாட்டு போர் மூண்டிருந்த காலம் அது. அதனால் அவனுடன் ஒருவரும் பேசுவதில்லை. அலுவலக பணியாளர்கள் வரும் பஸ்ஸில் அவன் ஏற முடியாது. அலுவலக உணவு மேசையில் அமர முடியாது. மற்றவர்கள் மேசையில் அமர்ந்து உணவு உண்ணும்போது அவன் பாத்ரூம் அருகே, சுவர் பக்கமாக திரும்பி நின்றபடி தன் உணவைச் சாப்பிடுவான். ஒருநாள் காரியதரிசி என்னிடம் சொன்னாள் "தெற்கிலேயிருந்து இங்கே வந்து வேலை செய்பவன் மாலோங். அவனிடம் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இவன் விலங்கு வணங்கிகள் இனத்தைச் சேர்ந்தவன். இவனும் ஒரு விலங்குதான்."

ஒருநாள் காலையில் அலுவலகத்துக்கு வந்த மாலோங் மாலை அங்கே இல்லை. மறைந்துவிட்டான். பின்னர் அலுவலகத்துக்கு அவன் வரவே இல்லை. அவன் மேசையில் ஒரு கடிதம் பாதி எழுதப்பட்ட நிலையில், பாதி வசனத்தில் நின்றது. எங்கே ஓடினான். யார் துரத்தினார்கள் என்பது என்றுமே அவிழ்க்க முடியாத புதிராகிவிட்டது. எங்கே இருந்தாலும் அவன் இன்று சுதந்திர மனிதன்.

12 ஆகஸ்ட் 2012 லண்டன் ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி நடைபெறும். பல்வேறு நாடுகளிலுமிருந்து நூற்றுக்கு மேற்பட்டோர் இந்த 42.195 கி.மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்வர். அந்தக் கூட்டத்தில், ஒரு பெண்ணால் "விலங்கு வணங்கிகள்" என்று வர்ணிக்கப்பட்ட இனத்திலிருந்து வந்த குவோர் மாரியல் இருப்பான். இந்த மரதன் ஓட்டக்காரன் ஓடுவதை பார்க்கும் போது சுதந்திரமடைந்த தெற்கு சூடான் மக்களை நினைந்து கொள்வேன். என்னுடன் வேலைசெய்து பாதியிலே வேலையை துறந்து எனக்குச் சொல்லாமலே ஓடிப்போன மாலோங்கை நினைந்து கொள்வேன். சூடான் உள்நாட்டு போரிலே மடிந்த 1.5 மில்லியன் மக்களை நினைந்து கொள்வேன். என் கண்கள் மாரியலின் ஓட்டத்தை மட்டுமே பார்க்கும். அவன் முதலாவதாக வந்தாலும் சரி, கடைசியாக வந்தாலும் சரி, 2012 ஒலிம்பிக் மரதன் ஓட்டவீரன் அவன்தான். நாடற்றவன்.




அ. முத்துலிங்கம்

# கவிஞனின் மீசை




பாரதியார் காசியில் கல்லூரியிலே படித்த காலத்தில் அவருடன் படித்த மாணவர்கள் எல்லோருமே மீசை வளர்ப்பது வழக்கம். பாரதியார் வாரந்தோறும் மீசையை மழித்துவிட்டு வகுப்புக்குச் செல்வாராம். மற்ற மாணவர்கள் பாரதியாரைப் பார்த்து, "நாங்கள் எல்லாம் எங்கள் வீட்டிலே யாராவது இறந்துவிட்டால் மீசையை மழித்துக் கொள்வோம். நீ வாரந்தோறும் மீசையை மழித்துக் கொள்கிறாயே, அப்படியென்றால் வாரந்தோறும் யாராவது உங்கள் வீட்டில் இறந்துவிடுகிறார்களா?" என்று கேட்டனராம். அதைக் கேட்ட பாரதியார் துணுக்குற்று அன்று முதல் வளர்த்த மீசைதான் அந்த அழகான முறுக்கு மீசை.

மொழியை கேள்விப்பட்டிருப்பீர்கள்.
வைத்து, இழுக்கும் போட்டியை
மரிக்காவின் புளோரிடா
ருகக் காட்சிச்சாலையில் தான்,
றுகிறது. இங்கு 2,700இற்கும்
வருகின்றன. இந்த மிருகக்
கவர்வதற்காக, அவ்வப்போது
வது வழக்கம். தற்போது
புடனான கயிறு இழுக்கும்

பி வேலிக்குள் அடைத்து
யில், சிறிய துளை போடப்பட்டு,
ன்று வைக்கப்பட்டுள்ளது. இந்த
ள் இருக்கும் புலியின் வாயில்
வலிக்கு வெளியில் உள்ள
கப்படும். போட்டி துவங்கியதும்,
போட்டியாளரும், கயிறை பலம்
ல் பங்கேற்ற பார்வையாளர்
ளிக்கப்படும். அதே நேரத்தில்,
கிலோ இறைச்சி, கூடுதலாக,

# று இழுத்தல்!



# ராஜாஜியும் முட்டையும்

கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ள ராஜாஜி சைக்கிள் ரிக்ஷாவில் சென்று கொண்டிருந்தார். சில விஷமிகள் அவர் மீது அழுகிய முட்டைகளை எறியத் தொடங்கினர். ஆனால் ரிக்ஷாக்காரர், அவர் மீது முட்டைகள் படாதவாறு வேகமாகவும் லாகவமாகவும் ரிக்ஷாவை ஓட்டிச் சென்றுவிட்டார். இதைப் பார்த்த சில நிருபர்கள் ராஜாஜியிடம் வந்து, "முட்டை எறிந்தவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டனர். "அவ்வளவு குறி பார்த்து எறியத் தெரிந்திருந்தால் இந்நாள் வரை ஆங்கிலேயர் இங்கு இருக்க முடியுமா?" என்று அமைதியாகக் கேட்டாராம் ராஜாஜி.



# சிறந்தது

தாயைவிட மேன்மையான ஆசான் இல்லை

பொறுமையை விட வலிமையான ஆயுதம் இல்லை

கல்வியைவிட மிகப்பெரிய இலாபம் இல்லை

சாந்திக்குச் சமமான சுகம் வேறு இல்லை

- வால்மீகி இராமாயணம்

# Zorba சொல்லித்தரும் 8 விஷயங்கள் உங்களை மாற்றி அமைக்கவல்ல புத்தகம்

- பிச்சைக்காரன்




() ஒரு பெண் இயேசு மீது கொண்ட அன்பால் விலை உயர்ந்த தைலத்தால் அவருக்கு அபிஷேகம செய்தாள். அதைக் கண்ட சிலர், இது வீண் செலவு. அந்தத் தைலத்தை விற்று ஏழைகளுக்கு உதவி இருக்கலாம் என்றனர். இயேசு இந்தக் கருத்தை மறுத்துப் பேசினார்.

() கோயில் சிலைகளுக்கு பால் அபிஷேகம் செய்வதற்கு பதில், அந்தப் பாலை மக்களுக்கு இலவசமாகக் கொடுக்கலாம் என அவ்வப்போது சிலர் ஆலோசனை சொல்கின்றனர்.

() சும்மா ஊர் சுற்றிப் பார்ப்பதை, வெளியூர் செல்வதை தமிழர்கள் பெரும்பாலும் விரும்புவதில்லை. ஏதேனும் வேலை இருந்தால் மட்டுமே பயணம் மேற்கொள்கின்றனர்.

() இலக்கியப் புத்தகங்களை விட நேரடி பலன் தரக்கூடிய புத்தகங்களே அதிகம் விற்பனை ஆகின்றன.

இது போன்ற பல உதாரணங்களை அன்றாடம் பார்க்கிறோம். எதற்குமே காரணம் தேவைப்படுகிறது. உணர்வு பூர்வமாக செய்வதை விடஇலாபம தரக்கூடியதை செய்வதையே விரும்புகிறோம்.

உதாரணமாக ஒருவன் இரவு முழுதும் விழித்து வேலை செய்தால், அவனை நம் மனம் உயர்வாக நினைக்கும், ஆனால் ஒருவன் இரவு முழுதும் விழித்து பவுர்ணமியை இரசிக்க நினைத்தால், அவனை பைத்தியக்காரன் என்றே நினைப்போம்.

அறிவுபூர்வமாக வாழ்வதால் பலவற்றை இழக்கிறோம் என்பது ஒரு புறம்.

இன்னொரு வகை உண்டு.

என் நண்பர் ஒருவர் லீவு போட்டு விட்டு ஊட்டி சென்று வந்தார். அங்கு போய் வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் அனுபவித்ததாக சொன்னார். அங்கு போய் என்ன செய்தார்? ஒரு ரூம் போட்டு, நாள் முழுக்க குடித்துக் கொண்டு இருந்தாராம். அதை இங்கேயே செய்து இருக்கலாமே என நினைத்து கொண்டேன். அவர் வாழ்வை அனுபவித்தாரா அல்லது வாழ்க்கையின் சவாலை எதிர் கொள்ள முடியாமல், ஊட்டிக்குத் தப்பிச் சென்றாரா என்பது தெரியவில்லை.

அறிவு பூர்வமாக வாழ்ந்தாலும் இழப்புதான்.



உழைக்கப் பயந்து கொண்டு வேறு ஏதாவது ஒன்றுக்கு அடிமையாகி, அதுதான் மகிழ்ச்சி, அதுதான் உல்லாசம் என நினைப்பதும் தவறுதான்.

சரி அப்படியானால் balanced life என்பது என்ன?

Zorba the greek எனும் நாவல் இதற்கு விடை அளிக்கிறது.

கசான்ஸ்சாகிஸ் படைத்த நாவல்தான் இந்த 'ஸோர்பா எனும் கிரேக்கன்'

**என்ன கதை?**

அறிவு ஜீவியாக வாழும் ஒருவன், வாழ்க்கையில் சலிப்புற்று தீவு ஒன்றுக்கு பயணம் மேற்கொள்ள விரும்புகிறான். (இவன் சொல்வது போல கதைப்போக்கு அமைந்துள்ளது) கிட்டத்தட்ட இறந்து போன நிலையில் இருக்கும் நிலக்கரிச் சுரங்கத்துக்கு உயிர் கொடுத்து நடத்தி, தன் முத்திரையை பதிப்பது அவன் ஆசை. படகுக்காக காத்து இருக்கும் நேரத்தில் ஸோர்பா எனும் வயதானவரை சந்திக்கிறான். அவரது இசை, இனிய பேச்சால் கவரப்படுகிறான். அவர் தனக்கு வேலை போட்டுத் தந்து தன்னையும் அழைத்துச் செல்லக் கோருகிறார். அவன் ஏற்கிறான்.

சென்ற இடத்தில் காதல், மோதல் எல்லாம் நடக்கிறது. அவ்வப்போது முதலாளிக்கும் (கதை சொல்லிக்கும்) வேலையாளுக்கும் (ஸோர்பா) இடையே பல விஷயங்கள் குறித்து உரையாடல் நடக்கிறது.

ஸோர்பாவை கவனிப்பது இவன் மனதில் பெரும் மாற்றங்களை உருவாக்குகிறது. வாழ்வை கொண்டாடுதல் என்பது முழுமையாக வாழுதலே என உணர்கிறான். சிறிய விஷயங்களைக் கூட அனுபவித்து இரசிக்கலாம் என்பது புரிகிறது. எல்லாம் நல்லபடியாக சென்று கொண்டு இருக்கும்போது, கையில் காசு இருக்கும் போது மட்டும் மகிழ்ச்சியாக இருப்பது பெரிய .விஷயம் அல்ல. கடும் சோதனையின்போதும், வாழ்வின் மீது நம்பிக்கை வைத்து இருக்க வேண்டும் என்பது புரிந்து ஊர் திரும்புகிறான்.

கதையை விட ஸோர்பாவின் பாத்திரப் படைப்புதான் அபாரம். அன்றைய விமர்சகர்கள் எழுதினார்கள்.. story is plot-less . but it is not pointless.

இதை விட சுருக்கமாக இதை விமர்சிக்க இயலாது.. நாவல் என்ற முறையில் இதன் தகுதி சற்று சந்தேகிக்கப்பட்டு, நோபல் பரிசை இழந்தது. பிற்காலத்தில்தான் இந்த நாவலின் உன்னதத்தை உணர்ந்தார்கள்.

முதலில் படிக்கும்போது, சாதாரணமாகத்தான் தோன்றும். சில முறை படித்தால்தான், இதில் ஒளிந்து கிடக்கும் விஷயங்கள் புரியும்..

இந்த நாவல் பல விஷயங்களைச் சொன்னாலும், என்னைக் கவர்ந்த முதன்மை 8 விஷயங்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**1. முழுமையாக வாழுங்கள்.**

எதைச் செய்தாலும் முழு ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் கிடைக்கும் மகிழ்ச்சிக்கு எதுவும் ஈடாகாது. ஈடுபாட்டுடன் செய்ய முடியாத வேலையில் இருக்கும் பட்சத்தில், கூடிய சீக்கிரம் வேறு வேலையை செய்ய ஆரம்பிப்பது நல்லது.

**2. உங்களை மட்டுமே நம்புங்கள்.**

இன்றைய நண்பன் நாளைய எதிரி ஆகலாம். எல்லாமே மாறக் கூடியது, மனிதர்கள் உட்பட. எதுவும், யாரும் உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் ஒரே நபர் நீங்கள் மட்டுமே. இதிலும் ஒரு ட்விஸ்ட் இருக்கிறது. நேற்றைய நீங்களோ, நாளைய நீங்களோ கூட உங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. இன்று, இப்போது மட்டுமே இருக்கும் நீங்கள் மட்டுமே உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறீர்கள். ஆகவே இந்த கணத்தை முழுமையாக வாழுங்கள்.

நாவல் என்ற முறையில் இதன் தகுதி சற்று சந்தேகிக்கப் பட்டு, நோபல் பரிசை இழந்தது. பிற்காலத் தில்தான் இந்த நாவ லின் உன்னதத்தை உணர்ந்தார்கள். முத லில் படிக்கும் போது, சாதாரணமாகத்தான் தோன்றும். சில முறை படித்தால்தான், இதில் ஒழிந்து கிடக்கும் விஷயங்கள் புரியும்..

**3. பழமையின் கண் கொண்டு பார்க்காதீர்கள்.**

ஒரு புத்தகத்தை படிக்கும்போதோ, ஒருவர் சொல்வதை கேட்கும்போதோ, உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த அனைத்தையும் மறந்து விட்டு, புதிதாக கேட்பது போல கேட்டால், படித்தால் முழுமையான பலன் கிடைக்கும். சாலையில் செல்லும்போது, எப்போதும் செல்லும் பாதைதானே என அசட்டையாக செல்லாமல், விழிப்புணர்வுடன் சென்றால், சாலை ஓரத்தில் மலர்ந்து இருக்கும் புதிய மலர் கண்ணில் படக்கூடும்.

எதற்குமே காரணம் தேவைப் படுகிறது. உணர்வு பூர்வமாக செய்வதை விட இலாபம் தரக் கூடியதை செய்வதையே விரும்புகிறோம். உதாரணமாக ஒருவன் இரவு முழுதும் விழித்து வேலை செய்தால், அவனை நம் மனம் உயர்வாக நினைக்கும், ஆனால் ஒருவன் இரவு முழுதும் விழித்து பவுர்ணமியை இரசிக்க நினைத்தால், அவனை ப்பைத் தியக்காரன் என்றே நினைப் போம்.

**4. பயம் வேண்டாம்.**

ஒரு கவிஞர்தன் காதலியை பற்றி வர்ணிக்கையில் 'வினை முடிதன்ன இனியள்' என வர்ணிப்பார். ஒரு வேலையில் முழுமையாக ஈடுபடுவது, காதலியுடன் ஜாலியாக பேசிக்கொண்டு இருப்பது போல இனிமையானது. மதுவைப்போல போதை தருவது. இந்த நிறைவில் பயம் என்பதே இருக்காது.

**5. இந்த கணத்தில் வாழுங்கள்.**

கடந்த காலம் என்பதை வரையறுக்கலாம். எதிர்காலம் என்பதையும் வரையறுக்க முடியும். நிகழ்காலம் என்பதை மட்டும் வரையறுக்கவே முடியாது. நாம் அதைப்பற்றி நினைக்கும் முன்பே அந்த நிகழகாலம், கடந்த காலம் ஆகி இருக்கும். செய்யும் செயலில் முழுமையாக ஈடுப்பட்டு, அந்த செயலாகவே மாறி விடுவதே நிகழ்காலத்தில் வாழ்வதாகும். இதை விட சிறந்த தியானம் ஏதும் இல்லை.

**6. உலகத்தை நம்மால் மாற்ற முடியாமல் போகலாம். ஆனால் நம்மை மாற்றிக் கொள்ளலாம்.**

உலகம் அபத்தங்களால் ஆனது. எதிர்பாராமல் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். அதை நம்மால் கட்டுப்படுத்த இயலாது. ஆனால் நாம் அவற்றை எப்படி கையாள்கிறோம் என்பதை நாம் கட்டுப்படுத்தலாம்.

**7. அடிமையாகவும் வேண்டாம், பயப்படவும் வேண்டாம்.**

ஒரு விஷயத்தை முழுமையாக செய்வதே அதில இருந்து தப்பிக்கும் வழியாகும். சிகரெட் பிடிக்க ஆசையாக இருக்கிறதா? ஆசை தீரும் அளவுக்கு புகைத்து தள்ளிவிட்டு, அடுத்த விஷயத்துக்கு நகர வேண்டும். ஒரே விஷயத்தில் கட்டுண்டு கிடப்பது ஆபத்தானது. ஒரு விஷயத்தை அனுபவிக்கப் பயந்து கொண்டு, ஏங்கி கொண்டே இருப்பது அபத்தமானது.

**8. குழந்தைத்தனத்தை இழந்து விடாதீர்கள்.**

எல்லாவற்றையும் கணக்குப் பார்த்துச் செய்தால், வெறும் மெஷினாகத்தான் இருப்போம். கொஞ் சம் பைத்தியக்காரத்தனம், குழந்தைத்தனம் தேவை.

கண்டிப்பாக படியுங்கள். உங்கள் மனதில் சிம்மாசனம் இட்டு அமர்ந்து கொள்வார் zorba. ஒரு மாறறத்தை உணர்வீர்கள்.. படிக்கப் படிக்க ஏராளமான விஷயங்கள்.

## - ஊடக வளங்கள் பயிற்சி மையம் -

# மாணவர்களுக்கு சிறந்த பயிற்சியை வழங்குகிறது

## – மையத்தின் பணிப்பாளர்



(கிரு.சிகரம்)

2002 ஆம் ஆண்டு யுனஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் தற்போது 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள தாகவும், கடந்த காலங்களில் தனியாரால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வா றான நிறுவனங்கள் பல தற்போது இல்லாது போயுள்ள நிலையில், தமது ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் திறம்பட இயங்கி வருகின்றது,என இந்நிகழ்வில் தலைமையுரையை வழங்கிய யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் பணிப்பாளர் தே.தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் நான் காம் அணி மாணவர்களின் 'எழுத்தாணி' என்ற சஞ்சிகையின் ஐந்து இதழ்கள் ஒரே சமயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.20 மணிக்கு ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் வெளி யிட்டு வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

கடந்த 10 ஆண்டுகளில் இந்த நிறுவனத்தில் இருந்து வெளி யேறிய மாணவர்களில் 60% மானவர்கள் தற்போது ஊடகத் துறையில் பணியாற்றி வருவதுடன், குறிப்பிட்டத்தக்க சிலர் வெளி நாடுகளில் சென்று குடியேறியுள்ளனர். 2012 இறுதியில் 30 மாணவர்களைக் கொண்ட அணி ஊடகக்கற்கை நெறியில் விசேட பட்டப்படிப்பை பூர்த்திசெய்து வெளியேற உள்ளனர் என்றார்

இவரைத் தொடர்ந்து நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டுசஞ்சிகையினை வெளியிட்டு வைத்து உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவ நாதன், தற்போது யாழ்ப்பாணத்தில் பல இளம் ஊடகவியலாளர்கள் ஊடகத் துறையில் கடைமையாற்றுவதாகவும், அவர்களுக்கு தற்போதும் மொழியாற்றல் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகிறது. வருங் காலத்தில் இவர்கள் எல்லோரும் தமது மொழியாற் றலை விருத்தி செய்ய வேண்டும் என்றார்.

தொடர்ந்து, 'எழுத்தாணி' சஞ்சிகை இதழ்களின் ஆய்வுரை களை வழங்கிய யாழ்.பல் கலைக்கழக விரிவுரையாளர் கள், 'சுடர் ஒளி'ப் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் வித்தியாத ரன் மற்றும் எழுத்தாளரும் இலக் கியவாதியுமான சத்தியபாலன் ஆகியோர் சஞ்சிகைகளில் உள்ள கட்டுரைகள் நன்றாக இருப்பதா கப் பாரட்டியதுடன், கட்டுரை, பக்க வடிவமைப்பு ஒளிப் படங்களின்




அமைப்பு, தமிழ் எழுத்துக்களில் அதிகம் தவறு கள் காணப்படுவ தாகவும் சுட்டிக்காட்டினர்.

இவை மாணவர்களுடைய தவறா? அல்லது ஆசிரியர்க ளின் தவறா? என்பதை தம்மால் குறிப்பிட்டு கூறமுடியாது உள் ளதாகவும் அவர்கள் குறிப்பிட்ட னர்.

உதாரணமாக வெளியிடப் பட்டுள்ள இதழ் ஒன்றில் ஆலோ சனைக்குழு என கூறிவிட்டு ஒருவருடைய பெயர் மட்டும் போடப் பட்டுள்ளதால் குழு என்பதற் குரிய பொருளையே மாற்றியுள் ளதாகவும், இந்த சஞ்சிகைகள் மாதாந்த சஞ்சிகையா, ஆறு மாத சஞ்சிகையா, பதினைந்து நாள் சஞ்சிகைகளா என தங்க ளால் ஊகிக்க முடியாது உள்ள தாகவும் அவர்கள் குறிப்பிட்ட னர்.

இதற்கு முன்னரும் நான்கு இதழ்கள் வெளியிடப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஊடக வளங்கள் பயிற்சி மையம் யாழ். பல்கலைக் கழகத்துடன் இணைந்து இயங்கி வருவதனாலேயே இன்றும் நிலைத்து நின்று ஏராளமான மாணவர்களுக்கு பயிற்சிய ளித்து வருகிறது.

யாழ். ஊடக வளங்கள் பயிற்சி மையமாணவர்களின் உருவாக்கத்தில் வெளிவரும் இந்த இதழ்கள் யாழ்ப்பாணத் தில் உள்ள பல்வேறுபட்ட விட யங்களையும் வெளிக்கொண்டு வரும் வகையில் அமைந்துள் ளன.

இந்த நிகழ்வில் FOJO foundation நிகழ்ச்சித்திட்ட முகா மையாளர் திருமதி பி:.யோனோ பார்ன்ட் சிறப்பு விருந்தின ராகவும் பல்கலைக்கழக விரிவு ரையாளர்கள், ஊடகவியலாளர் கள், எழுத்தாளர்கள், விமர் சகர்கள், ஊடகவியல் மாணவர் கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## நாவலர் கலாசார மண்டபத்தில்

# அரிவாட்டாய நாயனார்புராண கருத்தரங்கு

பெரியபுராணத்தில் அரிவாட்டாயநாயனார் புராணம் பற்றிய கருத்தரங்கும் கலந்துரை யாடலும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவவித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் கடவுள் வாழ்த்தினை சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் இசைப் பார். வரவேற்புரையை சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு.பாலஷண்முகனும் தொடக்க வுரையை யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாசும் வழங்குவர்.

நிகழ்வில் 'அரிவாட்டாய நாயனார் புராணக் கட்டமைப்பு' என்ற பொருளில் யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் தி.செல்வமனோகரனும் 'அமுது செய்விக்க மூளும் அன்பு' என்ற பொருளில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கருத்து ரைகளை வழங்கவுள்ளனர்.

கருத்தரங்கைத் தொடர்ந்து கருத்தாடல் இடம்பெறும். இதன் இணைப்பாளர்களாக சொல் லின் செல்வர் இரா.செல்வவடிவேல், யாழ்.பல் கலைக்கழக இந்துநாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் ஆகியோர் செயற்படுவர்.

'அண்ணலார் அறுத்த கூலி' என்ற பொருளில் ஆடல் அளிக்கை இடம்பெறும் இதனை சுதுமலை புகழ் கல்வி நிறுவன மாணவர்கள் வழங்க வுள்ளனர். சமய இலக்கியங்கள் மீது இளை யோரின் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் ஆய்வு நோக்கில் இலக்கியங்களை அணுகும் திறனை வளர்த்தெடுக்கும் வகையிலும் இந்நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாகவும் ஆர்வமுள்ள எவரும் இதில் கலந்து பயன்பெறலாம் எனவும் நிகழ்வின் அமைப்பாளர்களான பேராசிரியர் அ.சண்முகதாஸ் விரிவுரையாளர் ச.லலீசனும் தெரிவித்துள்ளனர்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

நிறுவனம் ஒன்றில் பணிபுரிவதற்கு பெண்பிள்ளைகள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 233, நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்ற முக வரிக்கு 021 222 6113 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

சமையலாளர்கள் தேவை. ஆற்றலும் ஆர்வமும் உள்ள இரு பாலாரும் 0771993338 அல்லது 0772436615 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோ சகருக்கான வேலை வாய்ப்பு உள்ளது. ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் எதிர்வரும் 15.08.2012 இற்கு முன்னர் விண்ணப் பங்களை விற்பனை முகாமையாளர்,இலங்கை காப்புறுதிக் கூட்டுத தாபனம் இல 571 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் எனும் முக வரிக்கு அனுப்பி வைக்கவும்.

---

யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் இருந்து தகவல் சேகரிப்பாளர்தேவை. ஆர்வமுள்ளவர்கள்0774449591 இற்குதொடர்பு கொள்ளவும்.

---

கிளிநொச்சியில் இயங்கும் உணவகத்திற்கு கொத்து றொட்டி தயாரிப்பவர், சமையல் உதவியாளர், உணவு பரிமாறுபவர், சுத்தி கரிப்பாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் இல 59, புகையிரத நிலைய வீதி கிளிநொச்சி என்ற முகவரிக்கு அல்லது 0773679669 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

வீடியோ, எடிட்டிங் தெரிந்தவர்கள் உடன்தேவை. ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் 0771714414 இற்குதொடர்பு கொள்ள வும்.

---

நல்லூர் உற்சவ கால புத்தகக்கடை ஒன்றினை நேர்மையுடன நடத்த ஒருவர் தேவை. ஆர்வமுள்ள இருபாலாரும் 0772174751 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

ஏலைற் நிறுவனத்திற்கு கணினி அறிவுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. ஆர்வமுள்ள இருபாலாரும் எதிர்வரும் 03.08.2012 இற்கு முன்னர் விண்ணப்பங்களை Elate Computer System 676, K.K.S. Road Jaffna என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

---

Pageuaker, Coreldraw, Photoshop போன்ற மென்பொருட் களில் நல்ல அனுபவமும் திறமையும் உள்ளவர்தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0772174751 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நிர்வாக உத்தியோகத்தர் தேவை. 50வயதிற்கு மேற்பட்ட கணக்கு விடயங்கள் தெரிநித் தமிழ் ஆங்கிலப் புலமையுள்ளவர் விண்ணப்பங்களை எதிர்வரும் 04.08.2012 பிற்பகல் 4 மணிக்கு முன்னதாக தலைவர், ஆரச சார்பற்ற நிறவனங்களின் இணை யம் 40, கோவில் வீதி, யாழ்ப்பாணம், அல்லது jaffna cngos @gmail .com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

---

VOGT நிறுவனத்தால் நடாத்தப்பட்டு வரும் தையல் நிலை யத்திற்கு பெண்களுக்கான ஆடைகள் தைக்க தெரிந்த பெண் கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 021 226 3474 அல்லது 0771710201 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

சிறிலங்கா ரெலிக்கொமினுடைய தேவைத்திட்டத்திற்கு உடனடி யாக வேலையாடகள் சேர்த்துக்கொள்ளப்பட இருக்கின்றனர். கவர்ச் சிகரமான சம்பளம் வழங்கப்படும். தொடர்புக்கு 0779789341.

---

யாழ். நகரில் இயங்கும் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற் பனை நிலையத்தில் பணிபுரிவதற்கு வேலையாள்தேவை. கிழமை நாள்களில் நேரில் தொடர்புகொள்ளவும். இல 351 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

---

திருநெல்வேலியில் சைவபோசன குடும்பத்தில் வீட்டு வேலை. குழந்தை பராமரிக்க 30-40 வயதுக்கு உட்பட்ட பெண்தேவை. தொடர்புகளுக்கு 077 1659845.

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக்கு சபையின் அனைத்து பணிகளிலும் கடமையாற்றக்கூடிய சைவ சமயத்தைச்சேர்ந்த ஆண் ஒருவர் தேவை. அரசாங்க அல்லது தனியார் நிறு வனங்களில் பணியாற்றி இளைப்பாறியவர் விரும்பத்தக்கது. தகு திக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பத்தை சகல சுய விவரங்களுடனும் தலைவருக்கு அனுப்பி வைக்கவும். சைவபரி பாலன சபை, 66 கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

---

சுன்னாகத்தில் உள்ள கிளினிக்குக்கு பெண் உதவியாளர்கள் மற்றும் பார்மசி வேலைதெரிந்தவர் தேவை. முன்னனுபவம் உள்ளவர்களும், சுன்னாகத்துக்கு அண்மையில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ள லாம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். தொடர்புக்கு 0779604195 இற்கு மாலை 4மணி தொடக்கம், இரவு 8 மணி வரை தொடர்புகொள்ளவும்.

# வன்னி அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸ்...

## அர்ப்பணிப்பான உழைப்பால் மட்டுமே அபிவிருத்தியை விரைவுபடுத்த முடியும்



பணியாளர்கள் அர்ப்பணிப்போடும் தியாக சிந்தையோடும் உழைக்கும் பட்சத்திலேயே அபிவிருத்தி விரைவுபடுத்தப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உறுதிபடத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு கடந்த 28 ஆம் திகதி விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் கடற்தொழிலாளர் சங்கத்தினருடனும், மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடினார்.

இதில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மத்தியில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அவர்கள் வேலை வாய்ப்புடன் சமூக மேம்பாட்டையும் குடும்ப பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் அதேவேளை அர்ப்பணிப்போடும் தியாக சிந்தனையோடும் பணியாளர்கள் மகள் பணியாற்ற வேண்டும் எனவும் அத்துடன் சமூகக் கடமையிலிருந்து ஒரு போதும் விலகிவிடக் கூடாது என்பதுடன், இன்றுள்ள சூழலைப் பாதுகாத்து அதிலிருந்து மக்களுக்கான பணிகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

கடந்த காலங்களைப் போலல்லாமல் எதிர்காலங்களில் ஆக்கத்திற்காக உழைக்கும் அதேவேளை உங்கள் சார்ந்த சமூக மேம் பாட்டுக்காகவும் உழைக்க வேண்டும் என்பதுடன் சுயலாபத்திற்காக அல்லாமல் பொதுலாபத்திற்காகவும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்றும் இதன் மூலமே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இம்மாவட்டத்தை விரைவில் அபிவிருத்தி அடையச் செய்யலாம் என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, ஈ.பி.டி.பியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் கிருபன் ஆகியோர் உடனிருந்தனர்.

## கிளிநொச்சி பாரதி வித்தியாலய விஞ்ஞான கூடத்திற்கு அடிக்கல்



கிளிநொச்சி பாரதி மகாவித்தியாலய மகிந்தோதய விஞ்ஞானக் கூடத்தின் புதிய கட்டிடத்தொகுதிக்கான அடிக்கல்லை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நாட்டி வைத்தார்.



இப்பகுதியில் நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் மகிந்த சிந்தனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் விசேட செயற்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 13 பாடசாலைகளில் முதலாவது புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

பாடசாலையின் பௌதீக வளங்களை மேம்படுத்தும் நோக்கில் இரண்டு மாடிகளைக் கொண்டதாக 12 மில்லியன் ரூபா செலவில் இக்கட்டடம் அமையப் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ராஜேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவலர்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் உரையாற்றும்போது 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் கிராமப்புற பாடசாலைகள் நகர்ப்புற பாடசாலைகளின் தரத்திற்கு மேம்படுத்தப்படும் அதே வேளை இம் மாவட்டத்தின் கீழ் மேலும் பல பாடசாலைகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவச் செல்வங்களுக்கு மூலதனமாக கல்வியைப் புகட்ட வேண்டும் என்றும் அதன் மூலமே சிறந்ததொரு கல்விச் சமூகத்தை உருவாக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

## வீதி அகலிப்புப் பணிகள் தாமதம் நெல்லியடியில் பொதுமக்கள் சிரமம்

### — வர்த்தக சங்கத் தலைவர் கவலை

நெல்லியடி நகரப்பகுதியில் வீதி அகலமாக்கும் பணி மந்த கதியில் நடைபெற்று வருவதால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் அகிலதாஸ் தெரிவித்துள்ளார்.

நெல்லியடி பொதுச் சந்தை தொடக்கம் பருத்தித்துறை வீதி நெல்லியடி நகர நுளைவாயில் வரையான பகுதியில் வர்த்தகர்கள் பல மாதங்களுக்கு முன் வீதியகலிப்புக்காக ஒத்துழைப்பு வழங்கியும் அகலிப்புப் பணிகள் நடைபெறவில்லை.

தினமும் அவ்வீதியால் செல்லும் பயணிகள் குன்றும் குழிகளையும் தாண்டி சிரமத்தின் மத்தியில் செல்லவேண்டியுள்ளது. நகர வர்த்தகர்களும் வீதி தூசிகளினால் பல இலட்சம் ரூபா நட்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது வீதி அகலிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருந்த போது பகல் நேரத்தில் வேலை நடைபெறுவதால் வாகன நெரிசல்களுடன் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியும் உள்ளது. இதனால் வீதி விபத்துக்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. மனிதாபிமான அடிப்படையில் பொதுமக்களின் நலம் கருதி இரவு பகல் பாராது தொழிலாளர்களைப் கொண்டு பணியை தீவிரப்படுத்துமாறு பொதுமக்கள் தம்மிடம் முறையிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் பருத்தித்துறை தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான பிரதான வீதியில் வல்லை தொடக்கம் நெல்லியடி பொதுச் சந்தை வரையான வீதி அகலாமாக்கப்பட்டு இருவழிப் பாதையாக்கப்பட்டுள்ளது. இவ்வீதியில் வீதி சமிக்கைகள் எதுவும் இதுவரை இடப்படாமையினால் வேகம் அறியாமல் வீதி விபத்துக்கள் பல அண்மையில் இடம்பெற்றுள்ளன. இதனால் உயிர் இழப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

நெல்லியடி நகர நுளைவாயில் தொடக்கம் பருத்தித்துறை வீதி மாலிசந்தி வரையான வீதி அகலமாக்கப்பட்ட போதிலும் காப்பெற் வீதியாக மாற்றப்படவில்லை.

மாலிசந்தி தொடக்கம் பருத்தித்துறை வீதி இலகடி வரையிலான வீதி இன்னமும் அகலமாக்கப்படவில்லை. வீதி மிகவும் குன்றும் குழியுமாக சேதமடைந்து காணப்படுகின்றது.

இலகடி தொடக்கம் பருத்தித்துறை வீதி மந்திகை சிலையடி வரையான வீதி அகலிப்பு இடம்பெற்ற போதிலும் காப்பெற் வீதியாக மாற்றப்படவில்லை. மந்திகை சிலயடி தொடக்கம் பருத்தித்துறை வீதி முதலாம் கட்டை வரையான இடைப்பட்ட பகுதியில் சிறிய அளவில் வீதி அகலமாக்கப்பட்டுள்ளது. இதனால் கனரக வாகனங்கள் பெரும் சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றன. இவ்வீதியில் வீதி அபிவிருத்தி திணைக்களங்கள் காணப்பட்டுள்ள போதிலும் இவ்வீதி புறக்கணிப்பினால் சிறியதாக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை முதலாம் கட்டை சந்தி தொடக்கம் பருத்தித்துறை நகரம் வரையான வீதி இன்னமும் அகலமாக்கப்படாததுடன் நகரத்துக்கு வரும் பயணிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் சிரமங்களை எதிர்கொண்டும் வருகின்றனர்.

எனவே நெல்லியடி நகரம் தொடக்கம் பருத்தித்துறை நகரம் வரையான தூரம் வெகுவிரைவில் சீர்செய்து காப்பெற், வீதியாக மாற்றி அமைத்து வீதி விபத்துக்களை தடுக்க வீதி சமிக்கை பலகைகள், வீதிக்கோடுகளை இடுமாறும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

(116)

## புனரமைப்புக் கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயான அபிவிருத்திச் சபையின் புனரமைப்புக் கூட்டம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள சகலரையும் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு சபைச் செயலாளர் சி.புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

(11)

## வலி.வடக்கின் பரம்பரை வைத்தியராக

## ப.சக்திகா

வலி.வடக்கின் சித்த வைத்தியப் பரம்பரையின் வைத்தியராகத் திகழ்பவர் செல்வி பாலகுருநாதன் சக்திகா. சித்த ஆயுள்வேத வைத்தியம் வலி. வடக்கில் அற்றுப் போகாது தம் முன்னோர் வழி நின்று வைத்தியம் செய்பவர் இவர் கல்லாபாதி குலவித்தை என்பதற்கு ஏற்ப தந்தையின் விருப்பப்படி பேரனின் வழிநின்று பிணிநீக்கும் பணிக்குத் தம்மை அர்ப்பணித்து வருகிறார். சித்த ஆயுள்வேம் கற்று பரம்பரை வைத்தியம் செய்ய பின்நிற்கும் இன்றைய இளம் தலைமுறையினருக்கு இவர் ஒரு கலங்கரை விளக்கு.

இவரின் பேரனார் சித்த வைத்தியக் கலாநிதி கோ.சின்னத்தம்பி. இவர் சிறந்த சுதேச வைத்தியர், சிறந்த சக்தி உபாசகர், மனையடி சாஸ்திர சோதிடவிற்பன்னர், மிகுந்த பரோபகார சிந்தனையாளர். வலி.வடக்கு மக்களுக்கு பல ஆண்டுகள் வைத்திய சேவை செய்தவர்.

இவரின் வழியில் வந்துதித்தவரே செல்வி.சக்திகா வைத்தியர் சின்னத்தம்பியின் ஏக புதல்வன். பாலகுருநாதனின் ஏகபுத்திரியே சக்திகா ஆவார் பேரன் வழிநின்று சித்த மருத்துவத்தின் மகிமையை பறைசாற்றி வருபவர். பரம்பரை வைத்தியப் பயிற்சியுடன் சித்த ஆயுர்வேதக கல்லூரியில் 5 ஆண்டுகள் பட்டப் படிப்பை முடித்தவர். கல்லூரியில் படிக்கும் போது பல சாதனைகளைப் படைத்தவர். விரிவுரையாளர்களின் பாராட்டுக்களைப் பெற்றவர்.


தான் கற்றுக்கொண்ட சித்த ஆயுர்வேத வைத்தியத்தின் மகிமை பற்றி பல கட்டுரைகளை எழுதியவர். கவிதைகளைப் புனைந்தவர்.

ஆரோக்கிய காலாண்டு இதழிற்கு ஆயுர்வேதத்தின் மகிமை என்னும் கவிதையினையும் மக்கள் மருத்துவ காலாண்டு இதழுக்கு வாழ வைப்போம் வாழ்வோம் என்ற கவிதையைப் புனைந்தார்.

கவியுள்ளம் படைத்தவர். எழுத்தாற்றல் மிக்கவர். இவரது வைத்திய சேவை சிறக்க மக்கள் நலன் ஓங்கி இவரை வாழ்த்தி ஆசிர்வதிப்போம்.

N.P.ஸ்ரீந்திரன் (I.S.A)
வலிகாமம் கல்வி வலயம்

தரப்பட்டுள்ள தகவல்களுக்கு ஏற்ப பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

30. 
A, B, C, D, E, F ஆகிய ஆறு நகரங்களை இணைக்கும் பாதைகள் கீழே உருவப்படத்தின் மூலம் தரப்பட்டுள்ளன. அவற்றில் D எனும் நகரத்திலிருந்து E நகரத்தினூடாக F எனும் நகரம் வரைக்குமான தூரம் யாது?
1.8 km   2. 17 km   3. 14 km

**பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

31. அசுத்தமான நீரைப் பருகுவது தடுக்கப்படல் வேண்டும். அதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.
   1. அசுத்தமான நீர் சுவை குறைந்தது என்பதால் ஆகும்
   2. நோய்கள் பரவும் என்பதால் ஆகும்
   3. அசுத்தமான நீர்த் தட்டுப்பாடு என்பதால் ஆகும்

32. இலங்கை ஒரு தீவு ஆகும். அவ்வாறு கூறப்படுவது.
   1. இலங்கையைச் சுற்றிக் கடல் இருப்பதனால் ஆகும்
   2. இலங்கை இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருப்பதனால் ஆகும்
   3. இலங்கை மாங்காய் வடிவில் அமைந்திருப்பதனால் ஆகும்

33. இரவில் நித்திரைக்குச் செல்லும் முன் பல் துலக்குதல் வேண்டும். அதற்குக் காரணம்
   1. பல் துலக்கிய பின் நன்கு தூங்கலாம் என்பதால் ஆகும்
   2. பல் பாதுகாக்கப்படும் என்பதால் ஆகும்
   3. பற்கள் சக்தி பெறுகின்றன என்பதால் ஆகும்

34. மாணவர்கள் அதிகமாகப் புத்தகங்கள் வாசிப்பது சிறந்த ஓர் பழக்கமாகும். காரணம்.
   1. புத்தகங்கள் வாசிப்பதனால் அறிவு விருத்தியடையும் என்பதால் ஆகும்
   2. புத்தகங்கள் விலை குறைவு என்பதனால் ஆகும்
   3. ஆசிரியர்களும் புத்தகங்களையே வாசிக்கின்றார்கள் என்பதனால் ஆகும்

35. 0.001, 0.01, 0.1, 0.0001 இவைகளில் பெரிய எண்
   1. 0.001   2. 0.01   3. 0.1


36. நூறாயிரத்துப் பதினைந்து இதனை இலக்கத்தில் எழுதுக.
   1. 10015   2. 100015   3. 1500000

**பின்வரும் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.**


37. 1. வாழை ஒரு மரம். வாழை எமது நாட்டில் வளர்கின்றது.
   2. அரிசி ஒரு வகைத் தானியம். நெல்லைக் குற்றினால் அரிசி கிடைக்கும்
   3. புடோலங்காய் ஒரு வகைக் காய்கறி. புடோலங்காய் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்றது.

38. 1. நாய் வீட்டில் வளர்க்கப்படும் பிராணி. அது நான்கு கால்களை உடையது
   2. காகம் ஒரு பறவை. அது தாவர உண்ணி
   3. மனிதன் இரண்டு கால் விலங்கு. அவன் முலையூட்டிக்குரியவன்

**இப்படங்களில் சரியான ஒழுங்கு வரிசையைக் காட்டுகிற விடையின் கீழ்க் கோடிடுக.**

39. 

40. மாணவன் ஒருவன் காலையில் எழுந்து கால், முகம் கழுவி ஆயத்தமாகிப் பாடசாலை சென்று வகுப்பறையில் படிக்கும் விதத்தினைக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?







# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011


பகுதி - I
நேரம் -45 நிமிடம்


# கல்வி முரசு



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**கீழே முதலில் தரப்பட்டுள்ள உருவப்படத்துடன் தொடர்புடைய உருவப் படத்தை அதற்கெதிரே தரப்பட்டுள்ள உருவப் படங்களிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.**

01. 

02. 

1   2   3

**பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.**

03. அதிகாலையில் சேவல் கூவுவது.
   1. தூங்குபவர்களை எழுப்புவதற்காக
   2. இருள் மறைந்து ஒளி வரப்போவதை உணர்த்துவதற்காக
   3. தனது இறக்கைகளை அடிக்க வேண்டுமென்பதற்காக

04. 'கடி நாய் கவனம்' என்பது ஒரு
   1. கட்டளை   2. வேண்டுகோள்   3. ஆபத்தைக் குறிக்கும் வாக்கியம்

05. எனது வயது 36. எனது அம்மாவின் வயது எனது வயதின் இரண்டு மடங்கிலும் 6 வயதுகள் குறைவாகுமெனின், நான் பிறந்து 4 வருடங்களின் பின்னர் எனது அம்மாவின் வயது என்னவாக இருந்திருக்கும்?
   1. 30   2. 34   3. 36

06. அஜித் என்பவன் சஜித் என்பவனையும்விட இரு டொபிகள் அதிகமாகவும், ரஜித் என்பவனையும் விட நான்கு டொபிகள் அதிகமாகவும் வைத்துள்ளான். அஜித்திடம் 10 டொபிகள் இருப்பின் மூவரிடமும் உள்ள டொபிகள்.
   1. 12   2. 24   3. 36

07. தேங்காயின் விலை அதிகரிக்கின்றமைக்கான காரணம்.
   1. தென்னை மரங்களுக்கு உரம் போடாமை
   2. தென்னங் காணிகள் பெருமளவில் விற்கப்படுதல்
   3. தென்னை உற்பத்தி குறைவது

08. ரமணியின் வயது ரூபினியின் வயதின் அரைவாசியாகும். ரூபினியின் வயது தர்சினியின் வயதின் அரைவாசியாகும். மூவரினது வயதினதும் மொத்தம் 35 ஆண்டுகள் எனில், தர்சினிக்கு எத்தனை வயது?
   1. 15   2. 18   3. 20

09. ஒரு வாங்கில் பெண் பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். ஒரு பக்கத்தில் இருந்து கணக்கிடும்போது ரூபி 13 ஆவதாக அமர்ந்திருந்தாள். மறுபக்கத்திலிருந்து கணக்கிடும்போது அவள் ஆறாவதாக அமர்ந்திருந்தாள். வாங்கில் எத்தனை பெண் பிள்ளைகள் அமர்ந்திருந்தனர்.
   1. 18   2. 19   3. 21


10. வரட்சியான காலங்களில் மரக்கறிகளின் விலைகள் அதிகரிப்பிற்கான காரணம்.
   1. அக்காலங்களில் மரக்கறிகளின் உற்பத்தி மிகக் குறைவு என்பதால்
   2. விவசாயிகள் அக்காலங்களில் மரக்கறி உற்பத்தியை விரும்பாததால்
   3. அக்காலங்களில் போக்குவரத்து வசதிகள் போதியளவு இல்லாமையால்


11. மண்ணரிப்பு உள்ள இடங்களில் தாவரங்கள் நன்கு வளராமைக்கான காரணம்.
   1. அவ்வகையான இடங்களில் நீர் அதிகம் தேங்கி நிற்பதால்
   2. தாவரங்கள் வளர்வதற்குப் பொருத்தமான மண் அத்தகைய இடங்களில் இல்லாமையால்
   3. தாவரங்கள் வளர்வதற்குத் தேவையான மண்ணானது ஓடும் நீருடன் அடித்துச் செல்லப்படுவதால்

12. எங்கள் ஊரிலுள்ள அனேகமான வீடுகள் ஓடுகளினால் வேயப்பட்டிருந்தன எனின், இதிலிருந்து கூறக்கூடியது.
   1. எங்கள் ஊரிலுள்ளவர்களில் அனேகமானவர்கள் செல்வந்தர்கள்
   2. ஓடுகளினால் வேய்வது மற்றையவைகளையும் விட இலாபமானது
   3. ஓடு போடப்படாத வீடுகளும் எங்கள் ஊரில் உள்ளன.

13. டானியல் என்பவர் கார் விபத்து ஒன்றில் இறந்துவிட்டார் எனின், இதிலிருந்து கூறக்கூடியது.
   1. கார்ச் சாரதி மதுபோதையில் வண்டியை ஓட்டியிருப்பார்
   2. கார் வேகமா வந்து டானியலை மோதியிருக்கலாம்
   3. டானியல் பாதை ஓரமாக அவதானத்துடன் நடந்து சென்றிருப்பார்.

14. வயற் காட்டிலிருந்த மாடுகள் எல்லாம் தங்களது வால்களால் ஈக்களைத் தாக்கின எனின், இதிலிருந்து கூறக்கூடியது.
   1. வயற்காட்டிலிருந்த எல்லா மாடுகளுக்கும் ஈக்களைத் தாக்கக் கூடியளவிற்கு நீண்ட வால் இருந்திருக்கும்
   2. ஈக்களைத் தாக்குவது மாடுகளின் பொழுது போக்காகும்.
   3. ஈக்கள் மாடுகளுக்குக் கொடுத்த தொந்தரவாலேயே அவ்வாறு தாக்கியிருக்கலாம்

15. 

16. 


**17ஆம், 18ஆம் வினாக்களில் முதலில் அமைந்துள்ள வாக்கியத்தின் அதே கருத்தைக் கொடுக்கக்கூடிய விடையை அவற்றின் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.**

17. மலையைப் பார்த்து நாய் எவ்வளவுதான் குரைத்தாலும் மலை ஒருபோதும் சரியாது.
   1. மலை நாயையும் விடச் சக்தி வாய்ந்தது
   2. மலை ஒருபோதும் சரியாது
   3. கெட்டவர்களுடைய தீய வார்த்தைகளால் நல்லவர்களை ஏமாற்ற முடியாது


18. ஆற்றில் நீரைக் குடித்துவிட்டு கடலுக்கு நன்றி சொல்லுதல்
   1. ஆற்று நீரானது கடலிலிருந்தே பெறப்படுகின்றது
   2. ஒருவரிடமிருந்து உதவியைப் பெற்றுவிட்டு வேறொருவருக்கு நன்றி கூறுதல்
   3. கடல் நீரை ஒருபோதும் குடிக்க முடியாது

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

19. சதுரமுகி வடிவிலமைந்துள்ள இப்பெட்டியை விரிக்கும்போது தோன்றக் கூடிய உரு பின்வருவனவற்றுள் எது?





20. 

எல்லாப் பக்கங்களும் சமனாக அமைந்திருந்த காட்போட் பெட்டி ஒன்றை விரித்தபோது அது அருகேயுள்ளவாறு இருந்தது எனின், அப்பெட்டியின் உயரம் என்ன?
   1. 12 cm   3. 24 cm   3. 6 cm

**மாணவர்கள் சிலர் 5 பாடங்களில் பெற்ற புள்ளிகள் குறியீடுகளால் தரப்பட்டிருப்பதுடன், அவற்றின் மொத்தப் புள்ளிகளும் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி அதன் கீழ்க் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

| [illegible] | 1 ஆவது பாடம் | 2 ஆவது பாடம் | 3 ஆவது பாடம் | 4 ஆவது பாடம் | 5 ஆவது பாடம் | பெற்ற மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| [illegible] | □ | □ | □ | △ | △ | 400 |
| [illegible] | △ | △ | △ | △ | △ | ........ |
| [illegible] | □ | △ | ○ | ○ | ○ | 375 |
| [illegible] | □ | □ | ○ | ○ | △ | ........ |
| [illegible] | □ | □ | □ | □ | □ | 500 |

21. தாரகா பெற்ற மொத்தப் புள்ளிகள் எத்தனை?
   1. 250   2. 200   3. 300

22. றமணி பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கும், விமல் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?
   1. 300   2. 200   3. 100

23. 5 மாணவர்களும் சேர்ந்த அதிகூடிய புள்ளியைப் பெற்றது எப்பாடத்தில்?
   1. 2ஆம் பாடம்   2. 1ஆம் பாடம்   3. 3ஆம் பாடம்

24. ஐந்து பேரும் சேர்ந்து, ஐந்து பாடங்களிலும் பெற்றுள்ள மொத்தப் புள்ளிகள் எத்தனை?
   1. 1850   2. 1900   3. 1925

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

25. நீர்வீழ்ச்சி ஒன்றில் காண முடியாதது.
   1. நீர் மேலிருந்து கீழ்நோக்கி விழுதல்   2. படகுகள் செல்லும் காட்சி
   3. கற்களின் மேல் நீர் விழுதல்   4. கண்ணைக் கவரும் காட்சி

26. புதிதாகப் பிறந்த குழந்தையிடம் இல்லாதது.
   1. சிவப்பு நிறமான தோல்   2. தலை நிறைய முடி
   3. சிறு பற்கள்   4. நன்றாகப் பார்க்கக்கூடிய கண்கள்

27. மலர்களில் இல்லாதது
   1. விதம் விதமான வடிவங்கள்   2. பல்வேறுபட்ட இதழ்கள்
   3. நீண்ட தண்டு   4. பல்வேறுபட்ட நிறங்கள்

**கீழே முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தானது பிழையாக அமைந்திருப்பதற்குரிய காரணத்தை அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து கோடிடுக.**

28. வெளிச்சமற்ற காட்டு வழியாகத் தடுமாறியபடி பயணம் செய்து கொண்டிருந்த தாத்தா தனது சட்டப் பையிலிருந்த மூக்குக் கண்ணாடியைப் போட்டவுடன் ஒழுங்காக நடந்து சென்றார்.
   1. மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தாலும் இருட்டில் பயணம் செய்ய முடியாது
   2. இருட்டில் சட்டைப் பையிலிருந்து மூக்குக் கண்ணாடியை எடுக்க முடியாது
   3. கண்ணாடி இருந்திருந்தால் பயண ஆரம்பத்திலேயே அவர் அதை அணிந்திருப்பார்.

**முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்தின் அதே கருத்தைத் தரக்கூடிய வாக்கியத்தை அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.**

29. திருடுவதில் ஆர்வமுடைய பிரணவன் குடிப் பழக்கமுடைய சிங்காரத்துடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டான்.
   1. ஜாடிக்கேற்ற மூடியைப் போல
   2. வேப்பிலை மரத்தில் பாகற்கொடி படர்ந்திருந்ததைப் போல
   3. கெடுவான் கேடு நினைப்பான் என்பதைப் போல

# அன்னா ஹசாரே மீண்டும் களத்தில்

## ஆதரவாளர்கள் சிதம்பரம் வீட்டை முற்றுகையிட்டனர்



(டில்லி)

ஊழல் ஒழிக்கும் லோக்பால் மசோதா மற்றும் கறுப்பு பணம் இந்தியாவுக்கு மீட்டு கொண்டு வருதல், ஊழல் அமைச்சர்களை விசாரிக்க வலியுறுத்தல் உள்ளிட்ட விவகாரங்களை முனவைத்து சமூக ஆர்வலரும், தியாகியுமான அன்னா ஹசாரே நேற்று டில்லியில் காலவரையற்ற உண்ணாவிரதம் ஆரம்பித்தார்.

இதேவேளை மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் வசிக்கும் சென்னை வீட்டை அன்னா ஹசாரே ஆதரவாளர்கள் திடீர் முற்றுகையிட்டனர். ஊழல் எதிர் நடவடிக்கைகள் தாமதம் ஏற்படுத் துவதாகவும், ஹசாரேயை விமர்சித்ததற்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாகவும் இந்த போராட்டம் நடந்தது. அமைச்சர் வீட்டு முன்பு கூடி ஆர்ப்பாட்டம் நடத்திய இந்திய ஊழல எதிர்ப்பு அமைப்பினர் கைது செய்யப்பட்டனர்.




டில்லி ஜந்தர்மந்தரில் ஹசாரே ஆதரவாளர்கள் கடந்த 25 ஆம் திகதி முதல் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஹசாரேயின் உடல்நலம் தொடர்பாக அவர உண்ணாவிரதம் இருக்க வேண்டாம் என ஆதரவாளர்கள் கேட்டதற்கிணங்க விரதம் ஆரம்பிக்காமல் இருந்து வந்தார்.

இந்நிலையில் டில்லியில் தாம் கால வரையற்ற உண்ணாவிரதம் இருக்கப் போதவதாக அறிவித்தார். இதற்கென நேற்றுக் காலை மைதானததிற்கு வந்தார் ஹசாரே. இவர் போராட்டத்தில் இறங்கி இருப்பதால் மேலும் இவரது ஆதரவு அமைப்பினர் ஆயிரக் கணக்கில் குவியத்துவங்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று முன்தினம் பிரதமர் வீட்டு மீது இவரது ஆதரவாளர்கள் கல்வீசியதால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்த போராட்டம் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# வடகிழக்கு பகுதியில் நிலநடுக்கம்

(நாமக்கல்)

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மேகலாயாவில் நேற்றுக் காலை ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் அப்பகுதியில் உள்ள கட்டடங்கள் குமுங்கின.

மேகலாயாவின் ஷில்லாங்க் பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவானது.

இந்நிலநடுக்கம் எல்லைப் பகுதியான மியான்மரின் 70 கி.மீ. தொலைவில் மையம் கொண்டு ஏற்பட்டதாகவும் இதன் காரணமாக மேகலாயா, அசாம் மாநில எல்லைப்பகுதிகளில் கட்டடங்கள் குலுங்கியதாகவும் நிலநடுக்க ஆராய்ச்சி மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் உயிர் சேதம், பொருட் சேதங்கள் குறித்த எந்த தகவலும் இல்லை.

# தீவிரவாதிகள் ஊடுருவ எல்லையில் மர்மக்குகை

(புதுடில்லி)

பாகிஸ்தானிலிருந்து தீவிரவாதிகள் எளிதாக ஊடுருவும் வசதியில் அமைத்த மர்மக் குகை யொன்றை இந்திய எல்லைப் பாதுகாப்பு படையினர் கண்டு பிடித்துள்ளது.

ஜம்மு- காஷ்மீர் மாநிலம் சம்பா மாவட்டத்தில் சில்லாயாரி பகுதியில் இந்திய எல்லைப் பாதுகாப்புப்படை வீரர்களுக்கான முகாம் ஒன்று செயற்பட்டு வருகின்றது. இங்கு எல்லைப் பாதுகாப்புப்படையினர் ரோந்து சென்ற போது குகையொன்று இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இக்குகை பாகிஸ்தான் எல்லையில் தொடங்கி இந்தியா வரை பரவிக்கிடக்கிறது. 3 அடி நீளமும், 3 அடி விட்டமும் உள்ள க்குகை, 25 அடி ஆழத்திலும், 400 மீ நீளம் கொண்டது. உடனடியாக எல்லைப் பாதுகாப்புப் படையினர் இக்குகை வழியாக சென்று ஆய்வு நடத்தினர். இது பாகிஸ்தான் எல்லை வரை சென்றதால் தீவிரவாதிகள் ஊடுருவ தோண்டப்பட்டதாக கூறப்படுகிறது.

இதற்கு முன்பு, அப்பகுதியில் மழை பெய்திருந்ததால், குகைக்குள் செல்ல முடியவில்லை. தண்ணீர் வெளியேற்றப் பட்டதும் எல்லைப்பாதுகாப்புப் படையினர் குகைக்குள் நுழைந்து சோதனை நடத்தினர். உள்ளூர் விவசாயிகள் இக்குகை பற்றி விவரங்களை தெரிவித்துள்ளனர்.

தற்போது சோதனை நடந்து வருகிறது. இந்தியாவிற்குள் ஊடுருவும் பொருட்டு, மிக அண்மைக்காலங்களில் கட்டப் பட்டதாக தெரியவருகிறது.

# தே.மு.தி.க.வை உடைக்க சதி

(புதுடில்லி)

தமிழ்நாட்டின் எதிர்க் கட்சியான தே.மு.தி.கவை ஆளுங் கட்சி அ.தி.மு.க உடைக்க சதி செய்ததாகவும் அதை விஜயகாந் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுத்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் மனைவி வழி சொந்தமான சங்கீதா என்ற பெண், இந்த காரியத்திற்கு மூளையாக செயற்பட்டிருக்கிறார்.

இவருக்கும் அதிமுக. எம்எல்ஏ மணிமாறன் என்பவருக்கும் நெருக்கமான நட்பு இருந்ததாக கூறப்படுகிறது. எந்த ஒரு பிரச்சினை தனக்கு வந்தாலும் மணிமாறனையே சங்கீதா அணுகுவார்.

# பிரம்மோஸ் ஏவுகணை பரிசோதனை வெற்றி




(புதுடில்லி)

இந்தியா- ரஷ்யாவின் கூட்டு தயாரிப்பான பிரம்மோஸ் ஏவுகணை, நேற்றுக் காலை வெற்றிகரமாக பரிசோதிக்கப் பட்டது. இந்த ஏவுகணையை கப்பல், நீர்மூழ்கி கப்பல், தரை வழியாக செல்லக்கூடிய வாகனங்கள், விமானங்கள் என அனைத்திலும் பொருத்தி தாக்குதல் நடத்தலாம்.

நேற்றுக் காலை 10.45 மணி அளவில், ஒடிசா மாநிலத்தின் சந்திப்பூர் ஏவுகணை தளத்தில் இந்திய இராணுவ மேம்பாட்டு மையம் சார்பாக இந்த ஏவுகணை பரிசோதிக்கப்பட்டது. இந்த ஏவுகணை 9 மீற்றர் நீளம், 3.9 தொன் எடை கொண்டது. 300 கி.கி. எடை கொண்ட எரிபொருளை சுமந்து 290 கி.மீ. தொலைவில் உள்ள இலக்கை தாக்கும் திறன் கொண்டது. இந்த ஏவுகணை விரைவில் இராணுவம், கப்பல் படையில் சேர்க்கப்பட உள்ளது. இதற்கு முன்பு, கடந்த மார்ச் 28-ஆம் திகதி இதே போன்று பிரம்மோஸ் ஏவுகணை சோதனை வெற்றிகராமக பரிசோதிக்கப் பட்டது குறிப்பிடதக்கது.

# கடவுளின் மீது நம்பிக்கை உண்டு கையொப்பமிட்டால் மட்டும் உள்ளே

திருமலை திருப்பதி வெங்கடாஜலபதி கோவிலுக்கு வரும் இந்துக்கள் அல்லாதோர், தாங்கள் வெங்கடாஜலபதி மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளதாக, இனி உறுதி மொழிப் படிவத்தில் கையெழுத்திட்டுக் கொடுக்க வேண்டும்.

ஆந்திர மாநில அறநிலையத் துறை, இதுதொடர்பாக உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவின்படி, இந்துக்கள் அல்லாதோர் கோவிலுக்குள் நுழையும் முன், தாங்கள் வெங்கடாஜலபதி மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளதாக, உறுதி மொழிப் படிவத்தில் கையெழுத்திட்டு தர வேண்டும் இந்த விதிமுறை, ஏற்கனவே நடைமுறையில் இருந்தாலும், அது பல ஆண்டுகளாக கடுமையாகப் பின்பற்றப்படவில்லை. இனி, அது கடுமையாகப் பின்பற்றப் படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆந்திர மாநில முன்னாள் முதல்வரும், கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவருமான, வைய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டி, சில நாட்களுக்கு முன் திருமலைக்கு வந்த போது, இதுபோன்ற உறுதி மொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்டுக் கொடுக்காமல், கோவிலுக்கு சென்றது சர்ச்சையை எழுப்பியது குறிப்பிடத்தக்கது.

# தொழுநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(புதுடில்லி)

தொழுநோயாளிகள் இல்லாத நாடாக இந்தியா, கடந்த 2005 ஆம் ஆண்டு அறிவிக்கப் பட்டாலும் தற்போது உலகிலேயே இந்தியாவில் தொழுநோய் பாதித்தவர்களின் எண்ணிக்கை 55 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை மெல்ல மெல்ல அதிகரித்து, இப்போது இந்தியா முழுவதும் இந்த நோய் பாதித்தவர்கள் எண்ணிக்கை 1 இலட்சத்து 26 ஆயிரத்து 800 ஆக உயர்ந்திருக்கிறது.

உலகம் முழுவதும் இதன் எண்ணிக்கை 2 இலட்சத்து 28 ஆயிரத்து 474-ஆக உள்ளது. இதனபடி பார்த்தால், உலகிலேயே இந்தியாவில் மட்டும் தொழுநோயால் 55 சதவீதம் பேர் பாதிககப்பட்டுள்ளுதாக வெளியாகியுள்ள தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

இதுபற்றி, சர்வதேச தொழுநோய் ஒழிப்பு அமைப்பின் (ஐ.எல்.யு.) இந்தியாவுக்கான தலைவர் எஸ்.டி. கோகலே கூறுகையில், இந்தியாவில் தொழுநோயால் பாதித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இந்த தகவலை மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது. எனவே இந்தப் பிரச்சினையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பெரும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

# நித்தியானந்தாவின் தீவிர பக்தையாக நடிகை கௌசல்யா



தமிழ் திரையுலகின் 1990 ஆம் ஆண்டுகளில் முன்னணி நடிகையாக திகழ்ந்தவர் கௌசல்யா. திருமலை, சந்தோஷ் சுப்ரமணியம் படங்களில் சிறு வேடங்களில் நடித்து வந்த இவர், தற்போது தொலைக்காட்சி தொடர்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் கௌசல்யாவுக்கு சமீபத்தில் முதுகு வலி ஏற்பட்டது. இதற்காக மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றும் குணமாக வில்லை. நித்யானந்தா ஆசிரமத்தில் ஹீலிங் தெரபி சிகிச்சை பெற்றால் வலி குணமாகிவிடும் என தோழிகள் ஆலோசனை கூறினர். இதையடுத்து நித்யானந்தா ஆசிரமத்துக்கு சென்று வலிக்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

ஹீலீங் தெரபி மூலம் நித்யானந்தா பல நோய்களை குணமாக்குவதாக அவரது சீடர்கள் தெரிவிக்கின்றனர். இது போல் பல்வேறு பிரச்சினைகளுடன் வந்து குணமானவர்கள் நித்யானந்தாவின் சீடராக மாறி உள்ளனர். தியானம்; யோகா கற்று ஆசிரமத்திலேயே தங்கி விடுகிறார்கள். நடிகை ரஞ்சிதாவும் மன அமைதி தேடி ஆசிரமத்துக்கு சென்றார். பின்னர் நித்யானந்தா சீடராக மாறினார். கௌசல்யாவும் அவரைப் போல் நித்யானந்தாவின் பக்தையாக மாறியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# துர்க்கா ஆஞ்சநேயரிடம் சென்றார்




(நாமக்கல்)

தி.மு.க. பொருளாளர் ஸ்டாலினின் மனைவி துர்க்கா, நாமக்கல் ஆஞ்சநேயர் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். நாமக்கல்லில், தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் மாணவ, மாணவியருக்கு பரிசளிப்பு விழா நடந்தது. அந்த விழாவில் பங்கேற்பதற்காக கட்சிப் பொருளாளர் ஸ்டாலின் அவரின் மனைவி துர்க்கா, நாமக் கல் வந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை 11.30 மணியளவில் துர்க்கா கட்சியின் மாவட்ட செயலரான, மத்திய இணையமைச்சர் காந்திச்செல்வன் மனைவி வசந்தியுடன் பிரசித்தி பெற்ற நாமக்கல் ஆஞ்சநேயர் கோவிலுக்கு வந்து வழிபாடு நடத்தி அர்ச்சனை செய்தார்.

அதையடுத்து ஆஞ்சநேயர் கோவில் எதிர்ப்புறம் உள்ள நரசிம்மர் சன்னிதிக்கும் சென்று வழிபாடு நடத்தினார். கோவிலில் ஒரு மணிநேரம் வழிபாடு நடத்திய துர்க்கா, பின் விழா நடந்த ஹோட்டலுக்கு நண்பகல் 12.30 மணிக்கு திரும்பினார்.

# சிரியா புரட்சிப்படைக்கு துருக்கி இரகசிய உதவி



(துபாய்)

சிரியாவில் அதிபர் பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த 1 1/2 வருடங்களாக நடந்து வரும் போராட்டத்தில் இராணுவத்தால் இதுவரை 19 ஆயிரம் பேர் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். போராடும் பொதுமக்களுக்கு ஆதரவாக புரட்சிப் படை களம் இறங்கியுள்ளது. அவர்கள் அதிபர் ஆசாத்தின் இராணுவத்துடன் கடுமையாக போராடி வருகின்றனர்.

தற்போது புரட்சிப் படையினரின் கை ஓங்கி உள்ளது. துருக்கியின் எல்லை ஓர நகரங்களை கைப்பற்றியுள்ளனர். மேலும் தொழில் நகரமான அலிப்போவின் பெரும்பாலான பகுதிகளும் இவர்கள் கைவசம் உள்ளது. இந்த நிலையில் ஆசாத் அரசை எதிர்த்து போர்ரிட்டு வரும புரட்சிப் படைக்கு துருக்கி இரகசிய ஆயுத உதவி புரிவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அமெரிக்க உளவுத்துறை தனது நட்பு நாடான துருக்கியின் அடானாவில் முகாமிட்டு செயற்பட்டு வருகிறது. இது சிரியாவின் எல்லையில் இருந்து 100 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. அதே நேரத்தில், சவுதி அரேபியாவின் துணை வெளியுறவு மந்திரியும், இளவரசருமான அப்துல் லாசீஷ பின் ஆப்துல்லா அல்சவுத் அடிக்கடி துருக்கி சென்று புரட்சி படையின் நடவடிக்கைகளை ஆய்வு செய்து வருகிறார்.

இதற்கிடையே சிரியா புரட்சிப் படைக்கு துருக்கி, சவுதி அரேபியா மற்றும் கட்டார் ஆகிய 3 நாடுகள் ஆயுதங்கள் வழங்கி வருவதாக புகார் எழுந்துள்ளது. அவை ரஷியாவில் தயாரிக்கப்பட்டவை. இதை அமெரிக்கா விரும்பவில்லை என தெரிகிறது. ஆனால், இவற்றை ரஷியாவிடம் இருந்து வாங்கவில்லை என புரட்சிப்படையினர் மறுத்துள்ளனர். சிரியா ஆயுதகிடங்கில் இருந்து கொள்ளையடிக்கப்பட்டவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்



எகிப்து நாட்டில்சுற்றுப்பயணம் மேற்கொண்ட காஸா பிரதமர் இஸ்மாயில் ஹனியே தலைநகர் கெய்ரோவில் புதிய அதிபர் முகம்மது மோர்ஸி(வலது)யை சந்தித்தார்.

# காய்கறி விற்கும்பெண்ணுக்கு விருது



(மணிலா)

பிலிப்பைன்சின் மணிலா நகரில் இருந்து இயங்கி வரும் ரமான் மகசேசே விருது அறக்கட்டளை, சமூக சேவைக்கான விருதை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இந்த விருது நோபல் பரிசுக்கு நிகராக கருதப்படுகிறது. இந்த ஆண்டுக்கான விருதுக்கு 6 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவராக தைவானில் காய்கறி விற்கும் பெண்ணும் தேர்வாகி உள்ளார்.

இதுகுறித்து மகசேசே அறக்கட்டளை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தைவானை சேர்ந்தவர் சென்ஷிச்சு. இவர் காய்கறி விற்று வருகிறார். ஆறாவது வகுப்புவரை மட்டுமே படித்துள்ளார். இவருக்கு வீடு இல்லை. சாலையோரம் உறங்குகிறார். ஆனால், தினமும் காய்கறி விற்று கிடைக்கும் வருமானத்தில், பல்வேறு குழந்தைகளின் அறக்கட்டளைகளுக்கு நிதியுதவி செய்து வருகிறார். இதன் மூலம் தைவான் குழந்தைகளின் எதிர்காலத்தையே மாற்றி அமைத்து வருகிறார். ஆயிரக்கணக்கான குழந்தைகள், சென்னுடைய நிதியுதவியில் படித்துள்ளனர். இதுவரை ரூ.1.25 கோடிக்கு குழந்தைகளுக்கு நிதியுதவி செய்துள்ளார்.


நூலகங்கள் கட்டவும், இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படுபவர்களுக்கும் இவர் தொடர்ந்து உதவிகள் செய்து வருகிறார். இவருடைய சிறந்த சமூக சேவையை பாராட்டி மகசேசே விருது வழங்கப்படுகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து சென் கூறுகையில், "மற்றவர்களுக்கு உதவி செய்யும் போது சந்தோஷமாக இருக்கிறது என்கிறார்.

# எச்.ஐ.வி. நோயை குணப்படுத்தும் முதற்கட்ட ஆய்வில் வெற்றி

எச்.ஐ.வி வைரஸை முழுமையாக குணப்படுத்தக்கூடிய சாத்தியப்பாட்டிற்கான முதல் படியை தாங்கள் எட்டியிருப்பதாக அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்திருக்கிறார்கள். எச்.ஐ.வி வைரஸானது மனித உடலுக்குள் புகுந்ததும் உடனடியாக தாக்குவதில்லை. மனித உடலில் சில செல்களுக்குள் புகுந்துகொண்டு செயற்படாமல் மறைந்து ஒளிந்து கொள்கிறது. இப்படியான நிலையில் இந்த எச் ஐ வி வைரஸானது பல ஆண்டுகள் மறைவாக இருக்க முடியும்.

இப்படி செல்களுக்குள் புகுந்து கொண்ட நிலையில் இருக்கும் எச்.ஐ.வி வைரஸை கண்டுபிடிக்கவே முடியாது.



மறைந்திருக்கும் எச்.ஐ.வி வைரஸை பலவந்தமாக வெளியே கொண்டு வந்து, அதை தாக்கி அழிக்க முடியும் என்று இந்த ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகள் நேச்சர் என்கிற விஞ்ஞான சஞ்சிகையில் தெரிவித்திருக்கிறார்கள். புற்று நோய்க்கான மருந்தாக பயன்படுத்தப்படும் மருந்துகளில் ஒன்று ஒரினோஸ்டாட். இந்த மருந்தை எச் ஐ வி தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு கொடுப்பதன் மூலம், செல்களுக்குள் மறைந்திருக்கும் எச் ஐ வி வைரஸ் பலவந்தமாக அந்த செல்களில் இருந்து வெளியேற்றப்படுகிறது. இப்படி வெளியே வந்த செல்களை ஆண்டி ரெட்ரோ வைரல் மருந்துகள் தாக்கி அழித்துவிடுகின்றன.

மறைந்திருக்கும் எச்.ஐ.வி வைரஸை குறிவைத்து தாக்கவும், காலப்போக்கில் அழிக்கவும் கூடிய வழிகளை நாம் கண்டறியத் தொடங்கியிருக்கிறோம். இப்படி ஒரு மனிதனின் உடலில் மறைந்திருக்கும் எச் ஐ வி வைரஸ்கள் அனைத்தையும் நாம் அழித்துவிட்டோமானால், நாம் அந்த நபரை எச்.ஐ.வி வைரஸ் தொற்றிலிருந்து முழுமையாக குணப்படுத்திவிட்டோம் என்று கூறமுடியும் என்கிறார் டேவிட் மார்கோலிஸ். உலகம் முழுவதும் எச் ஐ வி வைரஸால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கானவர்களுக்கு இது மிகப்பெரிய நம்பிக்கையளிக்கும் செய்தியாக இருக்கும் என தெரிகிறது்.

# கச்சா எண்ணெய்தாங்கிகளுக்கு காப்புறுதி வழங்க ஈரான் முடிவு

(டெஹ்ரான்)

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஈரானுக்கு பொருளாதார தடை விதித்துள்ளதால், ஏற்றுமதி செய்யும் கச்சா எண்ணெய் தாங்கிகளுக்கு காப்புறுதி வசதி வழங்க ஈரான் முடிவு செய்துள்ளது.

இந்தியா உட்பட பல்வேறு நாடுகளுடன் பல கோடி மதிப்பிலான கச்சா எண்ணெய் ஏற்றுமதிக்கான ஒப்பந்தங்களை ஈரான மேற்கொண்டுள்ளது. இந்நிலையில், அணு ஆயுதங்களை தயாரித்து வருவதாகக் கூறி, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஈரானுக்கு பொருளாதாரத் தடை விதித்துள்ளன. இது கடந்த 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது. இதனால், ஈரானிலிருந்து கச்சா எண்ணெய் ஏற்றுமதி 40 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 25 லட்சம் பீப்பாய்களாக இருந்த கச்சா எண்ணெய் ஏற்றுமதி, பொருளாதாரத் தடைக்குப் பிறகு 15 லட்சம் பீப்பாய்களாகக் குறைந்து



உள்ளது. அதாவது, ஈரானிலிருந்து ஏற்றுமதியாகும் 90 சதவீத கச்சா எண்ணெய் தாங்கிகளுக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் காப்புறுதி வழங்கி வந்தன.

இப்போது அவை இன்சூரன்ஸ் வழங்குவதை நிறுத்திக் கொண்டதால் ஏற்கனவே ஒப்பந்தம் செய்து கொண்ட நாடுகளுக்கும் கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், தனது 47 கச்சா எண்ணெய் தாங்கிகளுக்கும் இன்சூரன்ஸ் செய்துதர ஈரான் முடிவு செய்துள்ளது. எனினும், பொருளாதாரத் தடை என்பது நிதி நிறுவனங்களுக்கும் பொருந்தும் என்பதால், விபத்து ஏதேனும் ஏற்பட்டால் அதற்கான இழப்பீட்டை மற்ற நாடுகளுக்கு ஈரான் எப்படி வழங்கும் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

# சாட்சியத்தை பதிவு செய்ய பாக்.நீதிமன்றம் மறுப்பு

(இஸ்லாமாபாத்)

மும்பைத் தாக்குதல் சம்பவத்திற்கு பாகிஸ்தானில் இருந்து உதவியதாக 7 தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இதுபற்றி பாகிஸ்தானில் இருந்து இந்தியா வந்த நிபுணர் குழுவினர் அறிக்கை அளித்துள்ளனர். ஆனால் அந்த அறிக்கையை சாட்சியாக ஏற்கமுடியாது என ராவல்பிண்டி நீதிமன்றம் மறுத்ததால் விசாரணையில் பின்னடைவு ஏற்பட்டது.

இந்நிலையில் இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பு வழக்கறிஞர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர். இதனால் 2 சாட்சிகளின் வாக்குமூலத்தை பதிவு செய்ய நீதிமன்றம் மறுத்துவிட்டது. ராவல் பிண்டி சிறையில் மூடிய அறைக்குள் இரண்டு சாட்சிகளிடம் குரல் மூலம் வாக்குமூலத்தை பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஹக்கானி தீவிரவாத இயக்கம்; அமெரிக்கா அறிவிப்பு

(ஹக்கானி)

ஹக்கானி அமைப்பை வெளிநாட்டு தீவிரவாத இயக்கமாக அறிவிக்க வேண்டுமென அமெரிக்க நாடாளுமன்ற செனட்டில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அதிபர் பராக் ஒபாமாவின் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மசோதாவை சட்டமாக்க அதிபர் உடனடியாகக் கையெழுத்திட வேண்டும் என்று உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹக்கானி அமைப்பு வெளிநாட்டு தீவிரவாத இயக்கமாக அறிவிப்பது குறித்து ஒரு மாத காலத்துக்குள் முடிவெடுக்க வேண்டும். ஒருவேளை தவறும் பட்சத்தில், பாகிஸ்தானைச் சேர்ந்த ஹக்கானி அமைப்பு அமெரிக்காவில் நிதி ஆதாரங்களைத் தொடர்ந்து திரட்டிக் கொள்ள வாய்ப்புள்ளது.ஹக்கானி அமைப்பு பயங்கரவாத இயக்கம் 2012 எனும் சட்டம் நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களால் இந்த மாதத்தின் தொடக்கத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஹக்கானி அமைப்பை வெளிநாட்டு பயங்கரவாத இயக்கமாக அறிவித்து கடந்த ஆண்டே மசோதா நிறைவேற்றப்பட்டது. ஆனால் மசோதாவில் சில மாற்றங்களை பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் கொண்டு வந்தனர். இதையடுத்து மசோதா மீண்டும் செனட்டில் நிறைவேற்றப்பட்டது.

உளவுத்துறை தேர்வுக்குழுவின் தலைவர் மைக் ரோஜர்ஸ் கூறுகையில், நாடாளுமன்றத்தின் இரு அவை உறுப்பினர்களும் இந்த மசோதாவை ஒரு மனதாக நிறைவேற்றியுள்ளது தீவிர வாதத்திற்கு எதிராக எடுக்கப்பட்ட ஒரு சிறந்த நடவடிக்கையாகக் கருதப்படுகிறது என்றார்.

# காரைநகரில் புத்துயிர் பெறும் வேணனன் அணைக்கட்டு

(காரைநகர்)

அமரர் கலாநிதி ஆ.தியாகராஜா நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அவரது சிந்தனையில் உருவான வேணனண் அணைக்கட்டு 1970 ஆம் ஆண்டு அன்றைய யாழ். அரசாங்க அதிபராக இருந்த வேணனண் அபயசேகரவின் தலைமையில் அரச நிதியில் இந்தக் கட்டுமானப்பணி நடந்தது.

பின்னர் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தம், பராமரிப்பு இன்மையால் சிதைந்து போயிருந்தது. அதனால் அந்தப் பகுதிக் கிணறுகள் மற்றும் நன்னீர் தேக்கங்கள் யாவும் உவர்நீராக மாறியுள்ளது. மக்கள் நன்னீருக்கு சுன்னாகம் போன்ற பிரதேசங்களிலே குடிநீரை பவுசர் மூலம் பெற்று வருகின்றனர்.

இவற்றைக் கருத்திற்கொண்டு மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வேணனண் அணைக்கட்டு புத்துயிர் பெறுகின்றது. பாரிய இரண்டு குளங்களும் அமைக்கப்படுகின்றது யாவரும் அறிந்ததே.



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத்திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் நடைபெறுகின்றது. புனரமைப்புக்கு சுமார் 29 மில்லியன் நிதியில் இந்த மீள் புனர்வாழ்வு நடைபெறுகின்றது. சுமார் ஐந்தரை கிலோ மீற்றர் நீளம் கொண்டது. இதில் ஒரு கிலோ மீற்றர் நீளம் சீமெந்துச் சுவரினால் அமைக்கப்பட்டு வருகின்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# ஐ.தே.க. பிரமுகர்கள் கட்சி தாவும் நிலையில்



(கொழும்பு)

இன்னும் சில தினங்களில் ஐ.தே.க.வில் இருந்து பலர் அரசாங்கத்தில் இணைந்து கொள்வார்கள் என்று ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் மேலும்பேசிய அவர், எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் பல தேர்தல்களுக்கு முகம் கொடுக்க ஆயத்தமாக இருக்குமாறு பணித்தார்.

இதேநேரம், கட்சித் தலைவர் பதவி ஆறு ஆண்டுகள் என்ற தீரமானத்தை இரத்து செய்தல் உட்பட்ட தனது நிபந்தனைகளுககுத் தகுந்த பலன் கிட்டாது விட்டால் தனது எதிர்கால அரசியல் பற்றி தீர்மானம் எடுக்கவேண்டி வரும் என்று குருணாகலை மாவட்ட ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறுகின்றார்.

எவ்வாறாயினும் வரவிருக்கும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்தின் சார்பில் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட தயாசிறி ஜயசேகர பேச்சுவார்த்தை நடத்தியதாக இதற்கு முன்னர் செய்திகள் அடிபட்டமை தெரிந்ததே.

இதேவேளை, இம்முறை மாகாண சபைத் தேர்தலில் அர்ப்பணிப்புடன் செயற்படாதவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரித்திருக்கிறார்.

# சட்டவிரோத கடற்பயணம் 51 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

நீர்கொழும்பிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்ல முயன்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட 51 பேரையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு பிரதான நீதவான் ஏ.என்.எம்.பி.அமரசிங்க நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முற்படுவதாக கடற்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து 31 பேர் நீர்கொழும்பு கடற்பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை கைதுசெய்யப்பட்டனர்.



இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போது மற்றுமொரு குழுவினர் அவுஸ்ரேலியா செல்லும் முகமாக குறித்த படகில் ஏறுவதற்கு நீர்கொழும்பிலுள்ள வீடொன்றில் காத்திருந்ததாக தெரியவந்தது. இதனையடுத்து அவ்வீட்டிலிருந்த 20 பேரும் கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கில்...

பிரதேசங்களில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் இல்லங்களில் தங்க வைக்கப்படவுள்ளதாக கோத்தாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாகவும் அரசிடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தொடர்பாகவும் இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் உலகின் எந்தவொரு நாட்டிலிலும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை எனவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(சாவகச்சேரி)

கைதடி தெற்கு சனசமூக நிலைய 57 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக் கழகம் கரப்பந்தாட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகளை நடத்தவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டம் வடமாகாண ரீதியாக கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டம் என இரு பிரிவுகளாக வடமாகாண ரீதியான சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் மின்னொளி விளையாட்டுக் கழக நிர்வாகத்தினருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## சூடுபிடிக்கிறது...

வருகின்றது. தமக்குக் கிடைக்கும் அனைத்து முறைப்பாட்டிற்கும் உடனடி விசாரணை நடத்தப்படும் எனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

## திருப்பி...

வரையான தமிழர்களின் புகலிடக் கோரிக்கையில் எந்தவொரு நியாயமான காரணமும் இல்லை என சுவிஸ் அரசாங்கம் கூறியுள்ளது.

## வடக்கு...

நடத்துவதற்கு முனைப்பு காட்டிவருகின்றது.

இதேவேளை, வடமாகாண சபைத் தேர்தலின் முதலமைச்ர் வேட்பாளராக ஆளும் கட்சி சார்பில் யாரை நிறுத்துவது என்பது தொடர்பில் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது என்று தெரிய வருகின்றது.

## அரியாலையில்...

வருவதாகவும் யாழ் பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

## தமிழ்...

அந்த கட்சியின் செயலாளர் நாயகம் ஹசன் அலி, தமிழ், முஸ்லிம் ஆகிய இரண்டு இனங்களும் இலங்கையின் சிறுபான்மை இனங்கள் என்பதால், அந்த இரண்டு இனங்களுக்கு சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

# கொற்றாவத்தை முருகன் அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொற்றாவத்தை அயிட்டியபுலம் அருள்மிகு ஸ்ரீமுருகமூர்த்தி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 24 ஆம் திகதி ஆரம்பித்து இடம்பெற்று வருகின்றது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் இன்று வசந்தோற்சவமும் நாளை மாலை 4.00 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், நாளை மறுதினம் மாலை 7.00 மணிக்கு சப்பறத் திருவிழாவும், முதலாம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு இரதோற்சவமும், 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு தீர்த்தோற்சவமும், 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணிக்கு பூங்காவனமும் நடைபெறும்.

வேட்டைத் திருவிழாவுக்காக சுவாமி கொற்றாவத்தை செட்டிதறை சித்திவிநாயகர் ஆலயம் நோக்கி மாலை 4.00 மணிக்கு புறப்பட்டுச் செல்வார்.

தீர்த்தோற்சவத்துக்காக பெருமான் காலை 6.00 மணிக்கு பொலிகண்டி இந்து சமுத்திரம் நோக்கி செல்வார் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (116)

# நலிவுற்றோருக்கு வீட்டுத் திட்டம்

(முல்லைத்தீவு)

சமூக சேவைகள் அமைச்சினால் அங்கவீனமான நபர்களுக்கு வீட்டினை நிர்மாணிக்கும் விசேட செயற்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் வீட்டினை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இன்று நடைபெறவுள்ளது.

இதில் விசேட நிகழ்வு இன்றையதினம் காலை 10.30 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, சமூக சேவைகள் அமைச்சின் பிரதி அமைச்சர் சந்திரஸ்ரீ சூரியாராச்சி, சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதன் பின்னர் சமூக சேவைகள் அமைச்சர் இதற்கான அடிக்கல்லை நாட்டி வைப்பார். (04)

# தற்காலிக வீடமைப்பு கோம்பாவிலில் பயனாளிகள் தெரிவு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் தற்காலிக வீட்டுக்காக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை கோம்பாவில் கிராம அலுவலர் அலுவலகத்திற்கு சமூகம் தராதபடியால் கீழ்க் குறிப்பிடப்படும் பெயர்களை உடையவர்கள் இன்று காலை 11.00 மணிக்கு கிராம அலுவலர் அலுவலகத்திற்கு சமூகம் தரும்படியும் தவறும்பட்சத்தில் பெயர்கள் நீக்கப்பட்டு அவ்விடத்திற்கு வேறு பயனாளிகள் தெரிவுசெய்யப்படுவார்கள் என டி.ஆர்.சி நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் விபரம் வருமாறு,

சி.ரவீந்திரகுமார், ந.மனோன்மணி, முத்துக்கணேஷ், மங்கையற்கரசி, செ.கோகுலதீபன், யோ.தபேந்திரா, பு.கு.உலகேஸ்வரி (138)

# ஆஸி. சென்ற படகு விபத்தில் சிக்கியது

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவிற்கு செல்ல முற்பட்டு கடலில் விபத்துக்குள்ளாகி தத்தளித்துக் கொண்டிருந்த 28 பேர் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர். இலங்கையிலிருந்து 300 மீற்றர் கடல் மைல் தூரத்தில் இவர்கள் சென்ற படகு விபத்துக்குள்ளாகியுள்ளதாகக் கடற்படை ஊடகப் பேச்சாளர் வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இவர்கள் நேற்று அதிகாலை காலி கடற்கரைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் கடந்த 13 ஆம் திகதி வாழைச்சேனை பிரதேசத்தில் இருந்து அவுஸ்ரேலியாவிற்கான பயணத்தை ஆரம்பித்துள்ளனர். இவர்களில் பெண்கள் நால்வரும் சிறுவன் ஒருவரும் அடங்குவதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

## கிழக்கில் முஸ்லிம்...

மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது என்றும் வற்புறுத்தி வருகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் இன்று வரையான 60 ஆண்டுகளில் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் எமது இனப்பிரச்சினை சர்வதேசத்தின் கண்காணிப்பை மிக வேகமாகத் தற்போது பெற்றுள்ளது. நடந்து முடிந்த இறுதி மோதல்களில் பல்வேறு கணிப்பீடுகள் கூறுவது போன்று பல பத்தாயிரம் மக்கள் கொல்லப்பட்டனர். பல ஆயிரக்கணக்கானவர்கள் அங்கவீனமுற்றனர்.


நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளான இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படல், அதிகபட்ச அதிகாரத் தீர்வு மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணல் என்ற விடயங்கள் இப்போது சர்வதேசத்தின் மூலம் அழுத்தமாக இலங்கை அரசாங்கத்திற்கு கூறப்பட்டு வருகின்றது.

அது மட்டுமன்றி இந்த சிபார்சுகளை எவ்வாறு அமுல்படுத்துவது என்பது பற்றிய திட்டத்தை இலங்கை அரசாங்கம் விரைவில் சர்வதேசத்திடம் முன்வைக்க வேண்டும் என்ற அழுத்தமும் ஏற்பட்டுள்ளது. இத்தகைய நிலையில் தான் தற்போதைய கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வந்துள்ளது என்றும் சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

நகர சபை, யாழ்ப்பாணம்.



# அரச ஊடகங்கள் மீது சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையில் ஊடக நிறுவனங்கள் அழுத்தங்கள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலே இயங்கி வருவதாகவும், ஊடகங்களின் மீது அடக்குமுறைகளை பிரயோகிக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு கிடையாது எனவும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் என்பது நாட்டு மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டும். ஆளும் அரசாங்கத்திற்கு நன்மை ஏற்படக் கூடிய வகையில் ஊடகங்கள் செயற்படத் தேவையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆளும் கட்சியின் நலனை உறுதி செய்யும் வகையில் ஊடகங்களை கட்டுப்படுத்த அனுமதிக்க முடியாது ஊடகங்கள் சுயாதீனத்தன்மையுடன் இயங்க வேண்டியது அவசியமானது எனினும், தற்போதைய ஊடகங்களில் சுயாதீனத்தன்மையை காண முடியவில்லை.

அழுத்தங்கள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலே இலங்கையில் ஊடக நிறுவ்னங்கள் இயங்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அரச ஊடகங்கள் ஆளும் கட்சி அமைச்சர்களினதும், அவர்களது உறவினர்களினதும் பிரச்சாரத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

(கொழும்பு)

ஹபறணை பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை 5.45 மணியளவில் வயலுக்குச் செல்லும் போது இவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 43 வயதுடைய ஒருவர் என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபறணை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## 'பிட்டுக்கு மண் சுமந்த' பாடல் புலிப்பாட்டானது

(வடமராட்சி)

வடமராட்சி கெருடாவில் பகு தியில் உள்ள ஆலயம் ஒன்றில் ஒலிபரப்பப்பட்ட பக்திப் பாடல் சர்ச்சைக்குரிய பாடல் என வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கெருடாவில் கொண்டலடி ஸ்ரீ ஞான வைரவர் கோவில் வருடாந்த உற்சவம் கடந்த 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது இதில் பக்திப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன.

அன்றைய தினம் பாடகர் எஸ்.பி.சாந்தனின் சொந்தக் குரல் பாடலான "பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார்" என்ற பக்திப் பாடல் ஒலி பரப்பப்பட்டதையடுத்து அந்தப் பாடல் புலிகளின் பாடல் என அப்பகுதி வாசி ஒருவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்தே ஆலய நிர்வாகத்தினரை அழைத்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டிருந்ததாகவும் தெரியவருகின்றது. மேற்படி முறைப்பாட்டைச் செய்திருந்தவர் முன்னாள் புலி உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (116)

## துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி பலி

பொலிஸ் அதிகாரி ஒருவரது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். நெலுவ பொலிஸ் பிரிவிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் தேடிச் சென்ற போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உயிரிழந்த பொலிஸ் அதிகாரி மாத்தறை பிரதேசத்[illegible] சேர்ந்த 51 வயதுடைய ந[illegible] பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கத்திக் குத்துக்கு பாடசாலை அதிபர் பலி

(கொழும்பு)

கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்ட நிலையில் பாடசாலை அதிபர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார். காலி, யக்கல்ல முள்ள, மினுவந்தெனிய கனிஷ்ட வித்தியாலய அதிபரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த அதிபரின் மகனுக்கும் பிறிதொரு குழுவிற்கும் இடையில் சச்சரவு மூண்டுள்ளது. இதன்போது அதிபர் நபர் ஒருவரை தாக்கியுள்ளார். இந்நிலையில் அக்குழுவைச் சேர்ந்தவர்கள் கூரிய ஆயுதங் கொண்டு அதிபரை தாக்கியுள்ளனர். இக்குழுவினர் அதிபரின் வீட்டிற் புகுந்து தாக்குதல் நடத்தியதில் அவரின் மகன் காயமடைந்துள்ளார்.

## அரசுடன் இணைய மாட்டேன் தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அரசாங்கத்துடன் இணைந்து கொள்வது தொடர்பில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பாக நேற்று அஸ்கிரிய மற்றும் மல்வத்தை மகாநாயக்கர்களை அவர் சந்தித்த போது கேள்வியெழுப்பப்பட்டது. எனினும், அவ்வாறான தீர்மானங்கள் எதனையும் தாம் மேற் கொள்ளவில்லை என தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் நெருக்கடி எழுந்துள்ள நிலையில் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள எத்தனிப்பது கட்சி ஆதரவாளர்களை அநாதரவாக்கும் செயற்பாடு என மல்வத்தை மகாநாயக்கர் ஸ்ரீசுமங்கல தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, நாடாளு[illegible] உறுப்பினருடன் பேசிய [illegible]ரிய மகாநாயக்கர் உடுகம[illegible] புத்தரக்கித்த தேரர், அவசர தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டாம் என தயாசிறி ஜயசேகரவுக்கு அறிவுறுத்தினார்.

அரசியலில் ஈடுபடுவதற்கு முடியாத நிலையேற்பட்டால்? வயல் உழுமாறும், அல்லது வழமையான தொழிலான சட்டத்தரணி பணியில் ஈடுபடுமாறும் தேரர் வலியுறுத்தினார். இதனிடையே, தாம் இறக்கும் வரை வடமத்திய மாகாணத்தின் முதலமைச்சராக செயற்படவுள்ளதாக முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திசாநாயக்க தெரிவித்துள்ளார். கெக்கிராவ பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

## 600 கிலோ கிராம் கஞ்சாவுடன் இரண்டு பேர் கைது

(கொழும்பு)

கம்பேகமுவ பிரதேசத்தில் 600 கிலோகிராம் கஞ்சா வைத்திருந்த இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இருவர்களில் ஒரு சந்தேக நபரிடமிருந்து 513 கிலோகிராம் கஞ்சாவும் மற்றவரிடமிருந்து 93 கிலோகிராம் கஞ்சாவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

## குற்றமிழைத்த பொலிஸார் வீட்டுக்கு அனுப்பப்படுவர்

(கொழும்பு)

குற்றச் செயல்களில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி நீக்கப்படுவர் எனப் பொலிஸ் மா அதிபர் என். கே. இளங்கக்கோன் தெரிவித்துள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஊழல் மோசடிகள், நிதி மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகக் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குற்றச் செயல்களில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நீக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

சாதாரண உத்தியோகத்தர்கள் முதல் உயர்அதிகாரிகள் வரையில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வாய்புற்று நோயினால் தினசரி இருவர் மரணம்

இலங்கையில் வருடாந்தம் சுமார் இரண்டாயிரம் பேர் வரை வாய்ப்புற்று நோயினால் பாதிக்கப்படுகின்றனர் என சுகாதார கல்விப் பணியகம் தெரிவிக்கிறது. ஆட்கொல்லி நோயான இந்நோயினால் தினசரி இருவர் வீதம் மரணிக்கின்றனர் எனவும் தெரிய வந்துள்ளது. வாய்ப்புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானோர் ஆண்களாகவே இருக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புகைத்தல், போதைப்பொருள் பாவனை, வெற்றிலை சாப்பிடுதல் போன்ற காரணங்களினாலேயே இந்த வாய்ப்புற்று நோய் ஏற்படுகின்றது. இந்நோயுக்கான ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிந்து சிகிச்சை பெற்றால் இந்நோயை முற்றாகக் குணப்படுத்த முடியும் என்றும் சுகாதார கல்விப் பணியகம் நம்பிக்கை தெரிவிக்கிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி இரட்ணசபாபதி இராஜேஸ்வரி

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த இரட்ணசபாபதி (அப்பாத்துரை) இரா்ஜேஸ்வரி (இராத்தி) நேற்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

சீர்கோ ஒழுங்கை,
உப்புமடம் சந்தி,
கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில் மேற்கு.

(C/1630)

தகவல்
குடும்பத்தினர்.

## ஆதரவாளர்களிடையே மோதல் வைத்தியசாலையில் ஒருவர் அனுமதி

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தின் புஸல்ல பகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாகக் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பான வன்முறையில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முதலாவது சம்பவம் இதுவாகும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

தேர்தலுக்கான சுவரொட்டிகள் மற்றும் பதாதைகள் தொடர்பாகவே இம்மோதல் ஏற்பட்டதாகவும் இதில் ஆளுங் கட்சி அமைச்சர்கள் இருவரின் உறவினர்களும் சம்பந்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை தவிர இதுவரை குறிப்பிடத்தக்க வேறு வன்முறைகள் எதுவும் இடம் பெறவில்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறினார்.

எந்தத் தேர்தலிலும் விருப்பு வாக்கு தொடர்பாக உட்கட்சி மோதல்கள் தீவிரமடைவது வழமை எனவும் இவற்றை தடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.